Registered as a Newspaper in Srilanka

# முஸ்லிம் குரல்

Muslim Kural صوت المسلم මුස්ලිම් කුරල්

☆ 01 ஆகஸ்ட் 2003 - வெள்ளிக்கிழமை ☆ 3 ஜமாதுல் ஆகிர் - 1424 ☆ கவடு - 16 ☆ தருகை - 15 ரூபா

## களத்தில் உயிர்நீத்த சுஹதாக்களை மறக்கத்தான் முடியவில்லை!




# 1990

# இரத்தமும் கண்ணீரும் நிறைந்த கிழக்கில் முஸ்லிம்கள் மீதான புலிகளின் வெறியாட்டம்!

# வடக்குத் தாயகத்திலிருந்து முஸ்லிம்கள் இனச் சுத்திகரிப்பு!!

அர்ப்பணிப்புக்களும் இழப்புக்களும் இன்றிப் போராட்டமும் இல்லை. போராட்டத்தில் வெற்றிகளும் இல்லை. ஒவ்வொரு இழப்பும் அர்ப்பணிப்பும் அடுத்த கட்டப் போ ராட்டதிற்கான அடிக்கற்களாகவும் வித்துக்களாகவும் விழுதுகளாகவும் மாறுகின்றன. ஒரு சுதந்திரப் போராட்டமானது பல்வேறு போராட்ட வழிமுறைகளைக் கோரி நிற்கின்றது. போராட்ட வழிமுறைகளுக்கு ஏற்ப மக்களின் அர்ப்பணிப்புக்களும் தியாகங்களும் பல்வகைத் தன்மையைப் பெறுகின்றன.

1985ம் ஆண்டுக்குப் பின்னர், வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் மீதான மோசமான அடக்குமுறைகளானது ஆயுதமேந்திய தமிழ் மேலாதிக்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டமானது கறைபடிந்த பாதைக்குள் தன் காலடியை எடுத்து வைக்கின்றது. எதிரிகள் எங்கோ இருக்க, யாரோவாக இருக்க, விடுதலை அமைப்புக்கள் முஸ்லிம்களை எதிரிகளாக வகுத்துக் கொண்டு தம் துப்பாக்கிகளைத் திருப்பியது. வடக்கு கிழக்கு எங்கும் முஸ்லிம்களுக்கு எதிரான கொடுமைகள், அடாவடித்தனங்கள் நெருப்பாகப் பற்றி எரிகின்றது. இந்த நெருப்பானது முஸ்லிம்கள் மத்தியில் முஸ்லிம் தேசிய வேட்கையை மூட்டி விடுகின்றது. மிக வேகமாக முஸ்லிம்கள் தமது சொந்த அரசியல் தலைமையை, தமது சொந்த அரசியல் இயக்கத்தை தாபித்துக் கொள்கின்றனர். தமது அரசியல் தலைவிதியைத் தாமே தீர்மானிக்கப் புறப்பட்டு விடுகின்றனர். இக்கடினமான பாதையில் மறுபடியும் மறுபடியும் முஸ்லிம்களின் உயிர்கள், உடமைகள் காவுகொள்ளப்படுகின்றன, பறிக்கப்படுகின்றன. பிரதேச எல்லைகள் இன்றி, வர்க்க ஏற்றத் தாழ்வுகள் இன்றி முஸ்லிம்களின் உயிர்கள் ஸஹீதாக்கப்படுகின்றன. பறிக்கப்படுகின்றன. நமது மக்கள் இனச்சுத்திகரிப்புக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

இந்த அர்ப்பணிப்புக்கள், தியாகங்களின் மீது முஸ்லிம்களின் அரசியல் இயக்கம் மேலும் மேலும் வலுவாகக் கட்டியெழுப்பப்படுகின்றது. முஸ்லிம்களின் அரசியல் தனித்துவமானது தேசிய அளவிலும், சர்வதேசிய அளவிலும் கொண்டு செல்லப்படுகின்றது. இவ்வாறான பாய்ச்சல்களுக்குக் காரணமான சொந்த மக்களினது தியாகங்களும் அர்ப்பணிப்புகளும் உடனுக்குடன் வேகமாக மறக்கப்படுகின்றது. அதாவது நமது அரசியல் கட்சிகளுக்குள்ளும் அரசியல் தலைமைக்குள்ளும் சுயநல சக்திகளின் கைகள் மேலோங்கத் தொடங்கியதுடன் இந்த மறத்தல் மோசமான நிலையை எட்டுகிறது. தீவிரமான போராட்டப் பண்பினை நமது அரசியல் இயக்கம் விரைவாக இழந்து விட்டதற்கு இந்த உன்னத தியாகங்களின் மறத்தலும் முக்கிய பங்கினை ஆற்றுகிறது.

இன்று நிலைமைகள் தலைகீழாகி விட்டது. முஸ்லிம்களின் அரசியல் தலைமைகள் என வேசமிட்டவர்களைப் புறமொதுக்கி நமது மக்களால் அர்ப்பணிப்புக்களும் தியாகங்களும் மறுபடியும் நினைவு கூரப்படுகின்றன. அவற்றின் அரசியல் முக்கியத்துவம் முன்னெப்போதையும் விட உரம் பெறுகின்றது. புதிய தலைமுறையினரின் உள்ளங்களில் அரசியல் தீப்பற்றலை ஏற்படுத்தி வருகின்றது. புலிகளால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட வடக்கு முஸ்லிம்கள் மீதான இனச்சுத்திகரிப்பு, காத்தான்குடிப் படுகொலை, ஏறாவூர் கொடூரம், அழிஞ்சப்பொத்தான கிராம அழிப்பு, அக்கரைப்பற்று வயல் படுகொலை என அடுக்கடுக்காக நமது மக்களின் தியாகங்களும் அர்ப்பணிப்புக்களும் உயிருடன் உள்ள நமது மக்களால் நினைவு கூரப்படுகின்றன. இவ்வாறான நினைவு கூரலை திட்டமிட்டுத் தடுத்து வந்த நமது அரசியல் தலைமைகள், இன்று ஓரங்கட்டப்பட்டு வருகின்றனர். கழித்துக் கட்டப்பட்டு வருகின்றனர். துரோகிகளாகி நமது எதிரிகளுடன் கைகுலுக்கிக் கொண்டிருந்தவர்கள் அடையாளங்காணப்பட்டு வருகின்றனர்.

நமது மக்களின் தற்போதைய புத்தெழுச்சியானது, நம்மைக் கொல்வதையும் கொள்ளையிடுவதையும், நம் மீது கொடுமைகளை இழைப்பதையும் தொழிலாக்கி வரும் புலிகளின் மேலாதிக்கத்தினை ஆட்டங்காணச் செய்துள்ளது. அரசியல் அச்சங் கொள்ளச் செய்துள்ளது. அதனால் இவ்வாறான நினைவு கூரல்களையும், துன்பதின அனுஷ்டிப்புக்களையும் தடுத்து நிறுத்துவதும் தாக்குதல் நடாத்துவதும் போராட்டத்தின் ஒரு புனிதக் கடமையாக புலித் தலைமைகள் தமது இளம் விடுதலைப் போராளிகளுக்கு பாடம் சொல்லிக் கொடுக்கின்றது.

அவர்கள் 58 இல் தமிழ் மக்கள் மீதான வன்முறையை நினைவு கூருகின்றார்கள். 74 தமிழாராய்ச்சிப் படுகொலையை நினைவு கூருகின்றார்கள், 83 கருப்பு ஜூலையை நினைவு கூருகின்றார்கள், வெலிகடைப் படுகொலையை, பிந்துனுவெவவை, தமது ஆயிரக்கணக்கான போராளிகளின் அர்ப்பணிப்புக்கள் தியாகங்களை எல்லாம் நினைவு கூருகின்றார்கள். வருடா வருடம் கொண்டாடுகின்றார்கள். ஆனால் அவர்களால் முஸ்லிம் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளையும் படுகொலைகளையும் இனச் சுத்திகரிப்பையும் நினைவு கூர்வதைக் கண்டு முகம் சுளிக்கின்றார்கள். தடுத்து நிறுத்தப் படாதுபடுகின்றார்கள். மறந்து விடுமாறு அச்சுறுத்திக் கேட்கின்றார்கள். கடந்த காலத்தை மறப்போம் என்று சர்வதேச பத்திரிகையாளர்களைக் கூட்டி அழைப்பு விடுகின்றார்கள். <u>உங்கள் இழப்புகள் எதனையும் நீங்கள் மறக்கமாட்டீர்கள், எங்கள் இழப்புக்கள் அனைத்தையும் நாம் மறந்து விட வேண்டும்.</u> இது என்ன நியாயம்? .இது என்ன தார்மீகம்? இதில் எங்கே துளியாவது நீதி இருக்கின்றது? எங்களை இருட்டில் வைப்பதாக கருதி உங்களை நீங்கள் ஆழமான இருண்ட காலத்தை நோக்கி இட்டுச் செல்கின்றீர்கள்.

தமிழர் போராட்டப் போக்கில் பாரதூரமான தவறுகள் இழைக்கப்படுகின்றன என்பது உண்மை. அவ்வாறான தவறு ஒரு சக சமூகத்தின் மீது பாரியளவில் இழைக்கப்பட்டால், அவற்றை மறக்கச் சொல்வது பாதிக்கப்பட்ட மக்களை ஆற்றுப்படுத்தாது. தவறுகளை பகிரங்கமாக எந்தவித சாக்குப் போக்குகளும் இன்றி ஒப்புக்கொள்ள வேண்டும் அதுதான் பாதிக்கப்பட்ட மக்களை உண்மையில் ஆற்றுப் படுத்தும். உங்களை நோக்கி இதயபூர்வமாக நெருங்கி வரச் செய்யும். உங்களுடன் இணைந்து உன்னதமான சமுதாயத்தைக் கட்டியெழுப்பும். அங்கே ஜேர்மனியைப் பாருங்கள். ஜப்பானைப் பாருங்கள் தாம் மற்றவர்களுக்கு என்றோ இழைத்த கொடுமைகளுக்காக நாடும், நாட்டு மக்களும் நெஞ்சுருகி அழுது வருடாவருடம் கண்ணீர் வடிக்கின்றார்கள். இது மனித நாகரீகம். மானுடத்தின் உன்னத பண்பு. நீங்களோ, நாகரீக உலகின் வரலாற்றில் இருந்து நல்லதையெல்லாம் விட்டு விடுகின்றீர்கள். மோசமானதை எல்லாம் பற்றிக் கொள்கின்றீர்கள். விடுதலைப் புலிகளே நீங்கள் எங்கு நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கின்றீர்கள்? தமிழ் மக்களை எங்கு நோக்கி அழைத்துச் செல்கின்றீர்கள்? மிக விரைவில் உண்மை வெளிக்கும். உங்கள் உள் நோக்கங்கள் வெளிச் சத்திற்கு வரும். ●

## 13 ஆண்டுகள் கடந்தும் நமது மக்களுக்கு நீதி வழங்கப்படவில்லை!



## உங்கள் சிந்தனைக்கு...!



இரண்டு வாரங்களுக்கான "முஸ்லிம் குரல்" இதழ்கள் வெளிவரமாட்டாது என்பதனை மிக்க மனவருத்தத்துடன் தெரிவிக்கிறோம். முஸ்லிம் மக்கள் தொடர்பான முக்கியமான ஆவணத் தயாரிப்பிலும், நிதிச்சேகரிப்பிலும் ஈடுபடவேண்டி இருப்பதனால் இச்சிறிய இடைவெளியை நமது அன்பான வாசகர்கள் பொறுத்துக்கொள்ள வேண்டும்.

- பிரதம ஆசிரியர் -

1985க்கு பின் இன வன்முறையாலும், இன அழிப்பினாலும் பாதிக்கப்பட்ட இலங்கை முஸ்லிம்களின் உயிர், உடமை இழப்புகள் தொடர்பான விபரங்கள் இருப்பின் தயவுசெய்து எமக்கு அனுப்பிவைக்கவும்.

இலங்கை முஸ்லிம்களின் சொந்தக்குரல்! [illegible] ,வாங்கிப் படியுங்கள், எழுதுங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூதூர் நிருவாகம்-நிஜ அரசா? நிழல் அரசா?

# இருண்டுகிடக்கிறது மூதூர்



(மூதூர் செய்தியாளர்)

மூதூரை இன்று நிருவகிப்பது நிஜ அரசா? நிழல் அரசா? எனப் புரிந்துகொள்ள முடியாது மூதூர் மக்கள் திண்டாடுகிறார்கள். மூதூரின் பெரும்பான்மையான நடவடிக்கைகள் நிழல் அரசினாலேயே மேற்கொள்ளப்பட்டு வருவதே இந்நிலைக்குக் காரணம்.

மூதூர் பிரதேச செயலகப் பிரிவில் 42 கிராம சேவகர் பிரிவுகள் உள்ளன. தமிழர் பிரிவுகள்-22. முஸ்லிம் பிரிவுகள் - 20 ஆனால் மக்கள் தொகையோ முஸ்லிம்கள் 33,088, தமிழர்கள் 27,122 சிங்களவர்கள் 123. இதில் முஸ்லிம் பிரிவுகள் அனைத்தும் நிஜ அரசின் கட்டுப்பாட்டிலும், தமிழ் பிரிவுகளின் பெரும்பாலானவை நிழல் அரசின் கட்டுப்பாட்டிலும் உள்ளன. கடல்வளம் யாருடைய கட்டுப்பாட்டில் உள்ளதென்ற சர்ச்சை நீடித்தாலும், காட்டுவளம் முழுவதும் நிழல் அரசின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது.

இந்நிலையில் நிழல் அரசின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் எவற்றிற்கும் முஸ்லிம்கள் செல்ல முடியாதுள்ளதுடன், மூதூரைச் சூழ உள்ள ஆறு மற்றும் கடல் பிராந்தியத்தில் மீன்பிடிக்கவும் காட்டுப்பகுதியில் விறகு தறிக்கவும் தற்போது முஸ்லிம்கள் கப்பம் வரி கொடுத்து வருகிறார்கள். கடந்த வாரம் விறகு ஏற்றி சீவியம் நடாத்தும் 75 மாட்டு வண்டில் தொழிலாளர்கள் தலா 1000 ரூபாவீதம் நிழல் அரசிற்குச் செலுத்தி பூவண்ணனின் கையொப்பத்துடனான அங்கீகாரத்துடன், தொழில் செய்து வருகின்றனர்.

மூதூரில் இறுதியாக இடம்பெற்ற வன்முறைகளின் பின் திலக், கரீம் மௌலவி செய்து கொண்ட ஒப்பந்தத்தின் பின்னணியில் மீன்பிடிக்கக் கூடாதென அச்சுறுத்தும் சம்பவங்கள்-2, தாக்குதல் சம்பவங்கள்-2, கொள்ளை மற்றும், தீவைப்புச் சம்பவங்கள் - 4, மீன்பிடி உபகரணங்கள் அபகரிப்புச் சம்பவங்கள் - 5, கொலை மற்றும் பயமுறுத்தல் சம்பவங்கள் - 6 ஆகியன இதுவரை இடம்பெற்றுள்ளன. (விபரங்களுக்குப் பார்க்க முஸ்லிம் குரல் சுவடு-14, பக்கம் - 12)

நிழல் அரசின் இந்நடவடிக்கைகளை தடுக்க முடியும் என்றிருந்தாலும் தடுக்காதுள்ள நிஜ அரசிற்கும் மூதூர் மக்கள் வரிசெலுத்தி வருகிறார்கள். நிஜ அரசிற்கு வரிசெலுத்தி நிழல் அரசின் அச்சுறுத்தலுக்குள்ளாவதைப் பார்க்கிலும், நிழல் அரசிற்கு கப்பம் - வரிசெலுத்தி அச்சுறுத்தலின்றி வாழ்வது மேல் என்ற நிலைக்கு மூதூர் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இதே கதிதான் மூதூர் மின்சாரத்திற்கும் ஏற்பட்டுள்ளது. கடந்த 6ஆம் திகதி முதல் மூதூர் இருண்டு கிடக்கிறது. நிழல் அரசின் துணைப் படையான மறவர் படையினால் மூதூர் பிரதேசத்திற்கான மின் விநியோகம் 6ஆம் திகதி இரவு 10 மணி முதல் துண்டிக்கப்பட்டுள்ளது. காரணம் இறால்குழிப் பகுதிக்கு மின்சாரம் வேண்டுமாம். இப்பிரதேசத்திற்கு மின் விநியோகம் செய்யப்படும்வரை மூதூருக்கு மின்சாரம் வழங்கப்படக் கூடாதென மின்சார சபை ஊழியர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

மின் துண்டிப்பின் பின் அகற்றப்பட்டுள்ள மின்கம்பங்கள், கடத்திகள் என்பவற்றால் மின்சார சபைக்கு ஏழரை இலட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக திருமலை மாவட்ட மின் பொறியியலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அகற்றப்பட்ட மின்கம்பங்கள், கடத்திகள் என்பன நிழல் அரசினால், அம்மன் நகர், கூனித்தீவு பிரதேசங்களில் நடப்பட்டுள்ளதாக தகவல்கள் வருகின்றன. நிழல் அரசின் நிர்வாகத்தின் கீழ் உள்ள மின்மானிகள் வாசிக்கப்படுவதில்லை என்பதும் அங்குள்ள மின் இணைப்புக்களுக்கு தலா 150 ரூபா வீதம் நிழல் அரசினாலேயே கட்டணங்கள் அறவிடப்படுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தனியார் ஒருவரினால் மூதூருக்கு மாத்திரம் தனியான மின் பிறப்பாக்கி மூலம் மின்வழங்கும் நோக்கில் இடம் பெற்றுவரும் பேச்சுவார்த்தைகள் வெற்றியளிக்குமானால், நிழல் அரசின் நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் அடைவதுடன், மின்சாரசபை ஊழியர்களின் அராஜக நடவடிக்கைகளும் கட்டுப்படுத்தப்படும் எனவும் நம்பப்படுகிறது. ○


## 13 ஆம் ஆண்டு ரத்தம்

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்
யாசீன்
வல்குர் ஆனில் ஹகீம்...

அதே வாசம்!
ஆஹிறத்தில் வாகனமாகும்
குர்பான் கொடுத்த பிராணியின்
அதே பச்சையிறைச்சி வாசம்!
சுகந்தம்!
மெத்தைப் பள்ளி ஹவ்ழுட்டிலிருந்து
கமகமக்கிறது காற்றில்
குளிப்பாட்டிய மஸ்ஜித்.

வமாலியலா அஃபுதுல்லதீ
பதறனீ வஇலைஹி துர்ஜஊன்...

கிடத்தியிருந்த மடியை
வெடிப் பிழந்த முதுகின்
முள்ளந் தண்டால் கிழித்த
சகோதரனும் சேர்த்து
நூற்றிச் சொச்சம் சுஹதாக்கள்
மீரா ஜும்ஆப் பள்ளி
ஹுஸைனிய்யாத் தைக்கா
கொலைக் களங்கள் இரண்டு.



கண்ணீரால் கழுவி
கபனிட்ட துணியில்
செந்நீர் கசியத் தூக்கிக் கொடுத்து
பதின் மூன்று ஆண்டுகள்.

இஸ்லவ்ஹல் யவ்ம
பிமா குன்தும் தக்புறூன்...
இத்தனை நாளில்
முதலாம் குறிச்சித் தெருக்களில்
ஒருபேய் அலறவில்லை.
புழக்கமும் குறைந்ததில்லை.

சுஹதாக்கள் அலைவதில்லையாம்
ஹூர்லீன்கள் புடைசூழ
பாலாற்றும் தேனாற்று மருந்தி யருந்தி
சுவனத்தே அவர் எனக்கணமும்
சுகித்திருப்பாராம்

இன்னமா அம்றுஹு
இதா அறாத சை அன்
ஐயகூல லஹுகுன் பயகூன்

அசரீரிகள் கேட்கின்றன.
வயோதிபர்கள் சொல்கிறார்கள்
நிலமதிர்த்து விரையுமக்
குதிரைகளின் குளம் போசை
உமரின் படை என்பதாக.

சிறு பிள்ளைகள்
செப்டம்பர் 11 என்கிறார்கள்

இன்னும், உம்மாமார்,
இரவுச் சாப்பாட்டின் பின்
படுக்கச் செல்லும் தம்
வளர்ந்த பிள்ளைகள்
சாமங்களில் காணாமல் போவதாகவும்
முறைப்படுகிறார்கள்.

- என்.ஆத்மா

## இடி அமீன் மரணப்படுக்கையில்

இடி அமீனுக்கு இப்போது 78 வயதாகிவிட்டது. உகண்டாவின் இராணுவத் தளபதியாகவும், ஜனாதிபதியாகவும் இருந்த இடி அமீனின் கம்பீரமும் உறுதியும் இப்போது அவரிடம் இல்லை. உலகிலேயே பிரசித்தி பெற்ற பிரமுகர்களில் இடி அமீனும் ஒருவர். இன்று அவரை பராமரிப்பதற்குக் கூட ஆட்கள் இல்லை. முதுமையின் பிடியிலும், வறுமையின் கொடுமையாலும் காலம் கழித்து வரும் இடி அமீனின் கடைசி ஆசை என்ன தெரியுமா?



உகண்டாவில், தான் பிறந்த ஊரிலேயே தனது உடல் அடக்கம் செய்யப்படல் வேண்டும் என்பதே. இடி அமீனின் இவ் இறுதி ஆசையை நிறைவேற்றக் கூட இப்போதைய உகண்டா அரசாங்கம் தயார் இல்லை போல் தெரிகிறது. இடி அமீனின் எட்டு வருடகால ஆட்சியின் போது 4 இலட்ச மக்கள் படுகொலை செய்யப்பட்டதாக குற்றச் சாட்டு உள்ளது. உலகில் தோன்றிய மிகப் பெரும் சர்வாதிகாரிகளில் ஒருவராக இடி அமீன் உள்ளார்.


இப்போது சவூதியிலுள்ள மன்னர் பைசால் வைத்தியசாலையில் உயிர் காப்புக் கருவிகள் பொருத்தப்பட்ட நிலையில் கோமா நிலையில் இடி அமீன் உள்ளார். 1979 ஆம் ஆண்டு இடி அமீனின் ஆட்சி முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. 10 வருடங்கள் லிபியாவிலும் மிகுதிக் காலத்தை சவூதியிலும் இடி அமீன் கழித்து வருகிறார். பதவி கவிழ்பிற்குப் பின் இடி அமீன் ஒரு போதுமே உகண்டாவுக்கு திரும்பவில்லை. அவரது உடலும் உகண்டாவுக்கு திரும்ப கொண்டு செல்வதற்கு அனுமதிக்கப்படாது போல் உள்ளது.

## ஒலுவில் துறைமுகத்தால்
### நமது மக்களுக்கு என்ன நன்மை?

ஒலுவில் பாலமுனை கிராமங்களிலுள்ள ஏழை எளியவர்களின் நிலபுலன்கள் தந்திரமாகப் பறிக்கப்படும் அபாயம் எழுந்துள்ளது. தற்போதைய மு.கா. தலைவர் ரவூ௷ப் ஹக்கீம் அவர்கள் வந்த போது இது சுயவிருப்பா அல்லது சுவீகரிப்பா? என்று. வாய்கூசாமல் தலைவர் கூறினார் சுவீகரிப்பு என்று. சுவீகரிப்புக்குரிய அதிகாரத்தை யார் கொடுத்தார்கள். நாங்களே வாக்குப் போட்டது எங்கள் கண்களைக் குத்தவா என நினைக்க வேண்டியிருக்கிறது. மற்றுமொரு உண்மையை இங்கே தெளிவாக உணரவேண்டும். இங்குள்ளவர்கள் எவரும் காணி - வீடு எதுவுமே தரமாட்டோம் என்று சொன்னால் இலங்கை துறைமுக அதிகார சபையினரால் எதுவுமே செய்ய முடியாது. ஆனால், பாமர மக்களை அவர்கள் ஏமாற்றி, பயமுறுத்தியே இப்பறிப்பை செய்ய நினைக்கிறார்கள். மக்களாகத் திரண்டு போராடினால்தான் நமக்கு விடிவு வரும்.

நமக்கெல்லாம் மிகப் பெரிய உதாரணம் நுரைச்சோலை அனல் மின் நிலையம். அம்மக்களின் போராட்டத்தால் அது இன்று கேள்விக்குறியாகி உள்ளது. அவ்விதம் நாமும் செய்ய முடியாதா என்ன?

கோழைகளாக தலை குனிந்திருந்தால் நம் தலையில் கொச்சிக்காய் அரைத்து விடுவார்கள். இப்போது சொற்பமாக வழங்கப்படவுள்ள பணத்தை அதிகமாக வழங்கினால் போதும் என்று நினைக்கும் சில சுயநலமிகளின் காட்டிக் கொடுப்பால் முழு முஸ்லிம்களுமே பாதிப்படையப் போகிறார்கள். ஒலுவிலை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்றால் ஏன் ஒரு மீன் பிடித்துறைமுகத்தை அமைத்து இம்மக்களை வாழவைக்க முடியாது?



ஒலுவில் துறைமுகம் வருமானால் நமது சந்ததிகள் மிக மோசமாக கலாசார பண்பாட்டுத் தளங்களில் பாதிக்கப்படுவர். இதற்கு மிகப் பெரிய சான்று கொழும்பு. இது ஆரம்பத்தில் ஒரு முஸ்லிம் நகரமே. துறைமுகம் இதில் வந்ததால் நிலை எப்படிப் போனது. கண்முன்னே இருப்பது வாழ்வா? சாவா என்பதே. இதனைத் தீர்மானிக்க வேண்டியது இங்குள்ள முஸ்லிம்களே. ஆரம்பத்தில் ஜனநாயக ரீதியாக ஒலுவில் - பாலமுனை மக்கள் வீதியில் இறங்குவோம். அதன் பின் முழு முஸ்லிம்களையும் இதில் இணைப்போம். உலகிற்கு உணர்த்துவோம். கைக்கூலிகளை எதிர்க்க "நுரைச்சோலை" மக்களாக மாற முடியாவிட்டால் அதிகமான பணத்தை தந்து விட்டு நமது நிலங்களைப் பறித்து விடுவார்கள்.

*முஹம்மத், ஒலுவில்.*

## யாழ்ப்பாணத்தில் முஸ்லிம்கள் மீளக் குடியேறுவதில் பல்வேறு தடைகள்

யாழ்ப்பாணத்தில் முஸ்லிம்கள் மீளக் குடியேறி வாழ்வதற்கான இயல்புச் சூழ்நிலை இன்னமும் ஏற்படவில்லை. யாழ்ப்பாண முஸ்லிம்களின் வீடுகள், கடைகளில் தமிழ் மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ளதும், தொழில் செய்வதில் போடப்பட்டு வரும் தடைகளும் இதற்கு பிரதான காரணமாக உள்ளன. அத்துடன் யுத்தத்தால் சேதமடைந்த வீடுகள் வர்த்தக நிலையங்கள் பள்ளி வாசல்கள் இன்னமும் புனரமைக்கப்படவில்லை. அதற்கான நிதி ஒதுக்கீடுகளும் இதுவரை நடைபெறவில்லை. பாடசாலைகள் இன்னமும் இயங்குவதற்கான சூழலும் ஏற்படுத்தப்படவில்லை.

இந்நிலையை முஸ்லிம்களை யாழ்ப்பாணம் சென்று குடியேறுமாறு கூறி வருபவர்கள், கவனத்திற் கொள்ள வேண்டும். அத்துடன் உயிர் நாடியான முஸ்லிம்களின் பாதுகாப்பு தொடர்பான உத்தரவாதத்தையும் உறுதிப்படுத்த வேண்டும். இவைகள் நிவர்த்திக்கப்படாமல் மீள் குடியேற்றம் என்பது சாத்தியமே இல்லை.விடயம் விளங்கினால் சரி..

## புகையிரதத்தின் மூலம் நாளொன்றுக்கு
## 11/2 கோடி ரூபா நட்டம்

புகையிரதத் திணைக்களம் நாளொன்றுக்கு ஒரு கோடியே அறுபது இலட்சம் ரூபா நஷ்டத்தை அடைவதாக புகையிரத திணைக்களத்தின் புள்ளி விபர அறிக்கை குறிப்பிடுகிறது.

புகையிரத் திணைக்களத்திற்கென அரசாங்கத்தால் வருடாந்தம் ஒதுக்கப்படும் தொகை 700 கோடிகளாகும். 2002ஆம் ஆண்டில் 120 கோடிகளை மட்டுமே இலாபமாக புகையிரத திணைக்களம் பெற்றுள்ளது.

இத்தொகையை 365 நாட்களால் பிரித்து நாளொன்றுக்கான செலவு ஒரு கோடியே அறுபது இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

1997 களுக்கு முன்னர் போக்குவரத்துத் துறையில் 36 வீதத்தை புகையிரதத் திணைக்களம் தனதாக்கிக் கொண்டிருந்தது. இன்று 6 வீதமாக அது குறைந்துள்ளது எனவும் புகையிரத திணைக்கள அறிக்கை குறிப்பிடுகிறது.

## முஸ்லிம்களுக்கான பத்திரிகை, முஸ்லிம் குரலே!

"முஸ்லிம் குரல்" வார இதழ் சிலவற்றையே படிக்கக் கிடைத்தது. அதைப் படித்தபோது ஏனையவற்றைப் படிக்க முடியவில்லையே என வேதனைப்பட்டேன். காரணம் அத்தனை அம்சங்களும் உண்மையை வெளிச்சம் போட்டுக் காட்டுவதாக அமைந்திருந்தது. எமக்கிழைக்கப்பட்டு வருகின்ற அநீதிகள், அட்டூழியங்கள் என்பவற்றை அறிந்தபோது கவலையடைந்தேன். எமக்கான தேசிய வார இதழின் அவசியம் உணரப்படுகின்ற இக்காலகட்டத்தில் "முஸ்லிம் குரல்" அந்தக் குறையினை நிவர்த்தி செய்வதாகவே வெளிவருகிறது. ஆனால் இடையே சில வாரங்கள் பத்திரிகை வெளிவரவில்லை. அப்போது சிறந்த பத்திரிகையொன்று தனது வெற்றிப் பயணத்தை இடை நடுவில் நிறுத்திக் கொண்டதோ என் எண்ணத் தோன்றியது. வேதனையாகவுமிருந்தது. ஆனால் அது மீண்டும் வெளிவந்தபோது மிகவும் ஆனந்தமாக இருந்தது. "முஸ்லிம் குரல்" தன்னகத்தே வாசகர்களைப் பிரமிக்க வைத்த வகையில் உள்வாங்கிச் செல்கின்றது. அதன் வளர்ச்சி துரிதகதியில் செல்கின்றது. எனவே அதன் வரவு தொடர்ந்த வண்ணமே இருக்க வேண்டும். எத்தகைய இடையூறுகள் வரினும் அதன் பயணம் வெற்றிப்பாதையில் செல்ல வேண்டும். அதற்கு எனது பக்கபலம் நல்லாசிகள் எப்போதும் உண்டு. பக்கச்சார்பான தமிழ்ப் பத்திரிகைகளை புறந்தள்ளி எமக்கென்று வெளிவருகின்ற பத்திரிகைக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். நம்மைச்சார்ந்த எம்.பிக்கள், அமைச்சர்கள் இப்பத்திரிகையை வாசிப்பதன் மூலம் எமக்கிழைக்கப்படுகின்ற அநீதிகளை இனங்கண்டு அவற்றுக்கு நிவாரணம் பெற்றுத் தர திடசங்கற்பம் பூணவேண்டும்.

எம்.எச்.எம். இம்தியாஸ்

## முஸ்லிம்களினால் நேசிக்கப்படும் பத்திரிகை,

முஸ்லிம்களின் தற்போதுள்ள நிலைமையை எடுத்துரைக்க எந்தத் தமிழ்ப் பத்திரிகையும் முன்வருவதாக இல்லை. தினகரன் அரசாங்கப் பத்திரிகை, தினக்குரல், வீரகேசரி, சுடர்ஒளி முழுக்க முழுக்க தமிழர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறது.
அல்லாஹ்வின் உதவியால் உங்கள் பத்திரிகை முஸ்லிம்களை விபரிக்க உதவியுள்ளது. நன்றி. என்னுடைய கட்டுரை 11-07-2003இல் வெளியானது. அப்போது நான் ஊரில் இருந்தேன். எல்லோரும் என்னை உற்சாகப்படுத்தினர். யார் கோபித்தாலும் பரவாயில்லை காலத்தின் தேவை எழுதத்தான் வேண்டும். முஸ்லிம்களுக்கான உங்கள் முயற்சிக்கு நன்றி.

அபூபக்கர் லெப்பை, சாய்ந்தமருது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# -காத்தான்குடி-
# சிவந்த இரவும் ஷூஹதாக்களின் நல்லடக்கமும்

உலகிலேயே புனிதத்திற்கு பெயர்போன இடங்கள் பள்ளிவாயல்கள். அங்கு அசுத்தத்துக்கு - அசிங்கத்துக்கு இடமேயில்லை. அத்தகைய புனிதமான இரண்டு பள்ளிவாயல்களில் இரத்த வெள்ளம் ஓடியது. வுழு என்னும் அங்கசுத்தியுடன் 'அல்லாஹூ அக்பர் - அல்லாஹ் பெரியவன்' என்று கூறி, கிப்லாவை முன்னோக்கி பயபக்தியுடன் தொழுது நின்ற தூயவர்களைத் துஸ்டர்கள் பின்னால் நின்று துப்பாக்கிக் குண்டுகளால் துளைத்தனர். பின்னால் என்ன நடக்கிறது என்று திரும்பிக் கூடப் பார்க்காது தொழுகையில் திளைத்திருக்கும் நிலையில் அவர்களது உயிர்கள் பிரிந்தன.

இது பள்ளிகளில் நடந்தது. ஊரில் மக்களின் நிலை, இந்த வேட்டுச் சத்தம் மக்கள் காதில் பேரிடியாக இருந்தது. (ட்றைடரில் கொங்கிறிட் கற்களை கொண்டு வந்து கொட்டினால் எப்படி சத்தம் கேட்குமோ அதேபோல்தான் கேட்டது) என்ன நடக்கிறது? எங்கே நடக்கிறது? ஒரே பதட்டம். பெண்கள், குழந்தைகள் எல்லோரும் வீதியில் தத்தளிக்கும் காட்சி. வெளியில் சென்று பார்க்கப் பயம். எங்கும் ஒரே கும்மிருட்டு. எந்த வித தொடர்புகளுமில்லாத நேரம். அப்பொழுது முகைதீன் மெத்தைப் பள்ளியிலிருந்து ஒரு அறிவித்தல். 1ம் குறிச்சியில் அமைந்திருக்கும், மீரா ஜூம்ஆ பள்ளிவாயலிலும், ஹூஸைனியா தைக்காவிலும் பாஸிஸ புலிகள் தொழுது கொண்டிருந்தவர்களை சுட்டுவிட்டு தப்பி ஓடுகிறார்கள். இவ் அறிவித்தலைக் கேட்ட மக்கள் உடனே அலைபோல் பொங்கி முண்டி அடித்துக்கொண்டு சுடப்பட்ட பள்ளிவாயல்களை நோக்கி ஓடினார்கள். அங்கு அவர்கள் கண்ட காட்சி எந்த கல்மனதையும் கரையச்செய்துவிடும். எதுவுமே அறியாத ஷஹீதுகள் ரத்த வெள்ளத்தில் நீந்திக் கொண்டிருந்தார்கள். சிலர் அந்த இடத்திலே இறந்து கிடந்தார்கள். உடனே காயப்பட்டவர்களை அவசர அவசரமாக மெத்தைப்பள்ளிவாயலுக்கு கொண்டுவந்தனர். உடனே அங்கிருந்து மட்டுநகருக்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து ஹெலிகொப்டர் மூலம் கண்டி, அம்பாரை போன்ற இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டார்கள். காயப்பட்ட சகோதரர்களை கொண்டு சென்ற சகோதரர்களுக்குக்கூட எந்தப்பாதுகாப்புமில்லை, அல்லாஹ்வின் பாதுகாப்பைத் தவிர.

ஏன் சுட்டுக்கொன்றார்கள்? இது விடுதலையா? இனச் சுத்திகரிப்பா? இதற்கு புலிகள் கூறும் பதில் என்ன? வாப்பாவுக்குப் பின்னால் வந்த ஏழுவயது பால்மணம்மாறா பிஞ்சு மனங்கள் புலிகளின் விடுதலைக்கு என்ன துரோகம் செய்தார்கள்? இவர்களை அழிப்பதில் புலிகளுக்கு என்ன பயன்? இதற்கு அவர்கள் சொல்லும் நொட்டிச் சாட்டு என்ன? இது மறக்கக்கூடிய விடயமா? இல்லை இதனை மன்னிக்கத்தான் முடியுமா?

அன்றிரவு அழாதவர்கள் யாருமில்லை என்று சொல்ல வேண்டும். தாய்மார், சகோதரிகள் எல்லோரும் அழுதவண்ணமாக பள்ளிவாயலை நோக்கிப் படையெடுத்தார்கள். பார்க்குமிடமெங்கும் கண்ணீரும் கம்பளையும். மெத்தைப்பள்ளி வாயலில் ஒரே ஒப்பாரிச் சத்தம். கணவனை இழந்த மனைவி, தந்தையை இழந்த தனயன், மகனை இழந்த தாய், கணவனையும் மகனையுமிழந்த தாய், சகோதரனை இழந்த சகோதரி, வாப்பாவை இழந்த மகள் இப்படியாக கண்ணீருடன் கழிந்தது அந்த இருண்ட இரவு.

காலைப்பொழுது புலர்ந்தது. எங்கு பார்த்தாலும் மக்கள் வெள்ளம். எல்லோர் முகத்திலும் ஒரே சோக ரேகை. சகல மக்களும் மெத்தைப்பள்ளி வாயலை நோக்கி செல்கின்றார்கள். அங்கே முக்கிய (மசூறா) ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகின்றது. மசூறாவின் முடிவில் பல குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் ஒவ்வொரு பொறுப்பு ஒப்படைக்கப்படுகிறது. ஒரு குழு ஜனாஸாக்களை குளிப்பாட்டும் பணியில், மற்ற குழு கபன் செய்யும் பணியில், அடுத்த குழு பஞ்சி தயாரிக்கும் பணியில், மற்றையது கபுறு வெட்டும் பணிகளில் ஈடுபடுகிறார்கள். 103 ஜனாஸாக்களையும் ஒரே கபுறில் அடக்குவதென்று மசூறாவில் முடிவு செய்யப்பட்ட பிரகாரம், ஒரே கபுறாக நீளத்தில் வெட்டப்படுகிறது. இந்த பணியில் இளைஞர்கள் ரொம்பவும் ஆர்வமுடன் கலந்து கொள்கிறார்கள். அன்று இயற்கையும் மப்பும் மந்தாரமாக இருந்தது. சகல வேலைகளும் ரொம்பவும் உற்சாகமாக நடைபெறுகிறது.

ஒருவாறு சகல வேலைகளும் பகல் இரண்டு மணியளவில் நிறைவு பெற்றது. அதன்பின் ஜனாஸாக்கள் அவரவர் உறவினர் இல்லங்களுக்கு வாகனத்தின் மூலம் கொண்டு செல்லப்படுகிறது. பின் சகல ஜனாஸாக்களும் மீண்டும் பள்ளிவாயலுக்கு கொண்டு வரப்பட்டு, உள் பள்ளிவாயலில் வரிசைக்கிரமமாக அடுக்கப்படுகிறது. ஊரே ஒன்றுகூடி திரண்டு நின்றவாறு கண்ணீர் விட்டது.

அஸர் தொழுகைக்கான அதான் ஒலிக்கின்றது. எல்லோரும் அஸர் தொழுகையை முடிக்கின்றார்கள். அதன்பின் ஜனாஸா தொழுகை ஆரம்பமானது. பள்ளிவாயலில் இடம்போதாமல் மக்கள் வெளியில் நின்று ஜனாஸா தொழுகையில் கலந்துகொள்கிறார்கள். ஆகாயத்தில் ஹெலிக்கொப்டர் சுற்றிக்கொண்டே இருந்தது. ஜனாஸா தொழுகை நிறைவு பெற்றதும், உருக்கமான துஆ ஒன்று ஓதப்படுகின்றது. எல்லோர் கண்களிலும் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகின்றது. துஆ முடிந்ததும், மக்கள் ஷூஹதாக்களின் உடல்களை சுமந்த வண்ணம், கண்களில் கண்ணீர் வழிய நடக்கிறார்கள். வீதியில் தாய்மார்களும், சகோதரிகளும், சிறுவர்களும் கண்ணீர் மல்க கதறி அழுகின்றார்கள். இந்த ஷூஹதாக்கள் செங்குருதியைச் சிந்தி எமது இருப்பை உறுதிப்படுத்தினார்கள், எங்களினால் என்ன செய்ய முடியும் அவர்களுக்காக கண்ணீரைத்தான் சிந்த முடியும். அந்த நேரம் இயற்கையும் அழத்தொடங்கிற்று, பள்ளிவாயலிலிருந்து ஜனாஸாக்களை சுமந்து வரும்போது மழைபொழியத் தொடங்குகின்றது. எந்தவித ஆர்ப்பாட்டமுமில்லாத மழை, மழையில் நனைந்தவண்ணம் ஷூஹதாக்களின் உடல்கள் மீரா ஜூம்ஆ பள்ளிவாயலுக்கு கொண்டுவரப்படுகிறது. பின் மீண்டும் ஒரு துஆ, சலவாத்துடன் புனித ஷூஹதாக்களின் நல்லடக்கம் முடிவடைகிறது. எல்லோரும் மழை நீருடன் தாங்கள் கண்ணீரை சிந்திய வண்ணம் தமது இல்லங்களை நோக்கி நடக்கின்றார்கள். யா அல்லாஹ்....!

# 1990 புலிகளின் இனச்சங்காரம்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தக் குற்றவாளி பிரபாகரன்

## சர்வதேச நீதிமன்றத்தில் விசாரிக்கப்படவேண்டும்.

*ஒரு முஸ்லிம் பார்வை*



ஐக்கிய நாடுகள் சபையின் முக்கிய அம்சங்களில் ஒன்று சர்வதேச நீதிமன்றம். இந்த நீதிமன்றம் அண்மையில் நெதர்லாந்து நாட்டின் ஹேக் நகரில் உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. இந்த நீதிமன்றத்தின் முக்கிய பணி அரசாங்கம் ஒன்று தனது சொந்த மக்களின் மீது அல்லது வேறு நாட்டு மக்களின் மீது இழைக்கின்ற யுத்தக் குற்றங்களை விசாரித்து தீர்ப்பு வழங்குவதாகும். சர்வதேச நீதிமன்றம் யுத்தக் குற்றங்களை பின்வருமாறு வகைப்படுத்துகின்றது.

1. சமாதானத்திற்கெதிராக புரிந்த குற்றங்கள். சர்வதேச பிரகடனங்கள். உடன்படிக்கைகள் போன்றவற்றிற்கு முரணாக திட்டமிடுவது செயற்படுவது போன்ற குற்றங்கள் இவ்வகைக்குள் அடங்கும்.

2. மனித குலத்திற்கு எதிராக புரிந்த குற்றங்கள். பெரும் எண்ணிக்கையில் ஆட்களைக் கொல்லுதல், நாடு கடத்தல், இனசம்ஹாரம் (அழிப்பு) போன்ற குற்றங்கள் இவ்வகையில் அடங்கும்.

3. யுத்தக் குற்றங்கள் (யுத்தம் தொடர்பான சர்வதேச சட்டம், நடைமுறைகளை மீறுதல்) இவ்வாறான குற்றங்களில் ஒன்றை அல்லது பலவற்றை புரிந்த அரசாங்கங்களின் தலைவர்கள் இராணுவ அதிகாரிகள் மீது குற்றம் சுமத்தப்படும் போது அதை விசாரித்து தீர்ப்பு வழங்கும் உரிமையை சர்வதேச நீதிமன்றம் பெற்றுள்ளது. இந்த வகையில் செர்பிய ஜனாதிபதி மிலோசவின் மீது யுத்தக் குற்றம் சுமத்தப்பட்டதன் பேரில் அவர் மீது விசாரணை மேற்கொள்ளப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டது. இவ்வாறான உதாரணங்கள் ஏராளமாக உள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகள் தம்மை ஒரு அரசாங்கமாக கட்டமைப்பதை 1990 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பித்து செயற்படுத்தி வருகின்றனர். தங்களுக்கான விடுவிக்கப்பட்ட நிலப்பரப்பு, தனியான நீதிமன்றக் கட்டமைப்பு, தனியான பொலிஸ் அமைப்பு, தனியான வங்கியமைப்பு, இராணுவம், கடற்படை போன்றவற்றை ஸ்தாபித்து தற்போது ஓர் அரைகுறை அரசாங்கமாக தம்மை நிலை நிறுத்தியுள்ளனர். இந்த அரைகுறை அரச கட்டமைப்புடனேயே தற்போது சர்வதேச மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தையிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

1990 ஆம் ஆண்டில் இருந்து ஓர் அரசாங்கமாக தம்மை நிலை நிறுத்தி வரும் தமிழீழ விடுதலைப் புலிகள் இக்காலப் பகுதியில் இருந்தே அதாவது அரச கட்டமைப்பு உருவாகும் போக்கு ஆரம்பமானதன் பின்பே வடக்கு கிழக்கு முஸ்லிம் மக்களின் மீதான பிரகடனப்படுத்தப்படாத யுத்தத்தை ஆரம்பித்தனர்.

இப்போது முஸ்லிம் மக்களும் தமது மக்களே எனக் கூறும் அன்டன் பாலசிங்கம் தனது சொந்த மக்களின் மீது பிரகடனப்படுத்தப்படாத யுத்தம் ஆரம்பிக்கப்படும் போதும் புலிகளின் ஆலோசகராகவே இருந்தார். முஸ்லிம் மக்கள் மீதான யுத்தத்திற்கு ஆதரவாகவே செயற்பட்டார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் பாஷையில் முஸ்லிம் மக்களையும் தமது சொந்த மக்களாகக் கருதுவதால், அவர்களது சொந்த மக்களின் மீது அரை குறை தமிழீழ அரசும், அதற்குத் தலைமை தாங்கும் வே. பிரபாகரனும் தமது சொந்த மக்களின் மீது பிரகடனப்படுத்தப்படாத யுத்தம் ஒன்றின் ஊடாக அதிகமான யுத்தக் குற்றங்களைப் புரிந்திருக்கின்றனர்.

வடக்கு, கிழக்கு முஸ்லிம் மக்கள் தம்மைத் தனியான ஓர் தேசிய இனம் என தொடர் தேர்ச்சியாக அடையாளப்படுத்தி வருகின்ற காரணத்தினாலும், இன, மத, கலாசார தனித்துவத்தைப் பேணும் இருப்பைச் சிதைப்பதை நோக்காகக் கொண்டதாலும் புலிகள் தொடர்ச்சியாக திட்டமிட்டு இனச்சுத்திகரிப்புச் செய்து படுகொலைகளில் ஈடுபடுகின்றனர்.

முஸ்லிம் இனம் தன்னை ஓர் தனியான தேசிய இனம் என்று அடையாளப்படுத்துவதன் அடிப்படையில், வேறு ஒரு தேசத்தின் மீது புரியப்பட்ட யுத்தக் குற்றமாகவே தமிழீழ விடுதலைப் புலிகள் புரிந்த யுத்தக் குற்றங்களை வகைப்படுத்த முடியும்.

சொந்த மக்கள் மீது புரிந்த யுத்தக் குற்றமாக இருந்தாலும் வேறு ஒரு தேச மக்களின் மீதான யுத்தக் குற்றமாக இருந்தாலும், தமிழீழ விடுதலைப்புலிகளும் வே. பிரபாகரனும் முஸ்லிம் மக்கள் மீது யுத்தக் குற்றங்களைப் புரிந்துள்ளார்கள் என்பது நிரூபணமாகின்றது.

(மீள்பிரசுரம்)

## ஏறாவூர் தாவூத் மாஸ்டர் மகன் சவூதியிலிருந்து அனுப்பிய வாக்கு மூலம்!

ஏறாவூரில் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டு கொல்லப்பட்ட நாடறிந்த எழுத்தாளரும் கொத்தணி அதிபருமான யூஎல்.தாவூத் மாஸ்டரின் மகனான நவாஸ் (28) என்பவர் அவரது சகோதரரின் ஊடாக எமக்கு அனுப்பிவைத்த செய்தி......

1990 ஆகஸ்ட் மாதம் 08ஆம் திகதி இரவு 9 மணியளவில் புலிகள் எங்களது வீட்டுக்கு வந்து வாப்பாவைக் கேட்டனர். அப்போது வாப்பா உள் அறையில் தூங்கிக் கொண்டிருந்தார். நான்தான் வாப்பாவைக் கூப்பிட்டுச் சொன்னேன்,

வாப்பா வெளியில் வந்து புலிகளுடன் பேசினார். நான் அருகிலேயே இருந்தேன். "மாஸ்டர், உங்களை விசாரிக்க வேண்டும் வாருங்கள் என்றனர் புலிகள். வாப்பா எங்கே கூட்டிச் சென்று விசாரிக்கப் போகின்றீர்கள் எனக் கேட்டார். வீதியில் எமது பொறுப்பாளர் காந்தன் நிற்கிறார். அவர் உங்களை விசாரிக்க வேண்டுமாம் என்றார். வாப்பா போட்டிருந்த பெனியனுடன் வீட்டுக்கு வெளியில் வந்தார். வீதியே வெறிச்சோடிக் கிடந்தது. வீதியில் ஒரு பிக்அப் வாகனம் நின்றிருந்தது. அவ்வாகனத்தினுள் புலிகள் ஆயுதம் தரித்திருந்தன.

வாப்பா பிக்அப் அடிக்குப் போனவுடன் உள்ளிருந்த புலியான காந்தன் என்பவர் வாப்பாவை நோக்கி முரட்டுத்தனமாக ஏசத் தொடங்கினார். புடிடா அவனை என அருகிலிருந்த புலிகளுக்கு உத்தரவிட்டார். அவர்கள் வாப்பாவைப் பிடித்துக் கொண்டனர். நான் எவ்வளவோ தடுத்தும் என்னை உதைத்து பூமியில் தள்ளிவிட்டனர். வாப்பாவைக் கடத்திக் கொண்டு சென்றனர். நான் வீதியில் அழுது கொண்டே வாகனத்திற்குப் பின்னால் ஓடினேன்.

அடுத்த நாள் புலிகளின் முகாமுக்கு ஊர் மக்களுடன் சென்று விசாரித்தோம். விசாரணை நடைபெறுவதாகவும் இரண்டு தினங்களின் பின் வருமாறும் கூறினார்கள். இரண்டு தினங்களின் பின் வாப்பாவும் மற்ற இருவரும் புலிகளால் கொல்லப்பட்ட செய்திதான் எமக்குக் கிடைத்தது.

வாப்பா முஸ்லிம்களுக்கு நியாயம் கேட்டதற்காகவே எமது வாப்பாவையும், எமது மக்களையும் புலிகள் கொன்றார்கள். ஒரு பட்டியல் வைத்துக் கொண்டே அப்போது தேடினார்கள். அப் பட்டியலிலிருந்த 15 பேரில் மூன்று பேரே புலிகளால் கொல்லப்பட்டனர். மற்றவர்கள் புலிகளுக்குப் பயந்து தலைமறைவாகி விட்டனர் என்கிறார் நவாஸ்.

## முஸ்லிம் குரலே வா! வா!! வா!!!

முஸ்லிம் குரலே நீ
மலராய்... மலர்ந்து
நிலவாய்... சுடரிட்டு
நல்லோர் வழியில்
நில்லாது வா... வா....
முழுவுலகுக்கும் நீ
முத்தாக வா.... வா...
முஸ்லிம் மக்களின்
மூச்சாக வா... வா...
புத்தாடை அணிந்து - நீ
புனிதனாய் வா... வா...
புவியினை ஆண்ட
புத்திரனாய் வா... வா...
ஒவ்வொரு வெள்ளியும்
ஓயாதஷையாய் வா... வா...
வளர்பிறையாய் நீ
வளர்ந்து வா... வா...
வெள்ளிக்கிழமையில்
பொன்னாடையோடு வா... வா...
எப்போதும் முஸ்லிம் குரலே!
நீ தான்
நீ... நீயே தான்
எல்லோர் கரத்திற்கும்
நில்லாது நீ
வா...! வா...!! வா...!!!

**அ.கா.மு.றிஸ்வின்,** நெய்தல் நகர்.

இலங்கை முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் முஸ்லிம் குரல் வாராந்தம் ஒலிக்காமல் தினம்தோறும் ஒலிக்க வேண்டிய அவசியமாக இருக்கிறது. என்ன செய்வேன். "ஆண்டிகள் கூடி மடங் கட்ட முடியாதே!" குரலின் ஒவ்வொரு அங்குலமும் உள்ளத்தை வெதும்பச் செய்கிறது. பிரார்த்திக்கின்றேன் அங்கலாய்க்கின்றேன்.

*கலைமணி ஏ.ஸீ. இஸ்மா லெவ்பை,*
*ஓய்வுபெற்ற அதிபர்*
*சம்மாந்துறை.*

# பள்ளிமுனைக் கிராமத்தின் கதை

7 குறுநாவல்

-என்.ஏ.தீரன்-

### அத்தியாயம் 4

சப்புச் சுல்தான் வீதியில் இறங்கி தனது மோட்டார் சைக்கிளில் ஏறினான். ஒரே உதையில் 'ஸ்டார்ட்' செய்து, யாஸின் வாய் பிளக்க உறுமி உறுமி காட்டிவிட்டு புறப்பட்ட போது-

'சுல்தான் கொஞ்சம் பொறு!' - முத்துமுகம்மது சுல்தானை நோக்கி வந்தான். சுல்தான் இன்ஜினை நிறுத்தாமல் நின்றான்.

'என்ன தலவரு? என்னயும் 'டவுட்'டா?'

'சப்பு! கவனமா யிரி! ஒன்னப்பத்தி புலிப்படக்கி மொறப்பாடு போயிரிக்கி. ஒன்ட 'எரப்புணி'ப் புத்திய காட்டினத்தாலதான் உதுமான்ட வெண்டியும் நஞ்சி குடிச்ச. பொலிஸிலையும் 'இன்டி' போட்ரிக்கி. பொலிஸிட்ட நீ தப்பினாலும் புலிகிட்டருந்து தப்பேலா.... செல்லிட்டன். நேத்து ராவும் புலி ஒன்னத் தேடி வந்தயாம் ண்டு கேள்வி....'

'நிப்பாட்றா கொறுக்காப்புளி! பேக்கத கதையாம. புலி - என்ன மையிரப் புடுங்குற... நா என்ன கொல செஞ்சயா கொள்ளயடிச்சயா....ல்ல புலிய காட்டிக் குடுத்தயா....?'

'நீ காசிக்கி என்னயும் செய்வாய்!'

'ஏ......நீ? தெறமா? ரெண்டாயிரம் காசி மைருக்கு தலவர்ரய....

'பொத்துரா வாய நாய! இடிப்பன் பல்லுப் பறக்கச் செல்லி என்ன நான்தான் புலிட்ட காட்டிக் குடுப்பன்... பாரு!'

'கி....க்ஹ்ஹு்முக்கீ... டேய் பீக்கொறுக்கா....ந்த சப்புச்சுல்தான் இதுக்கெல்லாம் பயப்புட்டா வேலயில்ல... இதப்பாரு!'

திடீரென சப்பு சுல்தான் தன் பக்கட்டுக்குள்ளிருந்த கடிதத்தை விரித்து முத்துமுகம்மதின் கண்ணெதிரே பிடித்தான். அதிர்ந்து போனான் முத்துமுகம்மது. அது புலிகளின் அதே... கடிதம்... எப்படி... இவனிடம்...?

'இது என்ட மோபைக்கில செருகியிருந்திச்சி. இதுக்கெல்லாம் பயப்புட்டு ஓர்றவன் நானில்லடா..... இதயும் பாரு கொறுக்கா!'

சட்டென சப்புல்சுல்தான் தன் இடுப்பு பக்கத்து சேர்ட்டை விலக்கிக் காட்ட உலோக மினுமினுப்பாக பிஸ்டல் துப்பாக்கி ஒன்று அங்கு சொருகப்பட்டிருந்தது. முத்துமுகம்மது அச்சத்துடன் சுல்தானைப் பார்த்தான். சப்புச்சுல்தான் சிரித்தபடியே-

'வெரட்டா இளஞர் அணித் தலவர்ர்ர்.... க்ஹிக்கீ....ய்!'

அநாவாஸ்யமாய் மூன்று தரம் உறுமி உறுமிப் பறந்தது மோபைக்.

'முத்தும்மதோவ்! அவன் நொக்கிட்ட என்ன காட்டின?'

வேலியோரம் மாமியின் குரல் கேட்டது. உள்ளே வந்தான். மைமுனா இப்போது வாசலைப் பெருக்கிக் கொண்டிருந்தாள்.

'சப்பன் ... பொல்லதவன் மாமி! ஒனக்கு வெசயம் தெரியா.....'

'ஏன் தெரியாம? செல நேரம் ஒதவியும் செய்வான்தான்'

'அவண்ட ஒதவி ஆவத்துலான் கொண்டுடும். அவன நம்பிக்கெட்ட ஆக்கள் பலபேரு!

கொளும்புக்குப்போற?'

"ல்லல்ல! நீ, நான், மைம்மா எல்லாருந்தான் போற... உன்டாத்தான் லொச்சில நிறகிற. "பௌட்" டுல ஏத்த மட்டும் கூட இரிக்கிற நாம!"

"அப்ப அவன்...?"

அவன் வேறயா நேரத்தோடப் பேய்ருவான். நாம பிந்திப்போற.. பெரச்சினல்ல... நீ கொழும்பு போயிரிக்காயா



மின்ன?

"எனக்கென்டா இதுல விருப்பமில்ல மாமி"

"ஆருக்கு விருப்பம் இதுல? எல்லாந் தல நசீவு. என்னப்பண்ணினவரு கொம்புளப்பிள்ளயா நாலத் தந்திட்டுப் போனவரு போனவருதான். ஆள் எங்கண்டும் தெரியா. நாலு மல தாண்டிப்போனாரோ... நெல்ல வழி கண்டு போனாரோ... டியே... மைம்னா! மச்சானுக்கு தேயில போட்டுக் குடு. ஈனக்கி போய் வாரன்!"

மாமி கடைக்குப் புறப்பட்டுப் போனாள். முத்து முஹம்மது மைமுனாவை நோக்கப் பார்த்தான். அந்திக் கருக்கலில் முகம் செவ்வரி படர்ந்திருந்தது. சிவப்பேபோ பன் கருத்துப்பே பாயிருந்தாள். வட்டமாகப் படபடக்கும் விழிகளும் மூர் மூக்கும்.... பதினேழு வயது கிராமத்து இரகசியம்! இவளா... வெளிநாட்டுக்கா.... முத்த முஹம்மது நெஞ்சு வெம்பி கீழே உட்கார்ந்தான். கண்களில் நீர் முட்டியது.

"ன்னாங்க மச்சான்! தேத்தன்னி! குடிங்க!" மைமுனா தேனீர் கிளாசை நீட்டினாள்.

"மைம்னா! நீ சமம்திச்சிட்டியா இதுக்கெல்லாம்?" "நான் என்ன மச்சான் செய்ற, எல்லாம்மா படுத்தற பாடு, என்ட கைல ஒண்டும் ல்ல.."

கண்ணீர் வடியப் புன்னகை செய்தாள் மைமுனா.

"அப்ப என்ட கெதி என்ன.. நா... ஒன்னத்தானே வேளவு நாளும்...."

முத்து முஹம்மது வார்த்தை முட்டி திடீரென கண்கள் கலங்கி நீர்துளி எட்டிப்பார்த்தது. பேச முடியவில்லை. "...ம்....மை....ம்...னா..!"

மைமுனா சற்றும் எதிர்பாராத ஒரு காரியம் செய்தாள். திடீரென முத்து முஹம்மதை நெருங்கி ஒரு செக்கன் அவனைக் கட்டிப்பிடித்தாள். அவனது மற மற கன்னத்தில் பற்கள் பதியும் வண்ணம் இறுக்கமாக ஒரு சத்த முத்தம் கொடுத்துச் சட்டென்று விலக, அவனது கையில் தனது (கடவுச் சீட்டுக்காக எடுத்திருந்த) ஒரு மார்பளவுப் புகைப்படத்தைத் திணித்தாள்.

"நான் "கொவைத்" துலயிரிந்து வெரு மட்டும் என்ட நெனப்பாத் தான் மச்சான் இரிக்கனும் நீங்க! அதுக்குத்தான் இது!"

மைமுனா விரைந்து குடிலுக்குள் நுழைந்துவிட்டாள். விறைத்து வெலவெலத்துப்போன முத்து முஹம்மது நெடுநேரமாக அசையவில்லை.

ஆனால், சடுதியாக தாடி மாஸ்டரின் குரல் பலமாகக் கூப்பிட்டது.

"டேய் முத்தம்மதோவ் ... முத்துவம்மதோவ்!"

திடுக்கிட்ட முத்து முஹம்மது தாடி மாஸ்டரிடம் ஓடினான்.

"டேய் முத்தும்மது உன்னத் தேடி ஊட்ட போனன். நீ ஞ்சரிக்காய்.. என்ன "லவ்" வா? டேய், கட்சித் தலைவர் உன்ன டெலிபோன்ல கதைக்கட்டுமாம்... செய்லான் ஹாஜியார் ஊட்ட! வாடா கெதியா.

பேயா.... கொதியா வாடா! ஏறு... ஏர்றா.. இதுல..."

தாடி மாஸ்டரின் மோட்டர் சைக்கிளில் முத்து முஹம்மது முதற் தடவையாக பின்னால் அமர்ந்து சாறனும் சேர்ட்டும் காற்றில் பறக்க தாடி மாஸ்டரின் தோள்பட்டை நாற்றத்துடன் செய்லான் ஹாஜியார் வீடு வந்தான்.

செய்லான் ஹாஜியார் தொலை பேசியில் பேசிக் கொண்டிருந்தார்.

"..... ஆக்கள் கூட்டிவெர மினி வஸி "புக்" பண்ணிருக்கு சேர். நோட்டிசு போஸ்டரு எல்லாம் அடிக்கக் குடுத்துட்டன். என்ன.... ஓ..ஓம்.. சேர் ... செய்றன்... செரி சேர்.... ஆரு... ஙாக.... வந்துட்டான் சேர்... செரி செரி கதைக்கச் செல்றன் டேய், முத்தூ. இன்னாடா தலைவரு கதைக்கட்டாம்.. புடி கத... மத்தப்பக்கம் புடிரா... ஙாக... ப்பிடி.. செரி.. ப்ப கத.. கதயண்டா.... அலோ ண்டு செல்றா பேயா!

முத்துமுகம்மது தாங்கொணா வியப்புடன் தொலைபேசியை காதில் வைத்ததுமே தலைவரின் கம்பீரமான குரல் கேட்டது.

'தம்பி, முத்துமுகம்மத்! நீங்க தந்த லெட்டர பார்த்தன். நான் உங்களோட கதைக்கனும். அடுத்த கெழம கொழும்புல நடக்க இருக்கிற கட்சிப் பொதுக்கூட்டத்துக்கு கட்டாயம் வாங்க..... செய்லான் ஹாஜியாருடன் வரலாம்.... சரி போனை ஹாஜியாரிடம் கொடுங்க!'

சரியென்று சொல்லக் கூடத் தோன்றாதவனாக முத்துமுகம்மது தொலைபேசியை செய்லான் ஹாஜியாரிடம் கொடுத்தான். அவர் அதனை வாங்கி தன் சால்வையினால் ஒரு தரம் துடைத்து விட்டு -

'ஙா.. அலோவ்! செரி சேர்! ஓம் சேர்! செரி சேர்!' என்றார். உடன் வைத்துவிட்டு. முத்துமுகம்மதிடம் திரும்பினார்.

*(இன்னும் வரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சாறு

எழுதுவது... லைலா அஷ்ராவி

*இரண்டு வார இடைவெளியின் பின்னான சந்திப்பு... இம்முறை, நவீன தொடர்பூடக செயற்பாடுகள் தொடர்பான மிக முக்கியமான சிறு கட்டுரையொன்றை தமிழில் தரலாம் என விரும்புகிறேன்.*

கடந்த அரை நூற்றாண்டில் ஏற்பட்ட தொடர்புசாதனத் துறையின் வளர்ச்சி உலகளவில் பரந்த தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அதிலும் குறிப்பாக செய்தித்தொடர்பூடகங்கள் பெரும் பங்களிப்பினையும் தவிர்க்க முடியாத ஓர் ஆதிக்க பலத்தையும் கொண்டிருப்பதையும் காணக்கூடியதாகவிருக்கிறது. பல்வகைப் பரிமாணங்களோடும், பரிணாமங்களோடும் உலகின் மூலை முடுக்கெங்கும் நிகழும் விடயங்களை நாம் உடனேயே அறிந்து விடுகிற நிலை இப்போது தோன்றியிருக்கிறது. முன்பு அப்படியல்ல. ஒரு போர்ச் சூழலில் அதன் தலைவர்கள், பெரிய பெரிய ஜெனரல்கள் எதிரணியுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு ஒரு தீர்வுக்கு வந்திருப்பார்கள். ஆனால் போர் மறுபுறம் நடந்து கொண்டிருக்கும். காரணம் அந்தத் தீர்வுச் செய்தி போரில் ஈடுபடும் வீரர்களைச் சென்றடைந்திருக்காது. இப்போது அப்படியல்ல. உலக நிகழ்வுகள் உங்கள் காலடிகளுக்கு ஒளிப்படங்களாக, ஒலி வடிவங்களாக மற்றும் ஏனைய வடிவங்களிலாகவென உடனடியாகவே வந்துகொண்டிருக்கிறது.

ஊடகங்கள் மிக விரைவாக இவ்வாறான நிகழ்வுச் செய்திகளை மாத்திரம் கொண்டுவருவதில்லை. மக்களை களிப்பிலாழ்த்துகிற பல சுவாரஷ்யம் மிகு நிகழ்வுகளையும் அவை வழங்கிக் கொண்டிருக்கின்றன. எப்போதுமே தொடர்பூடகங்களில் சோர்வு நிலை இருப்பதில்லை. முழு

# பிர(ச்)சார இயந்திரம்

நேரமுமே எங்கிருந்தாவது ஏதாவது செய்திகளை, நிகழ்வுகளை தந்து கொண்டேயிருப்பார்கள். அந்த நிகழ்வுகளை மக்களுக்கு விளங்கப்படுத்திக் கொண்டிருக்கிற, தொகுத்தளித்துக் கொண்டிருக்கிற ஒரு ''கதை சொல்லியும்'' தவறாமல் இருந்து கொண்டேயிருப்பார். மொத்தத்தில் இந்தப் போக்கு எங்கள் நாளாந்த வாழ்வில் ஆதிக்கம் செலுத்துகிற ஒரு தவிர்க்க முடியாத ஆச்சரியம் மிகுந்த ஆளுமையாக மாறிவிட்டிருக்கிறது. எமக்கு எது முக்கியமானது? எது முக்கியமற்றது? எது நல்லது? எது கெட்டது? என்பதைக் கூட அவைகளே எங்களுக்காகத் தீர்மானிக்கின்றன. எங்கள் சிந்தனைகளை—உலகம் பற்றிய எங்கள் நோக்குகளை அவைகளே வடிவமைத்தும் மாற்றியும் கொண்டிருக்கின்றன. நாம் இந்தச் சாதன ஆளுமைக்குள் கைதிகளாக அகப்பட்டு அடிப்படையில் நாம் கேட்க வேண்டிய 'தொடர்பூடகங்களுடனான எங்கள் தொடர்பு எப்படியிருக்க வேண்டும்? என்ற கேள்வியைக் கூட மறந்து போய்விட்டிருக்கிறோம்.

எங்கள் கண்களை, காதுகளை, எங்கள் மனநிலைகளை எப்போதும் முழு அளவில் தங்கள்பால் திருப்பிக் கொண்டிருக்கும் இந்த இயந்திரங்கள் எங்களது உருவாக்கங்கள் அல்ல என்ற அடிப்படையை நாம் முதலில் கருத்திற்கொண்டாக வேண்டும். நாங்கள் அதை வடிவமைக்கவுமில்லை. அதை இயக்கி நடத்திக் கொண்டிருப்பவர்களுமல்ல. அது எங்களிடமே எங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தாலும் அதற்கென்றே பல நிகழ்ச்சித்திட்டங்களை வைத்துக் கொண்டிருக்கிறது; சொல்லிக் கொண்டிருக்கிறது. ஆனால் உண்மையில் அது அதற்கு மாற்றமாகவே இருக்கிறது. அது தன் விருப்பு வெறுப்புக்களைக் கொண்டிருக்கிறது. பக்கச் சார்பாக நடந்து கொள்கிறது. தனக்குத் தேவையென்றால் அது சிறு குன்றைக் கூட பெரும் மலையாக்கிவிடும். தனது நலனுக்கு பாதகமென்றால் சில முக்கியமான விடயங்களைக் கூட அது கண்டு கொள்ளாதுவிடும்.

ஆனால் துரதிஷ்டம் என்னவென்றால் இந்த எல்லாவகையான சாதக பாதக அம்சங்களுடனும் அதுதான் எங்கள் உலகம் பற்றிய அறிவுக்கு மட்டுமல்ல, எங்களைப் பற்றிய தகவல்களுக்கும் கூடத் தேவையான கட்டாய சாதனமாக ஆகியிருக்கிறது. ஆக இப்படியான ஒரு சந்தர்ப்பத்தில் எங்கள் 'உம்மத்து' சிந்திக்க வேண்டிய ஒரு முக்கியமான விடயம் என்னவென்றால், சுதந்திரமாகவும், ஊழல்கள், பக்கச் சார்புகளுமற்று இயங்கக் கூடிய எங்களுக்கான ஒரு செய்தியூடகத்துறையை உருவாக்கி வளர்த்துக் கொள்வதுதான் ஆகும். இவ்வாறு அமைகிற ஊடகம், தானே தன் ஆளுமையை வெளிக்காட்டும் விதத்தில் இயங்கிக் கொள்வதாக இருக்க வேண்டும். சிலர் பிரஸ்தாபிக்கிற அல்லது பரப்பிவிடுகிற செய்திகளுக்கு மாற்றமானதை மட்டும் வழங்குவதை இது தன் நிரலாகக் கொள்ளக் கூடாது. மற்றவர்களின் பொய்களைப் பரப்புகிற ஒன்றாக அல்லாமல் தனது உண்மைகளைக் கொணர்கிற ஓர் ஊடகமாகவும் இது அமைய வேண்டும்.

இவ்வாறான எங்கள் எதிர்பார்ப்பு நிறைவேறுகிற வரை நாங்கள் தற்போதிருக்கும் ஊடக முறைமைகளுடனும், ஊடகத் துறைகளுடனுமே வாழவேண்டியவர்களாகியிருக்கிறோம். எங்களால் முற்றாக அதைப் புறக்கணித்துவிடவோ, எங்கள் பாட்டில் எங்கள் வேலைகளைப் பார்த்துக் கொண்டிருக்கவோ முடியாத நிலையிலும் இருக்கிறோம். இந்த இரண்டும் கெட்டதான சந்தர்ப்பத்தில் நாங்கள் செய்யவேண்டிய ஒன்று என்னவென்றால் எங்களை புத்திசாலிகளாக, அறிவார்ந்தவர்களாக அதாவது ஊடகங்களின் பத்திஜீவித்துவ நுகர்வோராக எங்களை மாற்றிக் கொள்வதுதான் வாழ்க்கையின் ஏனைய எல்லா நிலைகளுக்கும் இஸ்லாம் வழிகாட்டுவது போல இந்த நிலைமைக்கும் அது தன் வழிமுறையைக் காட்டிக் கொண்டுதானிருக்கிறது.

## எதிர் நடவடிக்கைகளுக்கு முன்னர் உண்மைகளை ஊர்ஜிதப்படுத்திக் கொள்ளுதல்.

விசுவாசிகளே.. (பாசிக் எனும்) கொடியவன் உங்களிடம் ஏதேனும் செய்தியைக் கொண்டு வந்தால் (அதை உடனே அங்கீகரித்து) அறியாமையால் (குற்றமற்ற) ஒரு சமூகத்தார்க்கு தீங்கிழைத்துவிடாதிருப்பதற்காக (அதன் உண்மையை அறிவதற்காக அதனைத் தீர்க்க விசாரணை செய்து) தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள். (அவ்வாறு நீங்கள் செய்யவில்லையென்றால்) பின்னர் நீங்கள் செய்தவைகளைப் பற்றி நீங்களே கைசேதப்படக்கூடியவர்களாக ஆகிவிடுவீர்கள். (-அல்-ஹுஜ்ராத் 49-6)

எந்த விடயங்களையும் செய்திகளையும் மிக இயல்பாக எந்த பகுப்பாய்வுகளுமின்றி மூலாதார உறுதிப்பாடுகளுமின்றி ஏற்றுக் கொள்வதையிட்டு எச்சரிக்கை விடுக்கிறது மேலுள்ள வசனம்.

உலகின் பிரதான அங்கீகாரம் பெற்ற சர்வதேச ஊடகங்களை, அவர்களின் ஒவ்வொரு செய்திகளை, தகவல்களை நாங்கள் புறக்கணித்தேயாக வேண்டுமா என்ற கேள்வி எழலாம் இங்கு. இல்லை, அப்படியில்லை, நாங்கள் ஒவ்வொன்றின் போதும் எங்கள் விமர்சன அணுகல்களை பிரயோகித்து விடயங்களை பகுப்பாய்வு செய்து அது பற்றிய தீர்மானங்களை, அந்தச் செய்தி பற்றிய நம்பகத்தன்மைகளை விளங்கிக் கொள்ள வேண்டும். சில வேளைகளில் இப்படி அணுகும்போது செய்திகள் எந்த நோக்கத்திற்காகச் சொல்லப்பட்டிருக்கிறது என்ற உண்மைகளை எம்மால் அறிந்து கொள்ள முடியுமாயிருக்கும்.

பெரும் புகழ்பூத்த ஊடக நிறுவனங்கள் கூட தங்கள் பீற்றல்களுக்கு மாற்றமாக, தங்களைப் பற்றிய பிரச்சார நோக்கங்களுக்காக விடயங்களைத் திணித்தும் அகற்றியும் ஒலி, ஒளிபரப்பியும் வருவதை நாம் கண்டு கொண்டுதான் இருக்கிறோம். இருட்டடிப்பு, தணிக்கை, உண்மைக்குப் புறம்பான பிரச்சாரம் என நாளாந்தம் பல மாதிரிகளை நாம் கண்டு கொண்டேதான் வருகிறோம்.

இந்த ஊடகங்கள் முஸ்லிம் உலகு பற்றிய செய்திகளை சரியான முறையில் வழங்கும் நம்பகமான ஊடகங்கள் இல்லை என்பது நன்றாகவே தெரியும். அப்படியென்றால் ஒரு கேள்வி எழலாம். அந்தச் செய்திகளை அப்படியே மறு ஒளி -ஒலிபரப்புச் செய்யும் முஸ்லிம் உலக தொடர்பு சாதனங்கள் பற்றி என்ன சொல்வது? அவற்றை உண்மையென்று நம்பித்தானே செயற்படுகிறார்கள்! உண்மைதான், அப்படித்தான் நடக்கிறது. ஆக அப்படி நடக்கிறதெனில் அது எதைக் காட்டுகிறதென்றால் இந்த மேற்சொன்ன இறையாணைக்கு முரணான வகையில் நடக்கிறது என்றுதான் அர்த்தமாகும்.

மிகக் கவலையான ஒரு விடயம் என்னவென்றால், எங்களிடையேயுள்ள கற்றறிந்தவர்கள்கூட எந்தத் தயக்கங்களுமற்று பொய்யான செய்திகளை விழுங்கி ஏப்பமிட்டுக் கொள்வதுதான்.!

## உங்கள் பொறுப்புணர்வை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்.

(நபியே) எதைப் பற்றி உமக்குத் தீர்க்கமான அறிவில்லையோ அதை நீர் பின்தொடராதீர். (ஏனெனில்) நிச்சயமாக செவி, பார்வை, இதயம் (ஆகிய) இவை ஒவ்வொன்றும் அதைப் பற்றி (மறுமையில்) விசாரிக்கப்படக்கூடியதாக இருக்கின்றது. (அல்-இஸ்ரா 17-98)

இவ்வசனத்திற்கு விளக்கமளிக்கும் மௌலானா ஷபீர் அஹ்மத் இவ்வாறு எழுதுகிறார் - ''ஒரு விடயத்திற்குப் பின்னாலிருக்கிற உண்மை நிலைகளை அறியாமல் அது பற்றி கதைக்கவோ செயற்படவோ செய்யாதீர்கள். பொய்ச் சாட்சியமளித்தல், பொய்க்குற்றம் சுமத்தல், எந்த ஆதாரங்களுமின்றி ஒருவர் பற்றிய இல்லாத பொல்லாத செய்திகளைச் சொல்லி அவர் பற்றிய வெறுப்பை, மோசமான விம்பத்தை பிறரிடத்தில் ஏற்படுத்துதல் போன்றவையும் கூட இதற்குள்தான் அடங்குகிறது''. தவிர்க்க முடியாத வாழ்வின் ஒரு பகுதியாக மாறியிருக்கும் நவீன தொடர்புச் சாதனங்களின் பங்காளி உறுப்புக்களாக இருக்கும் எங்கள் கண்கள், காதுகள், சிந்தனைகள் என்பனவற்றையும் பாதுகாத்துக் கொள்ளத்தூண்டுகிற ஒரு ஞாபகமூட்டலாகவும் இது இருக்கிறது.

## பொய்ப்பிரச்சாரங்களை பொருட்படுத்தாதிருத்தல்.

இவ்வகையான பிரச்சார இயந்திரங்கள் தாக்குதலில் ஈடுபடும்போது எம்மவரில் பலர் ஒருவகை விசனத்திற்குட்பட்டு அதற்கு பதிலளிக்க முண்டியடித்து பதட்டமான முறையில் செயற்படுகிறார்கள். தவறான குற்றச் சாட்டுகளுக்கு பதிலளிப்பதும், அதைச் சரியான விம்பத்திற்குள்ளாக்குவதும் ஒரு கடமைப்பாடான விடயம் தான். என்றாலும், நாம் அது விடயத்தில் தீவிரமாய், கட்டுப்பாடற்றனவாய் இயங்கத் தொடங்குவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். தவறான பிரச்சார அலைகளுக்குள் நாம் அப்படியே அள்ளுண்டு அது மாதிரியான ஆவேசங்களுடன் சென்றுவிடக்கூடாது. அல்-குர்ஆன் இதனை அதாவது இவ்வாறு பாதகமேற்படுத்தக் கூடியவிதத்திலான தீவிரச் செயற்பாட்டைச் செய்யாமலிருக்கும் தன்மையை விசுவாசிகளின் ஒரு பலமான தகுதியாகக் கூறுகிறது. அல்லாஹ்வை நேசிப்பவர்களும், அல்லாஹ்வால் நேசிக்கப்படுபவர்களுமான விசுவாசிகள் இவ்வாறான பிரச்சார நடவடிக்கைகள் எங்களுக்கான சோதனைகளின் ஒரு அம்சமாகத் தொடர்ந்து கொண்டிருக்கும் என்றும் குர்ஆன் குறிப்பிடுவதையும் நாம் கவனத்திற் கொள்ள வேண்டும்.

(விசுவாசங் கொண்டோரே) உங்கள் செல்வங்களிலும், உங்கள் ஆத்மாக்களிலும் நிச்சயமாக நீங்கள் சோதிக்கப்படுவீர்கள். உங்களுக்கு முன்னர் வேதம் கொடுக்கப்பட்டவர்களாலும், இணைவைப்பவர்களாலும் (வசைமொழி நிந்தனைகளான) அதிகமான நோவினையை நிச்சயமாக நீங்கள் செவியேற்பீர்கள். மேலும் (இத்தகைய கஷ்டங்களில்) நீங்கள் பொறுமையை மேற்கொண்டு பயபக்தியோடும் இருந்தீர்களானால், நிச்சயமாக அதுதான் அனைத்துக் காரியங்களிலும் ஆக்கமான செயலாகும். (ஆலஇம்ரான் 3-186)

ஆங்கில மூலம் - Walid Saboune

# அதிர்வுகள்

-சிராஜ் மஷ்ஹூர்

**"அதற்கான காரணம் நாங்கள் வித்தியாசமானவர்கள். வித்தியாசமாய் இருப்பதில் பிடிவாதமாய் இருப்பவர்கள்."**

"ஷா ஆலம் அகதி முகாமிற்கு நிர்வாணமாய் ஓடி வந்த நஜ்மா அயூ் குரோஷி என்ற பெண் கூறுகையில், 'என் மீது அசிட் ஊற்றப்பட்டது. என் உடல் எரிந்து கொண்டிருக்கையில் ஒருவன் என் வாயில் மூத்திரம் பெய்தான். என் உடைகள் சதையுடன் ஒட்டிக் கொண்டிருந்தது. தாங்க முடியாத எரியும் உணர்வால் உடைகளைச் கிழித்து எறிந்தேன். சதைகளும் கூட வந்தது. என் குழந்தைகளை என் கண் எதிரிலேயே எரித்துக் கொன்றார்கள்"

சுகனும் ஷோபா சக்தியும் தொகுத்துள்ள 'கறுப்பு' எனும் எதிர்க்கதையாடல்கள் அடங்கிய நூலின் முதல் கட்டுரை 'எச்சரிக்கை : குஜராத் ஒரு தொடக்கம் மட்டுமே' என்பது. ரோஸா வஸந்த் எழுதிய அக்கட்டுரையின் பின்குறிப்பாக வருவதே மேலுள்ள பந்தி. அதே கட்டுரையின் முடிவுரை இப்படி அமைகிறது:

"ஒரு விதத்தில் 11. செப்டம்பர் 2001க்குப் பிறகு உலகம் முன்புபோல் இல்லைதான். இஸ்லாத்தை வெறுப்பது என்பது இன்று ஒரு நாகரிகமாக மாறிவிட்டது. இந்திய நடுத்தர வர்க்கத்திடம் (ஒடுக்கப்பட்ட வர்க்கத்தினரிடமும் வளர்க்கப்பட்டு வரும்) இஸ்லாத்திற்கு எதிரான அசாதாரண வெறுப்புணர்வுக்கு ஒரு காரணம்தான் உள்ளது. அது பின்லேடன் காரணமாகவோ பாகிஸ்தான் காரணமாகவோ இஸ்லாத்தில் இருக்கும் அடிப்படைவாதம் காரணமாகவோ, இஸ்லாம் பெண்களை நடத்தும் முறை காரணமாகவோ அல்லது முஸ்லிம்களிடையே இருக்கும் கையளவு கிறாக்குகளினாலேயோ எழுந்தது இல்லை.

"அதற்கான காரணம் முஸ்லிம்கள் மற்றவர்களிடமிருந்து முற்றிலும் வித்தியாசமானவர்களாக இருப்பதுவும், தாங்கள் வித்தியாசமாய் இருப்பதில் முஸ்லிம்கள் பிடிவாதமாய் இருப்பதுவும், தேசியம் போன்று மற்றவர்கள் கட்டமைக்கும் கருத்துருவங்களுக்குள் தங்கள் வித்தியாசத்தை ஐக்கியமாக்கிக் கொள்ள மறுப்பதுவும் மட்டுமே. இதன் காரணமாகவே இந்து மதத்தின் மிகப் பெரிய சகிப்புத் தன்மை பற்றிப் பேசுபவர்கள் இஸ்லாமிய எதிர்ப்பிற்கு ஆதரவாக எழுதியும் நியாயப்படுத்தியும் வருகின்றனர்"

இவற்றை வாசித்து முடித்ததும், நாம் சொல்ல நினைத்த அதே வார்த்தைகள்தான் இவையும் என்ற உணர்வுதான் மேலிடுகிறது. ஒன்று மட்டும் உண்மை. ஒடுக்குமுறை எங்கே இருந்தாலும், அதன் முகம் ஒன்றுதான். ஒன்று மட்டும்தான். காத்தான்குடி, ஏறாவூர் படுகொலைகளின் பதின் மூன்று வருட நிறைவு நெருங்கிவருகிறது. நமக்குள்ளும் நஜ்மா அயூ் குரோஷி போன்ற பெண்கள் இருந்தனர். ஆனால் நமது நஜ்மாக்களுக்கு அசிட் ஊற்றப்படவில்லை. நமது நஜ்மாக்களை துப்பாக்கிச் சன்னங்கள் துளையிட்டன. நமது நஜ்மாக்களின் கர்ப்பப்பையை வெட்டரிவாள்கள் கீறிக் கிழித்தன. தனது கதையை நம்மிடம் வந்து முறையிட்டு அழ நமதுநஜ்மா விட்டுவைக்கப்படவில்லை. அதுதான் பெருந்துயரம்.

அந்த நஜ்மாவின் குழந்தைகள் அவளது கண்ணுக்கு முன்பே எரியூட்டப்பட்டுக் கொல்லப்பட்டனர் நமது நஜ்மாக்களின் குழந்தைகள் சுஜூதில் குப்புற வீழ்த்தப்பட்டனர். குருதியுள் வீழ்ந்த நம் குழந்தைகள் இன்னும் வீடு திரும்பவில்லை. இஷாத் தொழச் சென்ற நமது வாப்பாமார் கப்ரிற்குப் போன கதைகள் நமக்குத் தெரியும். முக்காட்டைச் சரி செய்யப்போன நமது உம்மாக்களின் கரங்கள் கண்களை மூடி அழுததுதான் நமக்குத் தெரியும். 'இத்தா'க்கள் மலிந்த காலம்தான் நமக்குத் தெரியும்.

நமது துயரங்களைச் சொல்வதற்கு நம்மிடம் வார்த்தைகள் இல்லை. நமது வார்த்தைகள் வலிவிழந்து சக்தியற்றுப் போயின. மற்றவர்களிடம் பகிரமுடியாத விறைப்பு நம்முள் குடிகொண்டு விட்டதோ எனஐயுற வேண்டியிருக்கிறது. ஆயினும்........இத்தனையும் நிகழ்ந்த (அல்லது நிகழ்த்தப்பட்ட) பின்தான் இன்று நாம் எதை இழந்தோம் என்று குட்டிச் சாத்தான்கள் குதர்க்கம் பேசுகின்றன. இழப்பை பட்டியலிட்ட பின்தான் நமது 'பங்கைப்' பெற வேண்டும் என்ற புதிய வாதம் வயிற்றைக் குமட்டுகிறது. அவர்களுக்குரிய பதில் நமது ஸெய்த்தூன் மட்டுமே.

நமது ஸெய்த்தூனுக்கு என்னதான் நிகழ்ந்தது?

"ஊர் எல்லையைச்
சற்றுத் தாண்ட
சேலை இருந்தது...
மேல்சட்டை இருந்தது...
இரத்தம் இருந்தது...
ஸெய்த்தூன் இருக்கவில்லை!"
..............................
..............................
"இளைஞர்கள் எனக்குச் சொன்னார்கள்
துவக்கு வெடித்த இரவின் மீது
இரத்தம் உறைந்த பூமியின் மீது
சத்தியம் பண்ணியதாக...
இனிமேல்
எந்த ஸெய்த்தூனையும் இழப்பதில்லை என்று?"

இதை அஷ்ரஃப் ஷிஹாப்தீன் எழுதியது 1985ல். ஆனாலும் நாம் ஸெய்த்தூன்களை இன்னமும் இழந்து கொண்டுதான் இருக்கிறோம். அது ஏன்? ஏனெனில் .... அது ஏனெனில், நாங்கள் பணிய மறுப்பவர்கள். நமது வித்தியாசத்தின் மீதும் தனித்துவத்தின் மீதும் பிடிவாதமாய் நிற்பவர்கள். ஆம்! நாம் பிடிவாதக்காரர்கள்தான்.

## அறிவைச் சோதிக்கும் அன்பு அறிவிப்பாளர்!



நமது சொத்தான அன்பு அறிவிப்பாளர் பி.எச். அப்துல் ஹமீது அவர்கள் இப்பொழுது தமிழகத்தில் ஒரு புதிய நிகழ்ச்சியில் உலா வருகிறார்.




'வெல்ல முடிந்தால் வெல்லுங்கள்' அறிவுத்திறன் போட்டி ஒன்றை அரசுத் தொலைக்காட்சியான 'பொதிகை'யில் ஆரம்பித்து சக்கைபோடு போடுகிறார். கடந்த ஜூலை 13ல் ஆரம்பம். குடும்பமே கலந்து கொள்ளும் இந்தப் போட்டியை தமிழகத்தில் இருந்த பொழுது கண்டு ஆனந்தக் கண்ணீர் விட்டேன். சூடான 'சன்' (டி.வி) போனால் என்ன குளுமையான 'பொதிகை'யில் 'குற்றாலக் குளியல்' போட வாய்ப்பு பெற்றுவிட்டதே! பாராட்டுக்கள்.

## ஏலே லோ ஐல சா!



இத்தாலியில் உள்ள வெனிஸ், உலகின் அழகான நகரங்களுள் ஒன்று. நம்ம ஊர்போல தெருவில் சைக்கிள் சவாரி போக முடியாது. காரணம், ஒரு வீட்டுக்கும், அடுத்த வீட்டுக்கும் நடுவில் தண்ணீர்தான் ஓடும். படகு சவாரிதான் செய்ய வேண்டும். இந்த ஊர் அழகில் மயங்கி, ஷேக்ஸ்பியர் கூட ஒரு கதை எழுதியிருக்கிறார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். ஆண்டுதோறும் இங்கு நடக்கும் படகுப்போட்டி இருக்கிறதே.. அடடா 'காணக் கண்கோடி வேண்டும்'. அந்தளவுக்கு கலர், கலராக அணிவகுப்பு (படகுகள்தான்!)

பல ஆண்டுகளாக நடக்கும் இப்போட்டியை வெனிஸ் மக்கள் எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள். இவ்வாண்டு போட்டி சென்றமாதம் நடந்தது. படகுகள் செல்லும் அழகை நீங்களே இரசியுங்கள். (பின்னணியில் தெரிவது வெனிஸ் நகரத்துப் பிரபலமான செயன்ட் மார்க்ஜ் மணிக்கூடு)

## சதாம் வீழ்ச்சி தினம் விடுமுறை நாளாம்!

ஈராக்கில் சதாம் ஹூசைன் ஆட்சி விழ்ச்சியடைந்த ஏப்ரல் 9ஆம் தேதி விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதை அமெரிக்கா பிரகடனப்படுத்தியிருந்தாலும் பரவாயில்லை. நாட்டு நிர்வாகத்தை மேற்கொண்டுள்ள முகம்மது பர்ஹ் அல்-உலூம் உத்தரவு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உசாமா பின்லேடன்

உசாமாவைப் பற்றி பல்வேறு நூல்கள் மேற்குலகத்தில் வெளிவந்துள்ளன. இவை பக்கச் சார்புடன் மேற்கை நியாயப்படுத்தியும், இஸ்லாமிய உலகத்தை பயங்கரவாதமும் தீவிரவாதமும் நிறைந்ததாகக் காட்டுவதிலுமே அதிக அக்கறையை வெளிப்படுத்தி உள்ளன. இந்த வகையில் *"அமெரிக்காவுக்கு எதிராக போர்ப் பிரகடனம் செய்த பின்லேடன்"* எனும் நூலை 2001 இல் எழுதி வெளியிட்ட யூசுப் பொடன்ஸ்கி என்பவர் தனது நூலின் முன்னுரையில் இப்படி எழுதுகிறார்.

"நான் பயங்கரவாதம் பற்றியும் அதன் சதி நடவடிக்கைகள் பற்றியும் ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறேன். குறிப்பாக இஸ்லாமிய உலகில் புரையோடிப் போயுள்ள பயங்கரவாதம் பற்றிய எனது ஆய்வுகள் கால் நூற்றாண்டையும் தாண்டி இன்னமும் தொடர்கிறது. ஒஸாமா பின் லேடனின் பெயர் முதன் முதலாக 1981 இல் தான் என் காதுக்கு வந்தடைந்தது. அவர் பற்றிய விபரங்களை ஆப்கான் போராளி ஒருவர் எனக்குத் தெரிவித்தார். அவரைப் பற்றி அறிய வேண்டுமென நான் ஆவல் கொண்டேன். தியாக சிந்தனையும் உறுதியுமிக்க ஒருவர் பின்லேடன் என அவ் ஆப்கான் போராளி என்னிடம் அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்தார். இது எனக்கு மாறு பட்ட தகவலாகவே இருந்தது.

ஏனெனில் ஏலவே நான் இப்பணியில் பலஸ்தீன, எகிப்தியர்களைப் பற்றியே அதிக கவனம் செலுத்தி வந்தேன். ஆனால், அராபிய தீபகற்பத்தைச் சேர்ந்த செல்வவளமிக்க இளைஞர்களில் நான் அதிக கவனம் செலுத்தவில்லை. ஏனெனில் சவூதியில் இப்படியொரு தீவிரவாதம் வளர்ந்து வரும் என நான் நம்பவில்லை. ஆகவே, ஒசாமா பற்றி நான் கேள்விப்பட்டதும் அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந்தேன். இதனால் உசாமா எனது கவனத்தை அதிகம் ஈர்த்தார்.

அப்போதுதான் பலஸ்தீன நாட்டைச் சேர்ந்த ஷெய்க் அஸாம் என்பவரை நான் சந்திக்க நேர்ந்தது. ஆப்கானில் போராடி வந்த படைப்பிரிவின் போசகராக அவர் இருந்தார். அவரும் அவரைச் சார்ந்தவர்களும் ஒசாமா பின்லேடனை நன்கறிந்து வைத்திருந்தனர். அனைவரும் அவரைப் பற்றி நல்ல அபிப்பிராயத்தையே கொண்டிருந்தனர். 1982 களில் நான் இலண்டனில் இருந்த போது




இலண்டனில் இருந்த ஒரு ஆப்கான் போராளியைச் சந்தித்தேன். (யுத்தத்தில் காயமடைந்து சிகிச்சைக்காக இலண்டனில் தங்கியிருந்தார் அவருடன் நான் ஆப்கானிஸ்தான் பற்றி உரையாடிக் கொண்டிருந்த போது உசாமாவின் பெயர் வந்தது. அப்போது அவர் கூறினார். உசாமா ஒரு அபூர்வமான மனிதர். அதனை நீங்கள் அவரின் கண்களிலே கண்டு கொள்ளலாம். அவர் அல்லாஹுவுக்காகவே போராடுகிறார். அவரைப் போன்று நான் எவரையும் காணவில்லை. அவர் ஒரு உண்மை முஜாஹித் ஆவார். மிகவும் உரத்த குரலிலேயே அவர் இதனைக் கூறி முடித்தார்.

சற்று நேர மௌனத்தின் பின் அவர் மேலும் குறிப்பிடும் போது "உசாமா விரைவில் ஷஹீதாக்கப்பட மாட்டார். ஏனெனில் அவரைப் போல் இஸ்லாமிய உலகில் இஸ்லாத்திற்கு எதிரான எதிரிகளுடன் சமர் புரிவதற்கு இன்று யாருமேயில்லை என்றார். அப்படி என்னிடம் கூறிய ஆப்கானிய போராளி ஒரு இளைஞரல்ல. ஆப்கானின் மிக முக்கிய போராளியாக இருந்தவர் அவர். வயது 45க்கும் மேற்பட்டவர். அறிவு முதிர்ச்சியுள்ளவர்.

1980 இல் ஆப்கான் மீதான சோவியத் யூனியன் படையெடுப்பைத் தொடர்ந்து உஸாமா ஜிஹாத் குழுவில் இணைந்து கொண்டார். அவரின் போராட்டச் சாதனைகள் ஜிஹாத் குழுவில் அவர் இடம்பெறுவதற்கு முன்னதாக நிகழ்த்திய சாதனைகள் போக்குகளை விட மனதில் ஆழப் பதியக் கூடியவை. ஆகவே, அவர் கூறிய விடயங்களிலிருந்து நான் குறிப்புக்களை எடுத்தேன். அன்று முதல் அதற்கு முன் எப்போதும் இல்லாத அளவிற்கு ஒசாமாவின் பால் எனது கவனத்தை அதிகப்படுத்தினேன்.

உசாமா பின்லேடன் அமெரிக்காவுக்கு எதிராகப் போர்ப் பிரகடனம் செய்த ஏகமனிதன். உள்நாட்டில் பரந்துபட்ட வளங்களை மாத்திரம் அடியாகக் கொண்டு அமைந்ததாகவே இப்போர்ப் பிரகடனம் காணப்படுகிறது. இது இஸ்லாமிய ஆப்கானிய பயங்கரவாத அமைப்புகளின் ஒட்டுமொத்த வடிவமாகும். மேலதிகமாக இவற்றோடு மத்தியக் கிழக்கு, தென் மேல் ஆசியா, இஸ்லாமிய உலகின் ஏனையப் பகுதிகளைச் சேர்ந்த வளங்கள் பலவும் இவற்றோடு வந்திணைந்து கொள்கின்றன. காலம் எனது சந்திப்புக்களை விரிவுபடுத்தியது பல உத்தியோகஸ்தர்கள், போராளிகள், பயங்கரவாதிகள், படைத்தளபதிகள் மற்றும் பல பாகங்களைச் சேர்ந்த பல்வேறு விடயங்களுடன் தொடர்புபடுகின்ற பல தனிநபர்களைச் சந்தித்தேன். இத்தகைய சந்திப்புகள் பல விடயங்களை, தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு எனக்கு வாய்ப்பாக அமைந்தது என தனது நூலின் முன்னுரையில் எழுதுகிறார்.

பொடன்ஸ்கி என்ற இந்த நூலாசிரியர் அமெரிக்க உளவு ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர். ஏலவே நாம் கூறியதுபோல் உஸாமாவையும் அவருடன் நெருங்கிய பல்வேறு அமைப்புக்களையும் தனது நூலில் பயங்கரவாத இயக்கங்களாகவே அடையாளம் காண்கிறார். இவருடன் தொடர்பு வைத்திருந்த பல்வேறு நபர்கள் இன்று உஸாமாவை சார்ந்தவர்களாய் அதிகமாக கண்காணிக்கப்படுபவர்களாகவும் சந்தேகத்திற் குரியவர்களாகவும் பார்க்கப்படுகின்றனர். இவர்களை வேட்டையாடுவதற்கான நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதாகவும் அவர்களுக்காக தான் மிகுந்த கழிவிரக்கம் கொண்டுள்ளதாகவும் பொடன்ஸ்கி அண்மையில் ஓர் நேர்காணலில் தெரிவித்திருந்தார்.

ஒரு பொறியியளானின் போராட்டம் அடுத்த இதழில் தொடரும்.......

## புகழ் பெற்ற ஜோக்ஸ்



### உண்டியலில் பணம்

தன் மகனை அழைத்த தந்தை, "நாம் இருவருமே இனிமேல் தவறு செய்யக் கூடாது. யார் எந்தத் தவறு செய்தாலும் அதற்கு அபராதமாக இந்த உண்டியலில் ஒரு ரூபாய் போட வேண்டும். அப்படிச் சேரும் தொகையைக் கோவிலுக்குத் தந்து விட வேண்டும்" என்றார்.

மகனும் இதற்கு ஒப்புக் கொண்டான்.

அவரின் திட்டம் அப்படியே நடந்தது.

தீடீரென்று அவர் உடல்நிலை மோசமாயிற்று. உண்டியலில் இருந்த பணத்தை எல்லாம் கோவிலுக்குத் தந்துவிட்டு மருத்துவ மனையில் சேர்ந்தார்.

மகனைப் பார்த்து, "நான் இல்லாத போதும் இந்தப்பழக்கத்தை விட்டு விடாதே. ஒரு தவறுக்கு ஒரு ரூபாய் உண்டியலில் போட்டுவிடு" என்றார்.

மருத்துவமனையில் மூன்று மாதம் தங்கிய அவர் உண்டியலைத் திறந்து பார்த்தார். அதில் ஒரே ஒரு ரூபாய் தான் இருந்தது.

மகிழ்ச்சியடைந்த அவர் தன் மகனை அழைத்தார். "இந்த மூன்று மாதத்தில் ஒரே ஒரு தவறுதான் செய்தாயா?" என்று கேட்டார்.

"இல்லை அப்பா! உண்டியலில் 300 ரூபாய் பணம் சேர்ந்தது. என்றான் அவன்.

"அந்தப் பணத்தை கோவிலுக்குத் தந்து விட்டாயா?" என்று கேட்டார் அவர்.

"அப்[illegible]ண்டியலைத் திறந்து அந்தப் பணத்தை நானே எடுத்துக் கொண்டேன். அந்தத் தவறுக்காக நீங்கள் சொன்னபடி ஒரு ரூபாயை உண்ணடியலில் போட்டு விட்டேன்" என்றான் அந்தக் கெட்டிக்கார மகன்.

## திருமலை முஸ்லிம் ஜவுளிக்கடையில் உடை அணிந்து பார்க்கும் பெட்டிக்குள் வீடியோ கெமரா எனும் விஷமம்! உணர்ச்சிபூர்வமான பிரச்சாரம். முஸ்லிம்களின் வர்த்தகத்தை ஒழிக்கச் சதி!

திருமலை நகரம் கடந்த வாரத்திலிருந்து அல்லோலகல்லோலப்படுகிறது. திருமலை நகரில் அமைந்துள்ள முஸ்லிம்களுக்குச் சொந்தமான "நவாமிலாஸ்" ஜவுளிக் கடையின் உடையணிந்து பார்க்கும் அறையில் நிர்வாணப் படமெடுக்கும் வீடியோ கமெரா பொருத்தப்பட்டுள்ளது என்ற செய்தி காட்டுத் தீபோல் விஷமிகளால் பரப்பப்பட்டதே இவ்வதிர்ச்சிக்குக் காரணம். பொலிசார் வந்தனர். பொடியன்கள் வந்தனர். அப்படியொன்றும் அங்கில்லை. நவாமிலாஸ் ஜவுளிக் கடை உரிமையாளர்கள் துண்டு பிரசுரம் அச்சடித்து இது திட்டமிட்ட சதியென பகிரங்கமாகச் சொல்லியும் இன்னமும் அத்தகைய விஷமப் பிரச்சாரம் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அப்படியானால் இதற்குப் பின்னால் திட்டமிட்ட சதி ஒன்று இருக்கிறது என்பதைத் தவிர வேறொன்றையும் சொல்லவே முடியாது! "மானம் உள்ள மக்களே!" என்ற தலைப்பில் திருமலை மாவட்டப் பெண்கள் நலன்புரி மன்றம் ஒரு துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டுள்ளது.

இத்துண்டுப்பிரசுரத்தைப் பார்க்கும், போது இத்திட்டமிட்ட பிரச்சாரத்தின் நோக்கம் அனைவருக்கும் தெரிந்து விடும். வாசகர்களே! உங்கள் பார்வைக்கும்... "நவாமிலாஸ்" ஸ்தாபனம் நீலப்படத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளது. நமது பெண்களுக்கே தெரியாமல் அவர்களது மானத்தை விற்றுப் பிழைக்க நினைத்ததை எவ்வாறு மன்னிப்பது? ஒரு இனம் பலமாக இருப்பது அவ்வினத்தின் மானத்தில்தான் தங்கியுள்ளது. இவ்வவமானத்தைப் பாாத்துக் கொண்டிருக்க நாம் பாலகர்கள் அல்ல. இன்று தெரிந்தது ஒரு நவாமிலாஸ். தெரியாமல் எத்தனை நவாமிலாஸோ? நவாமிலாஸுக்கு மானமுள்ள ஒரு பெண்ணும் செல்லக் கூடாது. ஒரு இனத்தின் ஒருமைப்பாட்டையும் மானத்தையும் அவ்வினமே கடைப்பிடிக்க வேண்டும். மாற்று இனத்தின் தொடர்புகள் மட்டுப்படுத்தப்பட வேண்டும்." இப்படித் தொடர்கிறது அப்பிரச்சாரம். இது இன்று திருமலையில் நடக்கிறது. நாளை....

*அலி அக்பர் திருமலை*

## எங்கே செல்கின்றன நமது பாதைகள்

விடத்தல் தீவு றுஸ்தா

அங்கம் 5

'எங்களுக்கு நன்மை தரும் என்றுதான்
உங்களுக்குத் தீமை செய்தோம்
உங்களுக்கு செய்த தீமையால்
எதிர்பார்த்த நன்மையின்னும்
கைகூடவில்லை'

என தொடர்கிறது அந் நையாண்டிக் கவிதை. இதில் வெளியேற்றியோரின் உளப்பாங்கை நன்கு ஆராய்ந்து நிதர்சனமாய்ச் சொல்லப்பட்டிருந்தது.

அக்காலப்பகுதியில் தோற்றம்பெற்ற கவிதைகளில் வியப்பு, சஞ்சலம், அச்சுறுத்தல், வறுமை, போலித்தனம் போன்று இன்னும் பல தோற்றம் பெற்று வெளிவரலாயின.

"கிழிந்த பாயில் புதுமணத்
தம்பதிகளின் முதலிரவு நடக்கும் -
அதே பாயில் பிரசவமும் நடக்கும்"

என எஸ். எச். நி".மத்தின் வா ஊருக்குப் போவோம் கவிதை நூலில் வேதனைப்படக் கூடிய வாழ்வியலை யதார்த்தபூர்வமாகக் காட்டப்பட்டிருந்தது.

"நாம் வெளிச்சென்ற பின்னும்
நல்லூர் அழுததாம், எம்மைக்
காணாமல் ஏழாலை அரற்றியதாம் -
பாங்கு சப்தம் கேட்காமல்
புதுப்பள்ளிச் சந்தி புலம்பியதாம் -
சனப்புழக்கம் காணாமல் சோனகத்
தெரு மயங்கியதாம்"

என்று மொஹிதீன் ராஜா கவிதையில் தன் புலப்பாடுகளை விபரிக்கிறார்.

உன் குடிலில் நான் ஒதுங்க -
எனக்கு நீ இடமீந்தாய் வரவேற்று
உன் ஒரு பிடி கவளத்தை
எனக்கூட்டி பசியாற்றினாய் -
தேற்றி
உன் இன்னொரு
உடுமானத்தை எனக்கணிந்து
அபிமானமும் காத்தாய் பத்திரமாய்"

என இழப்பினூடு தான் கண்ட சகோதர வாஞ்சையை மனம் நெகிழ சொல்கிறார் முல்லை முஸ்ரிபா.

கொதித்தெழுகின்ற வாழ்தலுக்கான இழுபறிகளோடு தன்மானப்பிரச்சனைகளையும், தன் இனத்தின் கடமையையும் அடிக்கடி நாக்குத் தெறிபடுமளவிற்கு எங்கும் எதிலும் அறைகூவல்விடும் வ.ஐ.ச. ஜெயபாலன் வடமாகாண முஸ்லிம்களின் பலாத்கார வெளியேற்ற நிகழ்வுகளை துயரத்தோடு இப்படிப்பகிர்கிறார்

"என்ன கொடுமை இழைத்தோம்
தமிழர்களே!
என்ன கொடுமை நாங்கள்
இழைத்துவிட்டோம்.
என்னுடைய வாழ்நாளில் - வட
புலத்து முஸ்லிம் மனிதர்களே
உம்போல் இன்னுமோர் மகத்தான
இனத்தவரை கண்டதில்லை.
இதுபோல மான்புடைய
உறவுகளை அறிந்ததில்லை"

என தம்முடைய இன ஒற்றுமையில் வேண்டுதலையும், குற்றமிழைத்த பாவத்தையும் மௌனம் கலந்து பாடுகிறார்.

வட புல முஸ்லிம்கள் சுதந்திரமாகவும் தன்னாதிக்க உரிமைகளோடும் மீண்டும் வட புலம் வாழ்தலுக்குரிய நாளைப்பார்த்து திடகாத்திரத்தோடு பாடுகிறார் உவைஸ் கனி இப்படி.

"நித்தியமான என் பூமியில்
புனர்வாழ்வு உதிப்பது
அவசியமாவதால் என்
தேசக்காற்றே...
ஒருவிரலறுபட்ட தட்சனின்
முனகலைப்போல
என் மனசு கத்தினாலும் -
அந்தக் காற்றை நான் சுவாசிக்க
வருவேன்"

என்று பாடுகிறார்.

தமது குருதியையும் வியர்வையையும் தம் மண்ணில் செலுத்தி வேர் விட்டு வளர்த்து விட்ட வட புல முஸ்லிம்களை ஓடுங்கள் என பரதேசிகளாக்கியபோது அவ்வப்போது தோற்றம் பெற்ற புலம் பெயர் கவிதை எக்கச்சக்கமாக இருப்பினும் ஒரு சிலதே இங்கு இடவசதி கருதி தரப்பட்டிருக்கிறது.

தீர்க்கமான முடிவுகளை இனி எப்போது முடிவுசெய்யலாம் ? வட மாகாண முஸ்லிம்களின் அல்லல்படுத்தப்பட்ட வாழ்க்கையில் மிகவும் துக்ககரமான சம்பவம். இறை வழிபாடுகளுக்காய் கட்டப்பட்ட வடபுல பள்ளிவாசல்களின் நிலமைகள்தான் மிகவும் வேதனை அளிக்கிறது.

நூற்றுக்கும் மேற்பட்ட பள்ளிவாசல்கள் உடைக்கப்பட்ட அல்லது வேறு தேவைகளுக்கும் பாவிக்கப்பட்டும் குர் -ஆன், ஹதீஸ் நேர்வழி நூல்கள் கிழித்தெறியப்பட்டும் எரியூட்டப்பட்டும் மலசலகூடங்களாய் அவை பாவிக்கப்பட்டும் காட்சி தருவதானது எங்களுக்கு எவ்வளவு வேதனையை

### வடக்கு முஸ்லிம்களின் துன்பம் கலந்த வாழ்க்கை



தந்திருக்கும் என்று இலேசில் சொல்லிவிட முடியாது.

நகர நெருக்கடிமிக்க யாழ் முஸ்லீம்களின் பொருளாதார அமைப்பு முறைகளும் அசையாச் சொத்துக்களின் வியாபாரப் பாவனைகளும் நடுமத்தியில் நகரை மையப்படுத்தி முக்கிய வியாபார அமைப்பாதாரங்களுக்கு இலகுபடுத்தப்பட்ட சூழலில் அவர்களின் சுதேசிய பணிப்பின் பின்னர் யாழ் முஸ்லிம்கள் அடைந்த தன்மானப் பிரச்சினையும் வாழ்விடப்பகுதிகளின் கேள்விகளும் மிகவும் சிந்திக்கப்பட வேண்டியதுமாகும்.

அதுபோலவே வன்னி மக்களின் பெரும்பகுதி தோட்டக்காணிகளாய் இருப்பதன் மூலம் அவர்களுக்கான செய்கை படுத்தப்பட்ட நிலங்களிலிருந்து அறுவடைகள் ஒரு தசாப்த காலத்திற்கு மேல் விவசாயம் செய்யப்படாததனால் இன்று அவைகள் வெறும் தரிசு நிலங்களாகி காட்சி தருகின்றன.

இதனை மையப்படுத்திய வர்த்தக சூழல் வேறுசில வட புல மாவட்டங்களில் காணப்படாதுவிட்டதும் விவசாயத் தோட்டக் காணிகளின் நூற்றுக்கணக்கான காணிகள் காடேறிக் காட்சி தருவதும் ஒரு புறமிருக்க மூன்றாவதாக வடபுல முஸ்லிம்களின் பலரது வாழ்வில் ஒளியேற்றிய கடற்றொழில் பற்றியும் குறிப்பிடுதல் வேண்டும்.

மீன் பிடி தவிர்த்து கடல் அட்டை, சங்கு போன்ற கடல் சார் தொழில்களிலும் மன்னார் முஸ்லிம்களில் பலர் முழு நேரத் தொழிலாக மீன்பிடியைக் கைக்கொண்டு வந்துள்ளனர். வலுக்கட்டாய வெளியேற்றத்திற்கு பிற்பாடு இவர்களின் வள்ளங்கள் தோணிகள், வலைகள் பறிக்கப்பட்டும், கடத்தப்பட்டும் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கிய துன்பியலின் நடவடிக்கைகளால் இவர்களின் குடும்பங்கள் நாட்களாய் பட்டினி கிடந்ததை நாமறியோம். வட புல முஸ்லிம்களின் தொழில்சார் விடயங்கள் இப்படியிருக்க இன்று நமது மண், நமது காற்று, என உரத்துக் கத்திக்கொண்டிருப்போர் தமது காணி நிலங்களையும், வீடு வாசல்களையும், கடைகளையும், தமிழ் சகோதரர்களுக்கு விற்றுக் கொண்டு வருவதானது உசிதமான செயற்பாடாகத் தெரியவில்லை.

மன்னார் பகுதியில் பல வீடுகளும், வயல் காணிகளும், கடைகளும் விற்கப்பட்டு முஸ்லிம்களின் அடையாள மிச்சங்கள் தமது சொந்தம் விட்டுப்போய்க் கொண்டிருப்பதானது நமது தாயகக் கோட்பாட்டுக்கு விழுந்திருக்கும் பலமான அடியாகும். இவை கலந்தாலோசிக்காத தீர்க்கமில்லாத முடிவுகளாகும் அவைகளின் பெறுபேறுகளும் மிகவும் வேதனையான விளைவுகளையே நமது சமூகத்துக்கு தரப்போகின்றன.

பண்பாட்டை இழக்காததன் காரணமாகவே நாம் அகதிகளாக்கப்பட்டோம். பட்டினி கிடந்து செத்தாலும் நமது ஆதாரங்களை பணமாக்குவது கேவலம் கெட்ட முடிவுகளாகும். நமக்கேற்ற தோற்றப்பாடுகள் மீண்டும் போய் வாழ்தலுக்கு ஏற்றதாய் இருக்கின்றதா ?

முற்றிலும் சந்தேகத்துக்கும், காய் நகர்த்தலுக்கும் உட்படுத்தி கேள்விக்குறியாய் போயுள்ள சமாதான பேச்சுகள் வெற்றியடைந்து நமது ஆதங்க கேள்விகளும், எதிர்பார்ப்புகளும் வெற்றிபெறுமா என்பது பற்றி யார் கைகளில் அதிகாரமிருக்கிறதோ அவர்களே அறிவர். வடமாகாண இடம் பெயர்ந்த முஸ்லிம்களுக்காய் நீதியையும், சமாதான கரங்களையும் தரவேண்டும் என்பதே எமது பேரவாவாகும்.

(பயணம் தொடரும்...)

முஸ்லிம் குரலின் வளர்ச்சிக்கு பக்க பலமாக இருங்கள்

நமக்கான பத்திரிகைகளின் அவசியம் குறித்து நீங்கள் அறிவீர்கள். மக்களாகிய உங்களின் ஆதரவுடனேயே நமது பத்திரிகையை தொடர்ச்சியாக வெளிக்கொணர முடியும்! சந்தாதாரர்களாக சேருங்கள்! சகோதர சகோதரிகளுக்கும் அறிமுகப்படுத்துங்கள்! பத்திரிகையை வாங்கி விநியோகியுங்கள்!

சந்தா விபரம்!

| | |
|---|---|
| 3 மாதங்கள் - (12 இதழ்கள்) | 180/ |
| 6 மாதங்கள் - (24 இதழ்கள்) | 360/ |
| 1 வருடம் - (48 இதழ்கள்) | 720/ |

(தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்)

காசோலையாகவோ, காசுக் கட்டளையாகவோ எமக்கு அனுப்பி வைக்கலாம். பத்திரிகையை விநியோகிக்கும் எமது ஊர் பிரதிநிதிகளிடமும் நேரடியாக கையளிக்கலாம். காசுக் கட்டளையாக் அனுப்புவதாக இருந்தால் Muslim Kural Publiction Slave Island Post office எனக் குறிப்பிடவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைக்கால நிர்வாக சபைக்கென முஸ்லிம் காங்கிரஸ் வரைந்துள்ள நகல் குறித்து ஜனாதிபதிக்கு விளக்கமளிக்கப்படும். இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதியை இவ்வாரம் சந்திக்க திட்டமிடப்பட்டிருக்கிறது என்கிறார் மு.கா. செயலர் எம்.ரி. ஹஸன் அலி - தினகரன் (1ம் பக்கம்) ஜூலை 28.

ஹஸன் அலியைப் போல் பெரிய அரசியல் அறிவில்லாத பாமரமுஸ்லிம் மகனாகிய நான், ஹசன் அலியிடம் மூன்று பிரதான கேள்விகளையும் சில துணைக் கேள்விகளையும் கேட்கலாம் என நினைக்கிறேன். பதிலளிப்பாரா ஹசனலி!

01. சந்திரிகா முஸ்லிம் சமூகத்திற்கு நன்மைகள் எதுவும் செய்யப்போவதில்லை. ரணில் விக்ரமசிங்க முஸ்லிம் சமூகத்திற்கு ஆயிரமாயிரம் நன்மைகள் செய்யக்காத்திருக்கிறார் என இரவோடு இரவாக ஓடிப்போன நீங்கள் - ரணில் விக்ரமசிங்கவின் இவ்வரசாங்கம் பதவிக்கு வந்ததன்பின் முஸ்லிம் சமூகத்திற்கு செய்த நன்மைகளை குறிப்பிட்டுக் கூறமுடியுமா? வாழைச்சேனை,மூதூர் முஸ்லிம்களுக்குச் செய்தது நன்மையா? முஸ்லிம்களை சதத்திற்கும் கணக்கெடுக்காமல் புலிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது முஸ்லிம் சமூகத்திற்கு ரணில் விக்ரமசிங்க செய்த நன்மையா? அண்மையில் இடைக்கால சபை நகல் திட்டத்தில், மு.கா. தலைவரை மிக எளிதாக ஏமாற்றி, முஸ்லிம்களை காவு கொடுக்க சதிவலை பின்னியது முஸ்லிம்களுக்கு ரணில் செய்த நன்மையா?



# சொன்னதற்கு கேட்கிறார்கள்!

02.அதுசரி, சந்திரிகாவிடம் உங்கள் கட்சி வரைந்த நகல்திட்டம் தொடர்பாக விளக்கமளிப்பதற்கு முன், உங்கள் நம்பிக்கைக்குரிய தலைவரான ரணில் விக்ரமசிங்கவிற்கு நீங்கள் முதலில் விளக்கமளித்து விட்டீர்களா? உங்கள் நகல் வரைபை அவர் ஏற்றுக் கொண்டுள்ளாரா? அதனை ரணில் ஏற்றுக் கொண்டுள்ளார் என நமது மக்களுக்கு உங்களால் உறுதியான வாக்குறுதியைத் தர முடியுமா? "எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே" என்ற சினிமாப் பாடலையாவது நீங்கள் கேட்டதில்லையா?

03. அண்மைக்காலமாக ஊடகங்களுக்கு அறிக்கைவிடும்போது, "செயலாளர் நாயகம்" என அறிக்கை விடுகிறீர்களே "நாயகம்" என்ற சொல்லுக்கு இஸ்லாமிய நோக்கில் என்ன அர்த்தம் என்று உங்களுக்குத் தெரியுமா? செயலாளர் என அறிக்கை விட்டால் உங்கள் அரசியல் அறிவையும் அந்தஸ்தையும் தவறாக எடைபோட்டுவிடுவார்கள் என அஞ்சுகிறீர்களா? தலைவர் மரணித்ததன்பின் ஒன்றுமே சரியில்லையென எனது மூத்தவாப்பா அடிக்கடி சொல்லிவருகிறார். ஒரு வேளை இந்த "நாயகம்" விசயமும் அவரைப் பாதித்திருக்கக் கூடுமல்லவா? இப்போதைய தலைவர் அப்போதைய செயலாளராக இருக்கும்போது ஊடகங்களுக்கு ஒருபோதுமே "செயலாளர் நாயகம்" என அறிக்கை விடுவதில்லையே. அதனையாவது இப்போதைய தலைவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள நீங்கள் முயற்சிக்கவில்லையா? அல்லது இதுவரை தலைவராவது இந்த விடயத்தில் மட்டுமாவது உங்களைத் திருத்த முயற்சிக்கவில்லையா?

பாமர முஸ்லிம் மகனின் இக்கேள்விச் சந்தேகங்களுக்கு முஸ்லிம்களின் அறிக்கை அரசியல் மேதையான ஹசன் அலி பதிலளிப்பாரா?

ஏ.எம். அப்துல் லத்தீப்,
வண்டில் மாட்டுத் தொழிலாளி, ஒட்டமாவடி.

*சகோதரர் ஹசன் அலி அவர்கள் நமது சகோதரர் ஒருவரிடமிருந்து வந்த இக்கோள்விகளுக்கு சுருக்கமாக பதில் அளிக்க முன் வருவாரானால் முஸ்லிம் குரல் உவகையுடன் அப்பதிலினை பிரசுரிக்க தயாராக இருக்கிறது.*

*இனி நமது மக்கள் நமது தலைமைகளிடம் கேட்க வேண்டிய கேள்விகள் இருந்தால் எமக்கு அனுப்பி வையுங்கள். கேள்வி கேட்பவர்கள் தங்கள் Photo வையும் அனுப்பினால் அதனையும் இணைத்து பிரசுரிக்க தயாராக இருக்கிறோம்.*

*தயவுசெய்து கேள்விகளை எழுப்புவோர், தனிப்பட்ட விடயங்களை எழுதாமல் மனித நாகரீகம் கருதி பொதுவான விடயங்கள் தொடர்பான கேள்விகளை எழுதி அனுப்பவும்.*

*ஆசிரியர்.*

# பிறந்த தினம்

- உஸ்மான் மரிக்கார்

பிறந்த தினம்
- உஸ்மான் மரிக்கார்

வருடா வருடம் வந்து போகிறது பிறந்த தினம். நீயும் கோலாகலமாகக் கொண்டாடுகிறாய். நீ பிறந்து எத்தனை வருடங்களோ அத்தனை மெழுகுவர்த்திகளை அணைக்கின்றாய். எரியும் மெழுகுவர்த்திகளை அணைக்கின்றாயே, அணைந்திருக்கும் மெழுகுவர்த்திகளை நீ ஏற்றி வைத்ததுண்டா?

உனது நண்பர்களுக்கு கேக் வழங்குகின்றாய். பசியால் வாடி வதங்கியவனுக்கு ஒரு பாண்துண்டு கொடுத்திருப்பாயா?

வசதி வாய்ந்தவர்களை வாஞ்சையுடன் அழைத்து அறுசுவை விருந்து படைக்கின்றாய். வறுமையில் வாடும் ஓர் ஏழை மனிதனுக்கு ஒரு பிடிசோறு கொடுத்திருப்பாயா?

உனது நண்பர்களை உபசரித்து பலவிதமான பானங்கள் பரிமாறுகிறாய். தாகத்தால் தவிக்கும் ஒரு வழிப்போக்கனின் தாகம் தணித்திருப்பாயா?

உனக்காக எத்தனையோ பேர் வியர்வை சிந்தி இருக்கின்றனர். யாருக்காவது நீ வியர்வை சிந்தியதுண்டா?

உனக்காகப் பலர் கண்ணீர் சிந்தியிருக்கின்றனர். எவருக்காகவாவது நீ கண்ணீர் சிந்தியதுண்டா?

உனக்காக இரத்தம் சிந்தியவர்கள் இருக்கின்றனர். பிறருக்காக நீ இரத்தம் சிந்தியதுண்டா?

உனக்காக எத்தனை பூக்கள் கொய்யப்பட்டன? எத்தனை பழங்கள் பறிக்கப்பட்டன? எத்தனை மரங்கள் வெட்டப்பட்டன? என்றாவது நீ ஒரு மரம் நட்டதுண்டா?

நீ இப்போது சிரித்துக் கொண்டிருக்கலாம். ஆனால் அந்தச் சிரிப்பு அபலைகளினதும், அப்பாவிகளினதும் கண்ணீருக்குக் காரணமாக இருந்துவிடக் கூடாது என்பதை நீ மறந்து விடாதே.

அதேபோல் ஒருக்கால் நீ அழுது கொண்டிருக்கவும் கூடும். ஆனால் அந்த அழுகை உனது எதிரிகளினதும் அயோக்கியர்களினதும் சிரிப்புக்கும் நகைப்புக்கும் காரணமாக இருந்துவிடக் கூடாது என்பதையும் நீ மறந்து விடாதே.

அன்று இந்த வையகத்துக்கு வந்த போது நீ, நிர்வாணமாகத்தான் வந்தாய். ஆயினும் உன் இதயமோ ஒரு வெள்ளைத் தாள் போல் புனிதமாயிருந்தது.

இன்றோ நீ அழகிய ஆடை அணிந்திருக்கிறாய். ஆயினும் உன் இதயமோ காபன் தாள்களாய் கறைபடிந்து போயிருக்குது.

அழுக்கடைந்த உனது ஆடையை நீ அடிக்கடி சலவை செய்கின்றாய். ஆனால் தூய்மை இழந்த உனது உள்ளத்தை நீ துவைத்ததுண்டா?

வாழ்நாள் அதிகரிக்கப்பட வேண்டும் என்று அன்பர்களால் நீ அடிக்கடி வாழ்த்துப் பாடுகின்றாய். வருடங்கள் தானா வாழ்க்கை?

வருடந்தோறும் வயதுகளை எண்ணும் நீ உனது சாதனைகளை எண்ணியதுண்டா?

தனது பிறந்ததினத்தை தானே கொண்டாடியதில்லை. உலகம் பிறந்த தினம் கொண்டாடும் உத்தமர்கள் தனது பிறந்த தினத்தை தானே கொண்டாடியதுமில்லை.

நீ பிறந்த தினம் கொண்டாடக் கூடாது என்று நான் சொல்லவரவில்லை; ஆயினும் நீ அதைக் கொண்டாடும் விதம்தான் தவறு என்பேன்.

நீ உன் பிறந்த தினத்தை புறக்கணித்து ஒதுக்கித் தள்ளி விடாதே. அதற்காகக் கூத்தாடிக் கும்மாளமும் அடிக்காதே. அதேபோல் இந்த பூமியில் பிறந்து விட்டதற்காக புலம்பித் திரியாதே.

ஒரு விசேட காரணத்தின் பொருட்டே எல்லாம் வல்ல இறைவன் உன்னை இந்த பூமியில் படைத்திருக்கின்றான் என்பதை நீ நிதமும் நினைவில் நிறுத்து. அவன் படைத்த அனைத்துக்கும் அர்த்தம் உண்டு. பசும் புல்லில் இருந்து பறக்கும் புள் வரை அவன் காரண காரியத்தோடு தான் படைத்திருக்கின்றான். ஆயின் அவனது சிருஷ்டிகளின் சிகரமான உனக்கு, உனது பிறப்பிற்கு, உனது வாழ்க்கைக்கு மட்டும் பொருள் இல்லாது போய்விடுமா? அந்தக் காரணத்தைக் கண்டு பிடித்து உன் வாழ்க்கையை நீ அர்த்த புஷ்டியுள்ளதாக ஆக்குவாயாக.

பிறந்த தினம் உன் வாழ்க்கைப் பயணத்தின் மைல்கல் என்பதை மறந்து விடாதே. அன்றைக்கு நீ கட்டாயமாகச் செய்ய வேண்டிய இரண்டு காரியங்கள் இருக்கின்றன.

1. திரும்பிப் பார்த்தல்
2. திட்டமிடுதல்

இன்று உன் பிறந்த தினம்.
உனது இறந்த காலத்தை நீ திரும்பிப் பார்த்ததுண்டா? கடந்த காலத்தில் நீ நடந்து வந்த பாதையை நீ திரும்பிப் பார்த்ததுண்டா? அதேபோல் உனது எதிர்காலத்தை நீ திட்டமிட்டதுண்டா? இனி வருங்காலத்தில் இந்தப் பாதையில்தான் பயணிக்க வேண்டும் என்று நீ திட்டம் தீட்டியதுண்டா?

கடந்த பிறந்த தினத்திலிருந்து இந்தப் பிறந்த தினம் வரை "நான் என்னென்ன சாதித்தேன்?" என்று உன்னையே நீ கேட்டதுண்டா? இந்தப் பிறந்த தினத்திலிருந்து அடுத்த பிறந்த தினத்திற்குள் "நான் என்னென்ன சாதிக்கப் போகிறேன்?" என்று உனக்கு நீயே கட்டளை போட்டதுண்டா?

உலகத்திடமிருந்து நீ எதைப் பெற்றுக் கொண்டாய் என்பதை விட, இந்த உலகத்திற்கு நீ எதைக் கொடுத்தாய் என்பதே மிகவும் முக்கியம்.

உனது பிறப்புக்காக பூமித்தாய் பூரித்து ஆனந்தக் கண்ணீர் சிந்த வேண்டும். அதேபோல் உனது இறப்புக்காக அவள் துக்கம் தாளாது சோகக் கண்ணீர் சொரிய வேண்டும்.

உனது பிறந்த தினத்தை நீயே கொண்டாடுவது பெருமைக்குரிய விடயமல்ல; அதை இந்த உலகம் கொண்டாட வேண்டும். அதுதான் பெருமைக்குரிய விடயம்.

அதற்கான ஆயத்தங்களை இனியாவது செய்வாயாக.

அடடா! ஒரு முக்கிய விடயத்தை மறந்துவிட்டேன் பார்த்தாயா? இன்று உன்னுடைய பிறந்தநாள் உனக்கு என்னுடைய மனப்பூர்வமான பிறந்த நாள் வாழ்த்துக்கள்!

நடந்த கதையின் நகல்

# ரமீஸா.... பிறப்பால் அநாதையல்ல.

- அபூ ருஸைக்

## ஆனால், இன்று....?

கொழும்பு நகர அபிவிருத்திகள் அவ்வளவாக ஏற்பட முன், அதாவது சுமார் 30, 35 வருடங்களுக்கு முன் கொழும்பில் மாளிகாவத்தை எப்படியிருந்தது? ஒரு சேரிப் பகுதியாக ஒரு சதுப்பு நிலமாக, கொட்டில் வீடுகளும், குடிசைகளும் நிரம்பியுள்ள ஒரு பகுதியாகத்தான் இருந்தது.

அத்தகைய மாளிகாவத்தை சூழலில் தான் ரமீஸா பிறந்தாள். ஒரு கொட்டில் வீட்டில் - அன்றாடம் காய்ச்சிகளாக வாழ்ந்து வந்த ஒரு தம்பதியருக்கு மூத்தவளாகப் பிறந்தவள்தான் இந்த ரமீஸா...

இப்போது அவளுக்கும் வயது முப்பதைத் தாண்டி விட்டது. ஆனால், உம்மாவும் இல்லை. வாப்பாவுமில்லை. உடன் பிறப்புக்களுமில்லை. அப்படியானால் அவர்களெல்லாம் இல்லையா? வபாத்தாகிவிட்டார்களா? மரணம் ரமீஸாவை தன்னந் தனியாக ஆக்கிவிட்டதா?

இப்படி வினாக்களைத் தொடுத்தால் ஒரு வாழ்வுக்காக கனாக்காணும் இந்த ரமீஸாவின் விழிகளில் நீர் மணிகள் அணிவகுக்கத்தான் செய்கின்றன.

ரமீஸா ஏன் அழுகிறாள்?

ரமீஸாவின் தாயோ, தந்தையோ, உடன் பிறந்த சகோதரர்களோ இறந்து போய் விடவில்லை. இந்த இலங்கையில் எங்கோ ஒரு மூலையில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். அப்படியானால் ஏன் இந்த ரமீஸா அழுகிறாள்?

ரமீஸாவின் நினைவுகள் பின்னோக்கிப் பார்க்கின்றன. நினைவில் பட்டவரை அந்த நாள் ஞாபகங்களை அவள் மனம் தனக்குள் அபிநயம் செய்து பார்க்கின்றது.

ரமீஸா....

இவ்வுலகில் பிறக்கும் போது தாய் தந்தையர் இருந்தனர். விரலுக்கு ஏற்ற வீக்கம் போல, வரவிற்கேற்ப ஒரு சிக்கன வாழ்வை வாழ்ந்து கொண்டிருந்தனர். வாப்பா அன்வர் கொழும்பு புறக்கோட்டை பஸாரில் லொறிகளில் சாமான்கள் ஏற்றி இறக்குவதை கண்காணிக்கும் ஒரு வேலையில் இருந்தார்.

நாளா வட்டத்தில் ரமீஸாவுக்கு ஒரு தம்பி, ஒரு தங்கையென இரு சகோதரர்கள் பிறந்தனர். காலம் ஓடியது. தம்பிக்குப் 10 வயதும், தங்கைக்கு 8 வயதுமானது. தங்கை பிறந்த சில நாட்களில் அன்வர் வாப்பா சாமான் ஏற்றிச் சென்ற லொறி ஒன்றில் "நாட்டுக்குப் போய் வாரேன்" எனச் சொல்லி சென்றவர் தான். அதன் பின் வரவேயில்லை.

"ரமீஸாவின் தாய், இன்று வருவார், கணவர் நாளை வருவார்...." என்று நாட்களை எண்ணி எண்ணி ஏமாந்தது தான் கண்ட பலன். போன கணவன் வீடு திரும்பவேயில்லை. ரமீஸாவின் அன்னையும் தேடிக் களைத்து ஓய்ந்து விட்டாள்.

கொஞ்ச நாளில் அன்வர் வாப்பா நாட்டூர் ஒன்றில் வேறு கலியாணம் முடித்திருப்பதாக வந்த செய்தி உம்மா அயலவர்களிடம்



அளவளாவிக் கொண்டிருப்பதிலிருந்து சிறுமியான ரமீஸா எப்படியோ புரிந்து கொண்டாள்.

கொஞ்ச நாட்கள் தான் ஓடியிருக்கும் ஒருவர் ரமீஸாவின் வீட்டுக்கு வந்து போகலானார். உம்மாவுடன் நெருங்கிப் பழகினார். நாளா வட்டத்தில் ரமீஸாவுக்கு அந்த வந்து போன மனிதர் "இன்னொரு வாப்பா"வானார். ஆம்! ரமீஸாவின் தாயார் மறுமணம் செய்து கொண்டார்.

குடும்பம் எப்படியோ ஊர்ந்து போயிற்று. ரமீஸாவை எந்தப் பாடசாலையிலும் சேர்க்கவில்லை. ஆனால் தம்பி - தங்கை இருவரையும் ஒரு பாடசாலையில் சேர்த்தாள். ரமீஸா மழைக்கு கூட ஒரு பள்ளிக்கூட நிழலில் ஒதுங்கி அறியாதவள்.

சிறிது நாட்களில் அந்த இன்னொரு வாப்பாவும் காணாமல் போய்விட்டார். ரமீஸாவை ஒரு வீட்டில் வேலை செய்து கொண்டு, தருவதை தின்று கொண்டு இருக்கும் படியான ஒரு வேலைக்காரச் சிறுமியாக உம்மா சேர்ந்து விட்டாள். அவ்வாறே தன் தூரத்து உறவினர்கள் எனச் சொல்லிக் கொண்டு தம்பியை ஓரிடத்திலும், தங்கச்சியை இன்னொரு வீட்டிலுமாக ரமீஸாவின் தாய் விட்டு விட்டு டுபாய்க்குப் போய்விட்டாள்... போயே விட்டாள்.

ரமீஸா படிப்படியாக வளர்ந்தாள். படிப்பறிவு எதுவுமில்லாமல் தந்த வேலைகள் எல்லாம் விரும்பியோ விரும்பாமலோ செய்து கொண்டு எப்படியோ வளர்ந்தாள். காலம் அவளுக்கு அவளளவில் விஷயங்களை உணர்த்தியது.

ரமீஸாவின் தாய் இடையில் வந்தாள். ரமீஸாவையும் வந்து பார்த்து விட்டுப் போனாள். தம்பி, தங்கைகளையும் போய்ப் பார்ப்பதாகச் சொன்னாள். திடீரென ஒருநாள் வந்த தாய் ரமீஸாவை அவ்வீட்டிலிருந்து கூட்டிச் சென்று கொழும்பில் வெள்ளவத்தைப் பக்கம் வேறொரு வீட்டில் விட்டு விட்டு மீண்டும் விமானம் ஏறிவிட்டாள்.

இந்த புதிய வீட்டிலும் ரமீஸா வழமையான "வேலைக்காரி" பட்டத்தோடே வாழ்ந்து வரலானாள். ஒருநாள் ரமீஸா "சடங்காகி விட்டாள்" இருந்தும் இல்லாத நிலையில் ரமீஸா பெரிய மனிஷியாகி அதே வீட்டில் வாழ்ந்து வருகிறாள். உம்மா... திரும்பி வரவேயில்லை.

வருடங்கள் சில ஓடின. உம்மாவை எங்கோ கண்டதாக சில செய்திகள் ரமீஸாவின் செவிகளை நனைத்தன. ஆனால், உம்மா வரவேயில்லை. உடன் பிறப்புக்களையும் அதன் பின் காணவில்லை. வாப்பாவின் முகம் மறந்தே விட்டது. இப்போது ரமீஸாவுக்கு வயது 30 முடிந்து விட்டது. ஒரு இல்வாழ்வை ரமீஸாவால் எண்ணிக் கூடப் பார்க்க முடியவில்லை. யார் முன் வந்து மணம் செய்து வைப்பர்? சமுகத்தில் இன்னும் எத்தனை ரமீஸாவோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1990 முஸ்லிம்கள் மீதான இனப் படுகொலையும், அழித்தொழிப்பும்

| திகதி | இடம் | சம்பவம் |
|---|---|---|
| ஜனவரி 29 | காத்தான்குடி | அப்துல் ரஸூல் என்பவர் சுட்டுக் கொலை |
| ஜனவரி 30 | சம்மாந்துறை | மாகாண சபை உறுப்பினர் எம்.வை.எம்.மன்சூர் சுட்டுக்கொலை |
| ஜனவரி 30 | கல்முனை | 15 வர்த்தகர்களும் 25 இளைஞர்களும் புலிகளால் கடத்தல் |
| பெப்ரவரி 2 | கல்முனை ஆஸ்பத்திரி | 5 முஸ்லிம் நோயாளிகள் சுட்டுக் கொலை, டொக்டர் ஒருவர் உட்பட 10 முஸ்லிம் இளைஞர்கள் கடத்தல். |
| பெப்ரவரி 8 | அக்கரைப்பற்று | 63 வயதுடைய விவசாயி சுட்டுக் கொலை |
| பெப்ரவரி 10 | அக்கரைப்பற்று | ஹனிபா என்ற வர்த்தகர் சுட்டுக் கொலை |
| ஜூலை 7 | அக்கரைப்பற்று | 58 பேர் |
| ஜூலை 7 | புத்தூர் | 17 பேர் |
| ஜூலை 12 | காத்தான்குடி | 160 பேர் |
| ஜூலை 20 | சம்மாந்துறை | 2 பேர் (ஏ.எஸ்.முஹம்மட் 55, காதர் முகைதீன் 30) |
| ஜூலை 21 | அக்கரைப்பற்று | 1 கமால்தீன் 35 |
| ஜூலை 24 | சம்மாந்துறை | 2 பேர் எம்.எஸ் இப்ராஹீம் 55, மரைக்கார் கால்தீன் 23 |
| ஜூலை 28 | சம்மாந்துறை | 5 பேர் முஹம்மது அலி, 29, மஜீத் 26, சலீம் 23, நௌசாட் 21 ஆதம்பாவா 21 |
| ஜூலை 30 | அக்கரைப்பற்று | 14 பேர் |
| ஆகஸ்ட் 2 | மஜீத் புரம் | 2 பேர் |
| ஆகஸ்ட் 3 | பாலமுனை | 30 பேர் |
| ஆகஸ்ட் 3 | காத்தான்குடி | 103 பேர் |
| ஆகஸ்ட் 8 | ஏறாவூர் | 03 பேர் (தாவுத் மாஸ்டர், அப்துல் கபூர், யூ எ. முகம்மட்) |
| ஆகஸ்ட், 11,12 | ஏறாவூர் | 121 பேர் |
| ஆகஸ்ட் 13 | மூதூர் | 6 பேர் |
| ஆகஸ்ட் 15 | அக்கரைப்பற்று | 2 பேர் |
| ஆகஸ்ட் 17 | ஆலிம் நகர் | 34 பேர் |
| ஆகஸ்ட் 26 | மன்னம்பிட்டி | 2 பேர் ஆதம்பாவா 57, அப்துல் ஹமீட் 38 |
| செப்டம்பர் 1 | காத்தான்குடி | 9 பேர் |
| செப்டம்பர் 24 | சாய்ந்தமருது | 3 பேர் |
| ஒக்டோபர் 12 | பொத்துவில் | 9 பேர் |
| டிசம்பர் 11 | காத்தான்குடி | 1 |



# ஷுஹதாக்கள் பற்றிய நேர்காணல்

**எனது** பெயர் கலந்தர் லெப்பை பாத்தும்மா. இறந்தவர்களில் ஒருவர் எனது அன்பு தந்தை. மற்றவர் எனது கணவர். எனது தந்தையின் பெயர் கலந்தர் லெவ்வை (ஜின்னா) எனது கணவரின் பெயர் அஹமட் லெவ்வை அப்துல் காதர். இந்தச் சம்பவம் நடக்கும் போது நான் வீட்டில் இருந்தேன். என்னுடன் எனது கணவர், பிள்ளைகளுடன் நான் வீட்டிலிருந்தேன். இஷா தொழுகைக்கான அதான் ஒலி கேட்டதும் எனது தந்தை (ஜின்னா) பள்ளி வாயலுக்குப் போய்விட்டார். இந்தச் சம்பவம் நடக்கும் போது சுமார் எட்டு மணியிருக்கும். ஒரு நபர்தான் வந்தார். அவரை என்னால் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. காரணம் இருட்டாக இருந்தது. மின்சாரமில்லை. வந்தவர் ஹாஜியார் ஹாஜியார் என்று அழைத்துக் கொண்டு வந்தார். அந்த நேரம் நான்தான் இருந்தேன்.



எனது கணவர் வீட்டினுள்ளே இருந்தார். இவர்கள் போட்ட சப்தம் கேட்டதும் எனது கணவர் வெளியில் வந்தார். எனது கணவரை கண்டதும் துப்பாக்கியுடன் நின்றவர். வாடா வெளியே என்று அழைத்தார். அந்த நேரம் பார்த்து எனது மூத்த மகள் ஓடிச் சென்று எனது கணவரைப் பற்றிக் கொண்டாள். இவர்கள் அழைத்தும் எனது கணவர் அஞ்சினவராக அவர்களின் முன் வந்தார். உடனே துப்பாக்கியுடன் எனது கணவனை நோக்கிச் சுட்டான். எத்தனை முறை சுட்டான் என்று என்னால் சரியாகச் சொல்ல முடியாது. இதனால் எனது மகளின் கையிலும் பலத்த காயமேற்பட்டது. எனது கணவர் அந்த இடத்திலேயே வீழ்ந்தார்? எனக்கு பயமாகவும் பதட்டமாகவும் இருந்தது. சுட்டவுடன் எனது கணவர் ஸ்தலத்திலேயே காலமானார். எத்தனை பேர் வந்தார்கள் என்று எனக்குச் சரியாகச் சொல்ல முடியாது. காரணம் இருட்டாக இருந்தது. ஆனால், வெளியில் அதிகமானோர் நின்றதாக அக்கம் பக்கத்தில் உள்ளோர் சொன்னார்கள். பின் வெளியில் வந்த அவர்கள் எங்கள் வீட்டின் முன்னால் நிறுத்தி இருந்த எங்கள் லொரிக்குத் தீ மூட்டி விட்டு ஓடிவிட்டார்கள். பின்னால்தான் தெரியவந்தது பள்ளிவாயலில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் எனது தந்தையும் காயப்பட்டுள்ளார். அவரை மெத்தைப்பள்ளிவாயலுக்குக் கொண்டு சென்று விட்டார்கள் என்று கேள்வியுற்று உடன் மெத்தைப் பள்ளிக்குச் சென்ற போதும் எனது தந்தையும் பொலநறுவை ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றதாக கேள்வியுற்று திரும்பி வந்தேன். ஆனால் மறுநாள் எனது தந்தையும் காலமாகிவிட்டார் என்று. எனதுயிர் தந்தையின். ஜனாஸா ஊருக்கு கொண்டு வரப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது. இச்சம்பவம் நடக்கும் போது எங்களுக்கு மூன்று குழந்தைகள். மூத்த மகளுக்கு வயது 9, பெயர் சித்தி ரிஹானா, இரண்டாவது மகன் அவருக்கு வயது 6 பெயர் முகமது ரிஸ்வி, மூன்றாவது மகள் அவருக்கு அப்போது வயது 3, அவளின் பெயர் பாத்திமா ஷியானா.

## சம்பவம் நடக்கும் போது நான் ஓட்டமாவடியில் தொழில் புரிந்து கொண்டிருந்தேன்

**எனது** பெயர் பக்கீர் முகைதீன் முஹம்மது ஷரீப். இச்சம்பவத்தில் எனது இரு மக்கள் காலமானார்கள். அவர்களில் எனது மூத்த மகனின் பெயர் முஹம்மது தல்ஹா வயது அப்போது 8. இளைய மகனின் பெயர் முஹம்மது அக்ரம் வயது 6. இந்தக் கோர சம்பவம் நடக்கும் போது நான் ஓட்டமாவடியில் தொழில் புரிந்து கொண்டிருந்தேன். இரு பள்ளிவாயல்களில் பயங்கரவாதுகளால் தாக்குதல் நடத்தப்பட்டு 100க் கணக்கான முஸ்லிம்கள் கொல்லப்பட்டார்கள் என்ற செய்தி எனக்குக் கிடைத்தது. எனது இரு புதல்வர்கள் காலமான செய்தி எனக்குத் தெரியாது. என்னால் ஊருக்கு வரமுடியவில்லை. எப்படி வருவது? இதனால் கவலைப்பட்ட நான் பொலனறுவை ஆஸ்பத்திரியில் காயப்பட்டவர்கள் சிகிச்சை பெறுகிறார்கள் எனக் கேள்வியுற்று அங்கு போய் எமது உடன் பிறப்புக்களைப் பார்த்தேன். என்னால் முடிந்த வரை அவர்களுக்கு உதவி புரிந்து வந்தேன். நான் தற்பொழுது ஹுஸைனியா தைக்காவில் பேஷ் இமாமாக கடமை புரிகின்றேன். நான் பொலனறுவை ஆஸ்பத்திரியில் நிற்கும் போது இச்சம்பவம் நடந்தது. நான்கு தினங்களுக்குப் பின் பத்திரிகை படித்த போதுதான் எனது மக்கள் காலமான செய்தி எனக்குத் தெரியவந்தது. நான் அதிர்ச்சியும் ஆத்திரமும் அடைந்தேன். இச்சம்பவத்தால் எனது குடும்பத்தைச் சார்ந்தோர் 17 பேர் காலமானார்கள். இதனால் எனது மனநிலை மிகவும் பாதிக்கப்பட்டது.

## வந்திருப்பது புலிகள்தான் என்று எனக்குத் தெரிந்துவிட்டது...

**எனது** பெயர் அபுல் ஹஸன். நான் ஊர் வீதியிலிருந்து வந்து கொண்டிருந்தேன். இடைவழியில் வைத்து இஷாத் தொழுகைக்கான அதான் சொல்லப்பட்டது. மீரா ஜும்மாப் பள்ளிவாயலில் தொழுது விட்டுப் போவோம் என்று நினைத்தவனாக பள்ளிவாயலை அடைந்தேன். அப்போது தொழுகை ஆரம்பமாகிவிட்டது. அந்நேரம் எனது நண்பர்கள் இருவர் வந்தார்கள். அவர்களுடன் உரையாடிக் கொண்டிருக்கும் போது ஊர் வீதியிலிருந்து இராணுவம் வருவது போல் தெரிந்தது. நாங்கள் சற்று விலகி நின்றோம். அப்போது இராணுவம் போல் தெரிந்தவர்கள் எங்களுக்குக் கிட்டே வந்து விட்டார்கள். அப்போது பார்த்தேன் என் முன்னால் ரஞ்சித் வந்து நின்றார். அவர் என்னிடம் சொன்னார். நாங்கள் பள்ளிவாயல் தலைவர்களுடன் பேச வேண்டும் எனக் கூறி எங்களையும் அழைத்தார், என்று சொல்லி எனது முதுகைத் தடவினார் ரஞ்சித். அப்போது என் உள் மனம் சொல்லியது ஏதோ நடக்கப் போகிறது என்று .

வந்திருப்பது புலிகள்தான் என்று எனக்குத் தெரிந்து விட்டது. ரஞ்சித் என்று எப்படித் தெரியுமெனக் கேட்டிருந்தீர்கள் நான் பலமுறை அவரைச் சந்தித்திருக்கின்றேன். என்னுடன் அவர் பல தடவை பேசியிருக்கிறார். எனக்கு நன்றாகத் தெரியும், அவர்தான் ரஞ்சித் என்று. என்னை பள்ளி வாயலுக்குள் அழைத்துச் செல்லும் போது நான் நினைத்தேன் ரஞ்சித் தலைமையில் புலிகள் வந்திருக்கிறார்கள். அவர்கள் பள்ளிவாயலுக்குள் தாக்குதல் நடத்தப் போகிறார்கள் என்று. நான் அவர்களிடம் சொன்னேன். புலிகள் வந்திருக்கிறார்கள். ஏதோ செய்யப் போகிறார்கள் என்று சொன்னேன். அவர்கள் தப்பிவிட்டார்கள். நான் அப்படியே வந்து தொங்கல் வழியால் பள்ளியை விட்டு வெளியே வந்தேன். பின் மதிலிலிருந்து பாய்ந்து தப்பி விட்டேன் இருந்தும் என் மனம் கேட்கவில்லை. மீண்டும் வேறு வழியால் பள்ளி வளவுக்குள் வந்து பள்ளியினுள் எட்டிப் பார்த்தேன். தொழுகை நடந்து கொண்டிருந்தது. அவர்கள் பிஸ்டல்கள் கான் வழியாக அடுக்கப்பட்டிருந்தது. மீண்டும் நான் வீதிக்கு வந்து அங்கிருந்து சப்தமிட்டுக் கத்தினேன். புலிகள் பள்ளிக்குள் வந்து விட்டார்கள். அவர்கள் நமது ஊரைத் தாக்கப் போகிறார்கள் என்று. எனது சத்தத்தைக் கேட்டு வீதியில் வந்தவர்கள் சைக்கிள்களைப் போட்டு விட்டு ஓடிவிட்டார்கள். நான் அப்படியே கத்திக் கத்தி மெயின் வீதிக்கு வந்தேன். அப்போது காதைச் செவிடாக்கக்கூடிய வகையில் துப்பாக்கி வேட்டுக்கள் கேட்டன. என்னால் வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆனால் நான் உறுதியாகவும், தெளிவாகவும் சொல்கிறேன் புலிகள்தான் இந்தப் படுகொலைகளைச் செய்தார்கள்.

## கல்குடா முஸ்லிம் பிரதேசத்தில் 1990 .06க்குப் பின்னால் இடம்பெற்ற இனவன்முறைகளில் கொல்லப்பட்டோர் விபரம்

| பெயர் | நிகழ்வின் தன்மை | இடம் | மரணப் பதிவு இல | ஆண்டு |
|---|---|---|---|---|
| 1. நூறு முகம்மது முகம்மது பாரூக் | கடத்திக் கொலை | மாவடிச்சேனை | 4033 | 1990.06 |
| 2. அசனார் லெவ்பை ஆதம்பாவா | துப்பாக்கிச் சூடு | வாழைச்சேனை | 3746 | 1990.11 |
| 3. முகம்மது தம்பி புகாரி முகம்மது | கடத்திக் கொலை | மீராவோடை | 4112 | 1990.06 |
| 4. முகம்மது உஸனார் மக்பூல் | கடத்திக் கொலை | மாஞ்சோலை | 4114 | 1990.07 |
| 5. ஆதம்பாவா மீரா சாய்பு | கடத்திக் கொலை | வாழைச்சேனை | 4116 | 1990.11 |
| 6. மீரா சாய்வு ஜெமீல் | கடத்திக் கொலை | மாவடிச்சேனை | 4121 | 1990.10 |
| 7. இலவத் தம்பி அக்பர் | கடத்திக் கொலை | செம்மண்ணோடை | 4123 | 1990.06 |
| 8. சாலிமுகம்மது அப்துல் காதர் | கடத்திக் கொலை | ஓட்டமாவடி | 4124 | 1990.06 |
| 9. அச்சிமுகம்மது முகம்மது தாஹா | கடத்திக் கொலை | மீராவோடை | 4126 | 1990.06 |
| 10. முஸ்தபா லெவ்வை பசீர் அஹமது | கடத்திக் கொலை | மீராவோடை | 4127 | 1990.06 |
| 11. ஆதம்பாவா சாதிக்கீன் | கடத்திக் கொலை | வாகனேரி | 4128 | 1990.06 |
| 12. யாகூப் சேது அலி | கடத்திக் கொலை | மீராவோடை | 4129 | 1990.06 |
| 13. பக்கீர் முகைதீன் ஆதம்பாவா | துப்பாக்கிச் சூடு | வாழைச்சேனை | 3338 | 1990.06 |
| 14. அப்துல் ரசூல் ஜமூன் | துப்பாக்கிச் சூடு | வாழைச்சேனை | 3339 | 1990.11 |
| 15. முகம்மது காசிம் சேகு இப்ராஹிம் | துப்பாக்கிச் சூடு | வாழைச்சேனை | 3340 | 1990.08 |
| 16. வெள்ளக்குட்டி சேகு இப்ராஹிம் | துப்பாக்கிச் சூடு | வாழைச்சேனை | 3341 | 1990.06 |
| 17. இஸ்மா லெப்பை அப்துல் மஜித் | துப்பாக்கிச் சூடு | செம்மண்ணோடை | 3354 | 1990.10 |
| 18. மீரா முகைதீன் சுபைர் | துப்பாக்கிச் சூடு | வாழைச்சேனை | 3376 | 1990.11 |
| 19. அஹம்மது லெவ்பை அஹம்மது உசைன் | துப்பாக்கிச் சூடு | மாஞ்சோலை | 3419 | 1990.10 |
| 20. ஹயாத்து முஹம்மது அப்துல் கபூர் | துப்பாக்கிச் சூடு | வாழைச்சேனை | 3420 | 1990.06 |
| 21. அபூசாலி முஹம்மது ஜஃபர் | துப்பாக்கிச் சூடு | ஓட்டமாவடி | 3425 | 1990.08 |
| 22. இஸ்மா லெவ்பை ரபாயுதீன் | துப்பாக்கிச் சூடு | வாழைச்சேனை | 3422 | 1990.06 |
| 23. முஹம்மது கனி அபுபக்கர்-முபாரக் | துப்பாக்கிச் சூடு | மீராவோடை | 3458 | 1990.06 |
| 24. முஹம்மது அலியார் முஹம்மது சுபைர் | கடத்திக் கொலை | வாகனேரி | 4447 | 1990.11 |
| 25. அப்துல் கரீம் முஸ்தபா | கடத்திக் கொலை | காவத்தமுனை | 4455 | 1990.06 |
| 26. முஹம்மது சாலி இல்யாஸ் | கடத்திக் கொலை | மாஞ்சோலை | 4457 | 1990.07 |
| 27. அப்துல் மஜீத் அப்துல் மனாப் | கடத்திக் கொலை | வாழைச்சேனை | 4475 | 1990.06 |
| 28. ரம்லான் ஹயாத்து முஹம்மது | கடத்திக் கொலை | ஓட்டமாவடி | 4479 | 199010 |
| 29. முஹம்மது உசனார் சம்மூன் | கடத்திக் கொலை | மீராவோடை | 4487 | 1990.07 |
| 30. முஹம்மது இப்ராஹிம் ரம்லான் | கடத்திக் கொலை | மாவடிச்சேனை | 4256 | 1990.08 |
| 31. மஹமூது லெவ்பை வெள்ளையும்மா | கடத்திக் கொலை | மாவடிச்சேனை | 4253 | 1990.08 |
| 32. அஹம்மது லெவ்பை அஹமது உசைன் | துப்பாக்கிச் சூடு | மாஞ்சோலை | 3148 | 1990.10 |
| 33. முஹம்மது காசிம் உமர் லெப்பை | துப்பாக்கிச் சூடு | மீராவோடை | 3109 | 1990.11 |
| 34. உமர் லெவ்வை மீராசாய்வு-அப்துல் சலாம் | கடத்திக் கொலை | மாஞ்சோலை | 3159 | 1990.10 |
| 35. ஹயாத்து முஹம்மது அப்துல் கபூர் | துப்பாக்கிச் சூடு | வாழைச்சேனை | 3059 | 1990.07 |
| 36. முஹைதீன் பாவா அஹமது லெவ்வை | துப்பாக்கிச் சூடு | ஓட்டமாவடி | 3080 | 1990.07 |
| 37. அபுசாலி ஜஃபர் | கடத்திக் கொலை | ஓட்டமாவடி | 3087 | 1990.08 |
| 38. ஆதம்பாவா சாதிக்கீன் | துப்பாக்கிச் சூடு | வாழைச்சேனை | 3078 | 1990.09 |
| 39. ஷரீப் லெவ்பை ஆதம் லெவ்பை | கடத்திக் கொலை | ஓட்டமாவடி | 3085 | 1990.10 |
| 40. ஷாலி முஹம்மது ஆசியா உம்மா | துப்பாக்கிச் சூடு | மாவடிச்சேனை | 3067 | 1990.07 |
| 41. மீரா சாய்வு ராவியத்தும்மா | செல் தாக்குதல் | மாஞ்சோலை | 3077 | 1990.10 |
| 42. முஹம்மது ஷரீப் பரீத் | கடத்திக் கொலை | மீராவோடை | 4689 | 1990.07 |
| 43. லெவ்வைக்குட்டி செய்யது இப்ராஹிம் | துப்பாக்கிச் சூடு | வாழைச்சேனை | 3055 | 1990.07 |
| 44. இஸ்மா லெவ்பை றபாய்தீன் | துப்பாக்கிச் சூடு | வாழைச்சேனை | 3058 | 1990.07 |
| 45. ஹயாத்து முஹம்மது ஆதம் லெவ்பை | துப்பாக்கிச் சூடு | வாழைச்சேனை | 3050 | 1990.06 |

**எனது** பெயர் முகமது காசீம். எனது மகனின் பெயர் முகமது ரிஸ்வான். வயது 10 இக்கொடுமைச் சம்பவம் நடக்கும் போது நான் பிரதான வீதியிலிருக்கும் எனது கடையிலிருந்தேன். அப்போது வெடிச்சத்தம் கேட்டது. நான் உடனே கடையை மூடிவிட்டு வீட்டுக்கு வந்தேன். எனது வீடு மீரா ஜும்மா பள்ளிவாயலுக்கு முன்னிருந்தது. நான் உள்வழியால் வரும்போது என்னைச் சிலர் விடவில்லை. ஏதோ நடக்கின்றது. நீ போக வேண்டாம் என தடுத்து விட்டார்கள். நான் சிறிது நேரம் அப்படியே நின்று விட்டு மீண்டும் எனது இல்லத்தை நோக்கி வந்தேன். பள்ளிவாயலுக்கு அருகில் வந்தவுடன் ஒரு பெரியார் நொண்டி நொண்டி வந்தார். என்ன நடந்தது என்று கேட்டேன். என்னைச் சுட்டு விட்டான் என்றார். நான் அவரை ஒருவாராக அவரின் வீட்டுக்குக் கொண்டு போய் சேர்த்து விட்டு மீண்டும் பள்ளிவாயலுக்கு வந்தேன். ஒரு சகோதரர் சாய்ந்த வண்ணம் இருந்தார். அவருக்கு அருகே சென்றதும் தன்னைத் தூக்குமாறு பாவனை செய்தார். நான் அவரின் இடுப்பில் கைவைத்தேன். எனது கை அவரின் வயிற்றுக்குள் போனது உடனே நான் அவர் போட்டிருந்த சேட்டைக் கிழித்து அந்த இடத்தில் புகுத்தினேன். சிறிது நேரத்தில் அவர் உயிர் பிரிந்தது. நான் வீட்டுக்கு வந்து மனைவியிடம் மகன் எங்கே என்று கேட்டேன். பள்ளிக்குத் தொழப் போயிருக்கான் என்று சொன்னாள். நான் உடனே பள்ளிவாயலுக்கு ஓடி வந்தேன். பள்ளிக்குள் வந்ததும் முதலில் கண்டது எனது மகனின் ஜனாஸாவைத்தான். அடுத்தப் பக்கம் திரும்பிப் பார்த்தேன் எனது உறவினர் இருவர் இறந்து கிடந்தார்கள். அவர்களில் ஒருவரின் பெயர் மீரா லெப்பை ஷரீப், அடுத்தவர் முஸ்தபா மரிக்கார் என்பதாகும்.

வாசகர் கவனத்திற்கு
முஸ்லிம் குரலின்
1-15 இதழ்கள்
தேவைப்படுவோர்,
ரூபா. 200/- பணம் அல்லது
காசுக்கட்டளை/காசோலை
அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.


படத்தில் முஹம்மது றிஸ்வான் தனது தம்பியுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏறாவூர் குருதி தோய்ந்த நாட்கள்...

11 ஆகஸ்ட 90 - ஏறாவூர் முஸ்லிம்களின் வாழ்வில் மறக்க முடியாத துன்பங்களை வரலாற்றில் கல்வெட்டாகப் பதித்த தினம். இன்னுமே அந்த அதிர்ச்சியிலிருந்து அம் மக்கள் விடுபடவே இல்லை. ஐயன்கேணி, சதாம் ஹுஸைன் கிராமங்களில் உறக்கத்திலிருந்த மக்களை ஈவிரக்கமற்ற முறையில் கண்ட துண்டமாக வெட்டிக் கொன்றனர் பாவிகள். 116 முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டனர். 40க்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். ஊரே இரத்த வெள்ளத்தில் மூழ்கிக் கிடந்தது.

## ஏறாவூரில் ஷுஹதாக்கள் பூங்கா!




மூன்று மணிநேரத்திற்கு மேலாக நமது மக்களின் உயிர்களையும் உடமைகளையும் அழித்தொழித்த புலிகளின் காட்டுத்தர்பார் தீராத இரத்தக் கறையுடன் இன்னமுமே தொடர்கிறது. நமது மக்களை பாதுகாப்பதற்கு இதுவரை எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. நாளை என்ன நடக்குமோ என்கிற அச்சம் இப்பிரதேச மக்கள் ஒவ்வொருவரையும் அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது......

காத்தான்குடி, ஏறாவூர் சம்பவங்கள் அருகருகேயான தினங்களில் நடைபெற்றாலும் காத்தான்குடி மக்களே ஏறாவூர் கொடூரம் கண்டு கண்ணீர் வடித்தனர் என்றால் பாருங்களேன்! எங்குமே மனித உயிர்களை அரிந்தரிந்து வீசி இருந்தனர். குடல்கள், மூளைகள் என்பன சடலங்களுக்கு வெளியே தலைகாட்டி நின்றன. பச்சிளம் பாலகர்கள்கூட இக் கொடூரம் நிறைந்தவர்களால் விட்டுவைக்கப்படவில்லை. பல்வேறு குடும்பங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் கொல்லப்பட்டிருந்தனர்.

இக்கொடூரத்தின் பிடியில் சிக்கித் திணறிய குடும்பங்களில் இன்னுமே அநாதைகளாக பலர் அலைந்து திரிகின்றனர். ஏறாவூரின் அந்த பயங்கரமான துன்பமிக்க இரவை இன்று நினைத்தாலும் கண்களில் தாரைதாரையாக இரத்தக் கண்ணீர் வடிந்தோடுகிறது.

## ஏறாவூரில் கொல்லப்பட்டவர்களில் ஒரே குடும்ப உறுப்பினர்கள் விபரம்

| | | |
|---|---|---|
| 1. அஸனார் ரஹ்மதும்மா | வயது40 | குடும்பத்தலைவி |
| 2. மீரா மொஹிதின் ஹிதாயா | 16 | மகள் |
| 3. மீரா மொஹிதின் ஸரீனா | 14 | மகள் |
| 4. மீரா மொஹிதின் ஹபீபா | 12 | மகள் |
| 1. அலியார் ஹுஸைனார் | வயது 30 | குடும்பத்தலைவர் |
| 2. ஹுஸைனார் லாபிர் | 3 | மகன் |
| 1. எம்.ஐ. சீனி முஹம்மது (இ.போ.ச. கண்டக்டர்) | வயது 47 | குடும்பத்தலைவர் |
| 2. சீனி முஹம்மது அஸ்மி | 11 | மகன் |
| 1. அல்ஹாஜ் எம். மஹ்மூது லெவ்வை | 70 | குடும்பத்தலைவர் |
| 2. ஹாஜியானி ஸாஹிரா உம்மா | 65 | மனைவி |
| 1. எம். காஸிம் லெப்பே (ஆசிரியர்) | வயது 37 | குடும்பத்தலைவர் |
| 2. எம்.எஸ். நஸீமா | 27 | மனைவி |
| 1. ஸீ.ஏ.எம். இஸ்மாயில் | வயது 46 | குடும்பத்தலைவர் |
| 2. ஹதீஜா பீபீ | 30 | மனைவி |
| 3. எம்.ஐ. ரமீஸ் | 16 | மகன் |
| 4. ஐ. சமீமா | 10 | மகள் |
| 5. ஐ. ரிஸ்னா | 5 | மகள் |
| 6. ஐ. ஸஹ்னா | (5 மாதம்) | மகள் |
| 1. எஸ்.வெள்ளத்தம்பி | வயது 70 | குடும்பத்தலைவர் |
| 2. வெள்ளத்தம்பி வெள்ளைஉம்மா | 65 | மனைவி |
| 1. ஏ.எல். புஹாரி குடும்பத்தலைவர் | வயது 30 | |
| 2. பீ. பரீதா | 25 | மனைவி |
| 3. ஏ. ரிப்கா | (18 மாதம்) | மகள் |
| முஸ்தபா ஜனூபா | | |
| முஸ்தபா சித்தீக் | 30 | |
| ஆயிஷா சித்தீக் | 25 | |
| சித்தீக் ஸனுஷியா | 1 | |

ஏறாவூரில் படுகொலை செய்யப்பட்ட 10 வயதுக்கு கீழ்பட்ட பாலகர்கள்

| | | |
|---|---|---|
| உஸனார் லாபிர் | வயது | 3 |
| குழந்தை உம்மா | | 7 |
| அன்வர் ஸத்தார் | | 10 |
| பைரூஸ் | | 8 |
| ஏ. சித்தீக் | | 8 |
| பஸீர் | | 3 |
| ஐ. சமீமா | | 10 |
| ஐ. ரிஸ்னா | | 5 |
| ஐ. ஸஹ்னா | (மாதங்கள்) | 5 |
| ஏ. ரிப்கா | (மாதங்கள்) | 18 |
| சித்தீக் ஸனூஸியா | | 1 |
| பாத்திமா ரஸ்மியா | | 6 |
| ஹபீபா | | 6 |
| தாஹிர் | | 4 |
| ஹிதாயா | | 8 |
| பஸ்மி | | 3 |
| பர்ஸானா | | 2 |
| பர்ஸான் | | 1 |
| பாத்தும்மா | | 10 |
| ஹாஜரா | | 8 |
| ரமீஸா | | 10 |
| எம். ரம்ஸிலா | | 7 |
| எம். ஸஹீலா | | 4 |
| எஸ்.எல். நஜீபா | | 4 |
| எஸ்.எல். நஸ்ரீன் | | 6 |
| அலியார் அப்துல் மஜீத் | (வாரம்) | 1 |

## 90 புலிகளின் படுகொலையில் ஏறாவூரில் விதவைகளானவர்களின் விபரம் வயது அடிப்படையில்

| வயது | தொகை |
|---|---|
| 10-20 | 05 |
| 21-30 | 11 |
| 31-40 | 12 |
| 41-50 | 08 |
| 51-60 | 05 |
| மொத்தம் | 41 |

## 1990.08.03 ஆம் திகதி காத்தான்குடி மீரா ஜும்ஆ பள்ளிவாசலிலும், ஹுஸைனியா தைக்கியாவிலும் இஷா தொழுகையில் ஈடுபட்டபோது, புலிகளினால் கொல்லப்பட்டவர்கள்.

| பெயர் | விலாசம் | வயது | விவாக நிலை | தங்கி வாழ்வோர் |
|---|---|---|---|---|
| 01. ஏ.ஆர். ஆதம்பாவா | சாவியா வீதி, காத்தான்குடி. | 43 | ஆம் | 1 |
| 02. எச்.எம். மீராலெவ்வை | சாவியா வீதி, காத்தான்குடி. | 43 | ஆம் | 5 |
| 03. கே.எல். முகம்மட் ராபி | 205, நோத் பவுண்டறி, கா.குடி 1 | 17 | இல்லை | 2 |
| 04. ஏ. பக்கீர் முகிடீன் | 4வது லேன், கபுரடி லேன், கா.குடி. | 65 | ஆம் | - |
| 05. எம்.எஸ். அப்துல் ஹமீட் | 4வது லேன், கபுரடி லேன், கா.குடி. | 25 | ஆம் | 3 |
| 06. எம்.எஸ். பைசல் | 4வது லேன், கபுரடி லேன், கா.குடி. | 13 | இல்லை | - |
| 07. எம்.ஐ. ஜெளபர் | 4வது லேன், கபுரடி லேன், கா.குடி. | 17 | இல்லை | 4 |
| 08. எம்.ஐ. ஜறூன் | 4வது லேன், கபுரடி லேன், கா.குடி. | 10 | இல்லை | - |
| 09. பி.எம். இஸ்மாயில் | முஅத்தினார் லேன், காத்தான்குடி. | 37 | ஆம் | 5 |
| 10. எம்.எம்.எம். ஜெளபர் | 235, மெயின் வீதி, காத்தான்குடி 1 | 17 | இல்லை | - |
| 11. எம்.கே.எம். சஹாப்தீன் | 431, மெயின் வீதி, காத்தான்குடி 1 | 41 | ஆம் | 9 |
| 12. எம்.எஸ்.எம். சுக்கூர் | 431, மெயின் வீதி, காத்தான்குடி 1 | 14 | இல்லை | - |
| 13. எம்.எஸ்.எம். ஜவாத் | 431, மெயின் வீதி, காத்தான்குடி 1 | 13 | இல்லை | - |
| 14. எம். இக்பால் | நோத் பவுண்டறி றோட், கா.குடி 1 | 16 | இல்லை | 6 |
| 15. எம்.ஐ. ஆதம் லெவ்வை | கபுரடி றோட், கா.குடி 1 | 52 | ஆம் | 8 |
| 16. எம்.எல். முகம்மட் முத்து | நோத் பவுண்டறி றோட், கா.குடி 1 | 70 | ஆம் | 2 |
| 17. எம்.எஸ்.ஏ. சுகைப் மௌலவி | நோத் பவுண்டறி றோட், கா.குடி 1 | 20 | இல்லை | 6 |
| 18. ஐ. றபீக் | ஹுஸைனியா வீதி, மா.தொடுவாய் | 18 | இல்லை | 5 |
| 19. எம்.எம். சஹாப்தீன் ஹாஜியார் | சாவியா வீதி, காத்தான்குடி 1 | 60 | ஆம் | 7 |
| 20. எம்.ஏ. தம்பிலெவ்வை | சாவியா வீதி, காத்தான்குடி 1 | 45 | ஆம் | 9 |
| 21. எம்.எம். அஷ்ரப்கான் | இப்றாகிம் மன்சில், காத்தான்குடி 1 | 20 | இல்லை | 6 |
| 22. எம்.பி. ஜவாத் | வடக்கு எல்லை வீதி, கா.குடி 1 | 13 | இல்லை | 6 |
| 23. ஏ.எம். யாசீன் | வடக்கு எல்லை வீதி, கா.குடி 1 | 26 | ஆம் | 2 |
| 24. எம்.ஐ.எம். அஜ்மல் | 426, சாவியா வீதி, காத்தான்குடி 1 | 12 | இல்லை | - |
| 25. ஏ.எல். சலாஹுத்தீன் (ஹாபிஸ்) | பிரதான வீதி, காத்தான்குடி 1 | 20 | இல்லை | 4 |
| 26. எம்.ஐ. கமால்தீன் | வடக்கு எல்லை வீதி, கா.குடி 1 | 30 | ஆம் | 3 |
| 27. ஏ.எல். மக்கீன் | சாவியா வீதி, காத்தான்குடி 1 | 30 | ஆம் | 3 |
| 28. எம்எஸ்எம் சகாப்தீன் ஹாஜியார் | சாவியா வீதி, காத்தான்குடி 1 | 55 | ஆம் | 7 |
| 29. எம். உமர்லெவ்வை | பழைய வீதி, காத்தான்குடி 1 | 38 | ஆம் | 4 |
| 30. எஸ்.ஏ. மஜீத் | சாவியா வீதி, காத்தான்குடி 1 | 37 | ஆம் | 4 |
| 31. எஸ்.எம்.எம். முஸ்தபா | ஓடைக்கரை ஒழுங்கை, கா.குடி 2 | 72 | ஆம் | 5 |
| 32. முகம்மட் அனஸ் | செய்னுல் ஆப்தீன் ஹாஜியார் ஒழு. கா.குடி 1 | 13 | இல்லை | 6 |
| 33. எம்.ஐ. அப்துல் கபூர் | சாவியா வீதி, காத்தான்குடி 1 | 28 | ஆம் | 2 |
| 34. எஸ். சுல்பிகார் | சாவியா வீதி, காத்தான்குடி 1 | 17 | இல்லை | - |
| 35. அப்துல் நவாஸ் | ஆனாதைகள் இல்ல வீதி, கா.குடி 1 | 21 | இல்லை | - |
| 36. என்.எம். இஸ்மாயில் | 19ஆம் வட்டாரம், மஞ்சந்தொடுவாய் | 45 | ஆம் | 4 |
| 37. எம்.சி.எம். றிஸ்வான் | சாவியா வீதி, காத்தான்குடி 1 | 10 | இல்லை | - |
| 38. எம்.எஸ். அப்துல் முத்தலிப் | சாவியா வீதி, காத்தான்குடி 1 | 47 | | |
| 39. ஏ. ரம்லான் | அப்துல் ஜவாத் ஆலி[illegible] | | | |
| 40. எம். இஸ்ஸதீன் | வடக்கு எல்லை வீதி, கா.குடி 1 | 15 | [illegible] | - |
| 41. எம்.பி.ஏ. சமத் | சாவியா வீதி, காத்தான்குடி 1 | 38 | ஆம் | 4 |
| 42. எச்.கே.எம். ஆரிப் | சாவியா வீதி, காத்தான்குடி 1 | 18 | இல்லை | - |
| 43. எம்.ஐ. ஹஸன் | வடக்கு எல். வீதி, மஞ்சந்தொடுவாய் | 22 | இல்லை | - |
| 44. எம்.ஐ. அஷ்ரப் | கபுரடி வீதி, காத்தான்குடி 1 | 11 | இல்லை | - |
| 45. எம். கமர்டீன் | வடக்கு எல்லைவீதி, கா.கு 1 | 12 | இல்லை | - |
| 46. எஸ்.எம். ஹயாத்து கலந்தர் | மீராப்பள்ளி லேன், கா.கு 1 | 60 | ஆம் | 4 |
| 47. எஸ்.ஏ.எம். இம்தியாஸ் | கபுரடி வீதி, காத்தான்குடி 1 | 9 | இல்லை | - |
| 48. எஸ்.ஏ.எம். இயன்சாட் | கபுரடி வீதி, காத்தான்குடி 1 | 18 | இல்லை | - |
| 49. எம்.சி.எம். பரீட் | மீராப் பள்ளி வீதி, கா.கு 1 | 35 | ஆம் | 3 |
| 50. எம்.ஐ.ஏ. அஸீஸ் | பழைய வீதி, காத்தான்குடி 1 | 37 | ஆம் | 3 |
| 51. ஏ.எம். ஹனீபா | பழைய வீதி, காத்தான்குடி 1 | 38 | ஆம் | 4 |
| 52. எம்.ஐ. ஹுஸைன | 101, முஅத்தினார் ஒழு. கா.குடி 1 20 | | இல்லை | 5 |
| 53. எம்.எல்.எம். தாஹிர் | நூர் முகமத்.கடை. ஒழு. கா.குடி 1 | 27 | இல்லை | 4 |
| 54. எஸ்.எல்.எம். ஜுனைட் | சாவியா வீதி, காத்தான்குடி 1 | 23 | இல்லை | 7 |
| 55. எம்.பி.எம். ஜுனைட் | சாவியா வீதி, காத்தான்குடி 1 | 34 | ஆம் | 3 |
| 56. எம்.எம். ஹனீபா ஹாஜியார் | செய்னுலாப்தீன் ஹாஜி. ஒழுங்கை கா.குடி 1 | 46 | ஆம் | 4 |
| 57. எஸ்.எச்.எம். நசீர் | அஜன்தா ஹவுஸ், காத்தான்குடி 1 32 | | ஆம் | 4 |
| 58. எம்.எஸ்.ஏ. றஹீம் | 4வது. ஒழு., கபுறடி வீதி, கா.குடி 1 | 26 | ஆம் | 3 |
| 59. டாக்டர்.ஆர்.முகம்மத் அன்வர் | செய்னுலாப்தீன் ஹா.ஒ. கா. குடி 1 | 55 | ஆம் | 3 |
| 60. ஏ.சி. நசுர்டீன் | செய்னுலாப்தீன் ஹா.ஒ. கா. குடி 1 | 40 | ஆம் | 3 |
| 61. எம்.ஐ. ஆரிப் | சாவியா வீதி, காத்தான்குடி1 | 12 | இல்லை | - |
| 62. ஏ.கே. ஹாறூன் | மீராப் பள்ளி வீதி, காத்தான்குடி 1 | 31 | ஆம் | 2 |
| 63. எச்.எம். பௌஸர் | ஹுஸைனியா ஒழு. கா. குடி 1 | 14 | இல்லை - | |
| 64. எம்.எம். இஸ்மாயில் | மஞ்சந்தொடுவாய், கா. குடி 1 | 40 | ஆம் | 3 |
| 65. யூஎல். முகைதீன் | சாவியா வீதி, காத்தான் குடி 1 | 17 | இல்லை | - |
| 66. ஏ.ஏ. நூர்டீன் | மஞ்சந்தொடுவாய், கா. குடி | 30 | ஆம் | 2 |
| 67. எம்.ரி. ஜெளபர் | கோப்ரடி லேன், கா. குடி 1 | 17 | இல்லை | - |
| 68. எம்.எஸ்.எம். பௌஸர் | சாவியா வீதி, காத்தான்குடி 1 | 12 | இல்லை | - |
| 69. ஏ. ஜெளபர் | கோப்ரடி லேன், கா. குடி 1 | 14 | இல்லை | - |
| 70. கே.எல்.எம். றஹ்மத்துல்லாஹ் | பிரதான வீதி, காத்தான்குடி 2 | 42 | ஆம் | 4 |
| 71. பி.எம். முகமட் பஸ்லூன் | பழைய சந்தை வீதி, காத்தான் குடி1 | 15 | இல்லை | - |
| 72. ஏ.எம். முகம்மட் முஸ்தபா | சாவியா வீதி, காத்தான் குடி 1 | 70 | ஆம் | 6 |
| 73. ஏ. சரீப்டீன் | பழைய வீதி, காத்தான்குடி 1 | 52 | ஆம் | 5 |
| 74. எஸ். செய்யித் அஜ்மல் | பழைய வீதி, காத்தான்குடி 1 | 10 | இல்லை | - |
| 75. எம்.ஏ.சி.எம். புகாரி | மெத்தைப்பள்ளி வீதி, காத்தான்குடி 3 | 35 | ஆம் | 2 |
| 76. ஏ. சமீன் | 310, முஅத்தினார் வீதி, கா.கு 1 | 14 | இல்லை | - |
| 77. பி.எம். அப்துல் காதர் | இப்றாகீம் மௌலவி லேன், கா.கு 1 | 45 | ஆம் | 3 |
| 78. கே.எம்.ஏ. அஸீஸ் | மெத்தைபள்ளி வீதி, காத்தான்குடி 3 | 42 | ஆம் | 3 |
| 79. எம்.எம். முகம்மட் பைசல் | 168, கிளாக் லேன், காத்தான்குடி 3 | 15 | இல்லை | - |
| 80. எம்.ஏ. பௌஸர் | வாட் இல.19, மஞ்சந்தொடுவாய் | 21 | இல்லை | - |
| 81. ஏ. ஆதம்லெவ்வை | 4/8, உடையார் வீதி, கா. குடி 1 | 57 | ஆம் | 1 |
| 82. எச்.எம். முகம்மட் சம்சுதீன் | 4/8, உடையார் வீதி, கா. குடி 1 | 40 | ஆம் | 3 |
| 83. எம். சம்சுதீன் | பழைய வீதி, காத்தான் குடி 2 | 33 | ஆம் | 2 |
| 84. எம்.எஸ்.எம். அக்றம் | மஞ்சந்தொடுவாய், கா. குடி 1 | 6 | இல்லை | - |
| 85. எம்.எஸ்.எம். தஹ்லான் | மஞ்சந்தொடுவாய், கா. குடி 1 | 8 | இல்லை | - |
| 86. ஏ.எல். அப்துல் ஹஸன் | மஞ்சந்தொடுவாய், கா. குடி 1 | 12 | இல்லை | - |
| 87. ஏ. அப்துல் ஸமட் | மஞ்சந்தொடுவாய், கா. குடி 1 | 14 | இல்லை | - |
| 88. எம்.வை. ஆமுல் ஹஸன் | வடக்கு எல்லை வீதி, கா. குடி 1 | 16 | இல்லை | - |
| 89. பி.எம்.எம். இப்றாஹீம் | கபுரடி வீதி, காத்தான்குடி 1 | 35 | ஆம் | 3 |
| 90. யூஎல். முகம்மட் இப்றாஹீம் | 191, சாவியா வீதி, காத்தான்குடி 1 | 28 | இல்லை | 4 |
| 91. எம். லெவ்வைதம்பி | செய்னுலாப்தின் ஹாஜி. வீதி, கா. கு. 1 | 48 | ஆம் | 1 |
| 92. ஏ.எல். ஹச்சி முகம்மத் | சாவியா வீதி, காத்தான்குடி 1 | 56 | ஆம் | 4 |
| 93. ஏ.எஸ். அப்துல் முத்தலிப் | வடக்கு எல்லை வீதி, கா. குடி 1 | 18 | இல்லை | 4 |
| 94. எம்.எம். காசிம் ஹாஜியார் | பழைய வீதி, காத்தான்குடி | 57 | ஆம் | 4 |
| 95. எம்எல் முகம்மட் முத்து ஹாஜி | வடக்கு எல்லை வீதி, கா. குடி 1 | 70 | ஆம் | 5 |
| 96. எஸ்.எம். சித்தீக் | காட்டுப்பள்ளி வீதி, ஏறாவூர் | 16 | இல்லை | 5 |
| 97. ஏ.எம். சலாஹுடீன் ஹாஜி | றசாக்கியா அரிசி ஆலை, கா.குடி 1 | 48 | ஆம் | 4 |
| 98. ஏஎம் கலந்தர் லெவ்வை ஹாஜி | பாத்தும்மா அரிசி ஆலை, கா.குடி 1 | 60 | ஆம் | 1 |
| 99. எம்.ஏ.எம். அப்துல் காதர் | பாத்தும்மா அரிசி ஆலை, கா.குடி 1 | 40 | ஆம் | 5 |
| 100. எம்.ஆர்.ஏ. சலாம் | வடக்கு எல்லை வீதி, கா. குடி | 24 | இல்லை | 5 |
| 101. எம்.எம். அசனார் | எல்லை வீதி, காத்தான்குடி 1 | 55 | ஆம் | 3 |
| 102. என்.எம். அசனார் | ஹுஸைனியா வீதி, காத்தான்குடி 1 | 50 | ஆம் | 6 |
| 103. வை.எல்.எம். ஜுனைடீன் | பழைய வீதி, காத்தான்குடி | 10 | இல்லை | - |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நவீனத்தில் வேலைக்குச் செல்லும் பெண்களும், யதார்த்தவியலும்

பெண்ணே சுற்றும் முற்றும் பார்... பக்குவமுடன் நோக்கு. இலக்கினை அடைந்துகொள் ... சமுதாய முன்னேற்றத்தை கண்ணெதிரே காண்பாய் ... என்ற வாசகங்கள் பல நிவாரணங்களின் உதிப்பு என்றே கூற வேண்டும்.

நவீனத்தளத்தின் பல்வேறு விவாதக் களம்தனில் பெண்கள் வேலைக்குச் செல்லல் பற்றியவை முக்கியமாகிவிட்டதை யாவரும் அறிவீர். சமூகப் பொருளாதார அபிவிருத்தியின் மேம்பாட்டிற்கு ஆண்களின் பங்களிப்புக்கீடாகவே பெண்களின் பங்களிப்பும் உண்டென்பது மறுக்கமுடியாதது. வாழ்க்கைச் செலவு அதிகரித்துச் செல்லும் இன்றைய சூழ்நிலை உழைப்பின் முக்கியத்துவத்தினையும் பெறுமதியையும் நிரூபிக்கிறது; நாளுக்கு நாள் நாட்டின் பொருளாதார ஸ்த்திரத்தன்மைக்கும், கல்வி மேம்பாட்டின் உயர்வுக்கான வழியாகவும் சமூக வளர்ச்சிகளின் ஒழுங்கு படுத்தலுக்கும் பெண்கள் செய்யும் வேலைத்தளங்களும் வேலைப்பயன்பாடுகளும் அசைக்க முடியாததாகிவிட்டது.

பெண்கள் சிறந்த கல்வியியலாளர்களாக, சிந்தனையாளர்களாக, சட்டவல்லுனர்களாக, முகாமையாளர்களாக, வைத்தியர்களாக இன்னோரன்ன துறைகளிலே தங்களால் வெளிப்படுத்த முடியாதவற்றை வெளிப்படுத்துகிறார்கள் என்பது வெளிப்படையான உண்மை.

பெண்கள் வெறுமனே அறிவியல் உலகத்தில் சஞ்சரிக்கவோ அன்றேல் அறிவியல் உலகத்தினை விட்டும் அன்றைய காலப் பெண்ணாக இன்னும் பெட்டிப்பாம்மாய் வாழவோ நவீன களம் இடம் கொடுக்கும் என்பதும் சாத்தியமற்றதே. ஆனால் மறுபுறம் பெண்கள் வேலைக்குச் செல்வதனால் ஏற்படும் தொடர் தாக்கங்களையும் நோக்கவேண்டியுள்ளது. குடும்பத் தலைவி என்ற முறையில் கடமை, வீட்டின் இதர கடமைகள் இன்னும் தனது வேலைத்தளத்திலே வேலைகளை நிறைவேற்றுவதன் மீதுள்ள சிரமங்கள் ... போன்ற பல சிரமங்களைத் தாங்க வேண்டியாகிறாள். கூடவும் ஊதியத்தின் பெறுமதிகள் சிலவேளை குறைவாகவும் இருக்கிறது.

மேலும் பிரச்சினைகளாக குழந்தைப் பராமரிப்பில் வேலைக்குச் செல்லும் வேளைதனில் தாயானவள் குழ்ந்தையைப் பிரிய வேண்டியதால் தாய் - சேய் அரவணைப்பின் குறைவும் குழந்தையின் உள வளர்ச்சிப் பாதிப்பும் ஏற்படுகிறது. இப்பிரச்சினைகளுக்கு நிவாரணங்களாக பக்க உதவிகள் சுற்றத்தார் அனுசரணைகள் கிடைக்கும் போது பிரச்சினை சுலபமாகிறது.

ஆனாலும் இந்தப் பிரச்சினைகளுக்கூடாகவும் பெண்ணானவள் முகம்கொடுக்க வேண்டுமென்ற தயார் நிலையை வளரும் காலங்களிலேயே வளர்த்துக் கொள்ள வேண்டும். அதற்கான



மனத் தைரியங்களையும், நம்பிக்கைகளையும் பேணிக்காக்க வேண்டும். அடங்கிக் கிடந்து சிந்தனைகளையும் ஆற்றல்களையும் முறியடிப்பதை விட்டும் பொருளாதார மேம்பாட்டிற்காக சமூகமுன்னேற்றத்திற்காக தன் உயர்வுப் பெறுமானங்களுக்காக, எதிர்கால சமுதாயத்தின் நெறிப்படுத்தலுக்காக எப்போதும் பெண்ணானவள் தன் அறிவை தன் இயலுமையை வெளிக் கொணர்விக்க வேண்டும்.

பெண்ணின் சுதந்திரமும், முன்னேற்றப்படிகளும் எவரையும் பாதிக்காத முறையில் புரிந்துணர்வுகளோடு மனப்பாங்கு விருத்திகளோடு பேணப்படாத வரையில் பிரச்சினைகள் அதிகரிக்கவே செய்யும்.

யதார்த்தங்களுக் கூடாக ஆற்றல்களின் மதிப்பளித்தல் பெறுமானங்கள் பெண்ணின் அடிப்படையில் சுமுகமாக்கப்படுவதற்கு அவளைச்சூழவுள்ள சமுதாய அங்கத்துவங்கள் ஊக்குவித்தல் அனுசரணையாகுதல், உணர்வுடன் நடைமுறையில் இயங்குதல் போன்றவற்றின் மூலமாக பெண் வேலைக்குச் செல்வதால் ஏற்படும் நாளாந்த சிரமங்களை தவிர்த்துக் கொள்ளலாம்.

இன்றைய நவீனத் தளத்தில் வேலைக்குச் செல்லும் பெண் பக்குவமாக, தொழில் புரிவதாக, திறமையாக கடமைகளின் கண்ணியமாக, பலவீனத்தின் முன் பலவீனமுள்ளவளாக பெறுமானங்களை தன்னில் உயர்வாக்குபவளாக தன்னை தயார் படுத்துவாளாயின் எதிர் நோக்கல்களை அவள் சுமுகமாக்குவாள்.

– ஹஸ்னதா, சம்மாந்துறை

## புகை பிடித்தலற்ற உலகை நோக்கி.....! (4)

### புகைத்தலினால் சுவாசத் தொகுதி பாதிப்படைதல்

புகைக்கும் போது புகை சுவாசத் தொகுதியில் புகுந்து வெளிவருகின்றது. இதனால் சுவாசப் பைக் குழாயிலுள்ள சீதமென்சவ்வு தடிப்படைந்து வீக்கமுறும். அவ்வாறே சளியை இருமித் துப்பும் வழக்கம் அதிகரிக்கும். மூச்சுக் குழாய் உள்ளிடம் சிறுக்கும். இதனால் சுவாசிப்பது கஷ்டமாகி விடும். சுவாசப்பைக் குழாய் அழற்சி நோயினால் பீடிக்கப்பட்டவர்களில் 90 சதவீதமானோர் புகைஞர்கள் என்பது அண்மைய ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ளது. இதே ஆய்வின் படி நுரையீரல் வீங்குதல் (Emphysema) நோயினால் பீடிக்கப்பட்டவர்களில் 85 சதவீதமானோரும் புகைஞர்களே. சுவாசப்பைக் குழாயழற்சி (Bronchitis) இன்போது சளி தேங்குவதால் சுவாசப்பைச் சிறுகுழாய்கள்



பகுதியாகவோ அல்லது முற்றாகவோ அடைபடலாம். இதனால் மூச்சு வெளியே விடுவது மிகவும் கஷ்டமாகி அதனை வலிமையாக வெளித்தள்ள வேண்டியேற்படும். இவ்வேளை சிற்றறைகளில் அமுக்கம் அதிகரித்து சிற்றறைச்சுவர்கள் உடைந்து நுரையீரல் வீங்குதல் (Emphysema) நிலையேற்படும். Emphysema நிலையின் போது நுரையீரல் வீங்கி இழுதன்மையற்றதாக ஆகின்றது. இதன் காரணமாக ஒழுங்காக வாயுப்பு பரிமாற்றப்பட முடியாத நிலையேற்படும். Emphysema ஆல் பீடிக்கப்பட்டோருக்கு நடத்தல், ஓடுதல், மூச்சை வெளிச்சுவாசித்தல் என்பன கடினமாக இருக்கும்.

### புகைத்தலால் இருதயம் தாக்கபடல்

சிகரெட்டில் காணப்படும் நிகடீன் மாரடைப்புக் காரணமாக அமைந்து விடுகின்றது. நிகடீன் கொழுப்புச் சுரப்பியிலிருந்து கொழுப்பு ஹோமோனை வெளித்தள்ளுவதால் இருதயத் துடிப்பு வழமையை விட பன்மடங்காக அதிகரிக்கின்றது. இதனால் உயர் குருதி அழுத்தம் ஏற்படுகின்றது. புகைத்தல் Arteriosclerosis எனும் இருதய நோயை உண்டுபண்ணுகின்றது. உள்வாங்கப்படும் புகையிலையின் புகை இதயத்திலும், உடம்பின் ஏனைய பகுதிகளிலும் காணப்படும் ஒக்சிஜனின் அளவை குறைக்கின்றது. இருதயத்திலுள்ள ஒக்சிஜன் குறைவது கஷ்டப்பட்டு சுவாசிக்கும் வேளையில் Angina ஐ தோற்றுவிக்கும். புகைத்தல் குருதிக் குழாய்களை ஒடுங்கச் செய்து அவற்றின் உற்சுவர்களிலே கொழுப்புப் படிவுகளை படியச் செய்கின்றது. அதேவேளை அது மாரடைப்பையும் ஏற்படுத்துகின்றது. இதுவே Arteriosclerosis என மருத்துவர்களால் வழங்கப்படுகிறது. Arteriosclerosis பாரதூரமான பாதிப்பை ஏற்படுத்துகின்றது. நியாயமான அளவு குருதிக் குழாய்கள் வீங்கும் போது அவற்றினூடாக இரத்தம் ஓடுவது குறைகின்றது அல்லது முழுமையாகத் தடைபடுகின்றது. இவ்வீக்கம் மேனியின் எப்பகுதியிலும் குருதியோட்டத்தை தடை செய்யலாம். இது பொதுவானதும், அபாயகரமானதும் கூட. இதுவே மருத்துவத்தில் coronary Heart Disease எனப்படுகின்றது. இதன் போது இதயத் தசைகளுக்கு விநியோகிக்கப்படும் குருதியின் அளவு குறைந்து அல்லது முற்றாகத் தடைபட்டு, Angina மேலும் மாரடைப்பை ஏற்படுத்துகின்றது.

### புகைத்தலும், புற்றுநோயும்

புகைத்தலால் ஏற்படும் பிறிதொரு ஆபத்து புற்று நோயாகும். இன்றைய உலகில் மரணிப்போரில் 25 சதவீதமானோர் நுரையீரல் புற்றுநோயால் மரணிக்கின்றனர். இவர்களுள் 90 சதவீதமானோர் புகைப்பழக்கத்தினால் நுரையீரல் புற்றுநோய்க்கு ஆளானோராவர். இவ்வாறே தொண்டைப் புற்றுநோய் பாதிப்புக்குள்ளானோரில் ,84 சதவீதமானோர், தொண்டைப் புற்று நோயினால் பீடிக்கப்பட்டோரில் 70 சதவீதமானோர் புகைப் பழக்கத்திற்கு அடிமையானோரே; உணவுக் குழாய்ப் புற்றுநோயினால் பாதிக்கப்படுவோர் உலகில் 11 பேருக்கு ஒருவர் என்ற அளவிற்கு நிலைமை மோசமடைந்துள்ளது. இதற்கான பிரதான காரணிகளுள் ஒன்றாக புகைத்தல் விளங்குகின்றது. சிறு நீர்ப்பை புற்றுநோய்க்காளானோரில் 50 சதவீதமானோர் புகைப்பவர்கள். பிரதான சுவாசக் குழாய் உள்ளிடத்தில் கழலை வளர்ச்சியேற்படுவதால் உள்ளிடம் அடைப்பட்டு சுவாசிப்பதில் தடையேற்படும். இது முக்கியமாக புகைப்பவர்களுக்கே ஏற்படுகின்றது. புகையிலையின் புகையிலுள்ள Benzopyrene எனும் இரசாயன பதார்த்தம் இக்கழலை வளர்ச்சிக்கு காரணமாகவுள்ளது. நுரையீரல் புற்று நோயின் அபாயம் ஒருவர் புகைத்தலுக்கு அடிமையாகிய முழு காலத்தோடும் சம்பந்தப்பட்டது. தினசரி புகைக்கும் சிகரெட் தொகை, புகைக்கவாரம்பித்த வயது, இது வரை புகைத்துள்ள காலம் என்பன இங்கே கருத்தில் எடுக்கப்படுகின்றன. இந்நோயால் பீடிக்கப்பட்டோர் மிக இலகுவில் களைப்படைவதோடு, மிகவுமே சுறுசுறுப்பற்றும் காணப்படுவர். சிலவேளை படுக்கையிலோ அல்லது நாற்காலியிலோ தஞ்சம் புக நேரிடும். நாளாந்தம் 10 சிகரெட்டுகளைப் புகைக்கும் ஒருவரின் சுவாசத் தொகுதியுள் ஓராண்டு காலத்தில் சுமார் 2 அவுன்ஸ் தார் படிகின்றது. இதனால் புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்பு உருவாகிறது. வாய்க் குழி, தொண்டை, குரல்வளை, வாதனாளி, நுரையீரல், இரைப்பை, சிறுநீரகம் போன்ற பகுதிகளிலும் தார் படிகின்றது. காலப் போக்கில் அவ்விடங்களில் புற்றுநோய் உருவாக வாய்ப்பேற்படுகின்றது.

### புகைத்தலால் சமிபாட்டுத் தொகுதி பாதிப்படைதல்

முரசழற்சி, பற்சொத்தை, பற்கள், கருமையாதல் ஆகியன புகைப் பழக்கத்தினால் ஏற்படுகின்றன. உதட்டுப் புற்றுநோய், நாவோரங்களில் புண், இரைப்பையழற்சி ஆகியவை புகைத்தலின் மற்றும் சில தாக்கங்களாகும்.

(இன்னும் வரும்)

எச்.அப்துல் நாசர் (ரஹ்மானி)
பொதுச் செயலாளர், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை.

# முஸ்லிம்களைப் பாதுகாப்பது யார்?

இந்த அரசாங்கம் பதவியேற்றதன் பின் படிப்படியாக முஸ்லிம் பிரதேசங்களுக்கான அபிவிருத்திகளும், பாதுகாப்புக்களும், நிறுத்தப்பட்டு வருகின்ற அதேவேளை தமிழ்ப் பிரதேசத்தின் தேவைகளும், பாதுகாப்புக்களும் இன்னுமொரு கொள்கை நிர்வாகத்தின் மூலமாக நிறைவு செய்யப்பட்டு வருகின்றன. எனினும் பதவியில் இருக்கும் அரசாங்கம் சமாதானம் என்ற போர்வையில் ஒரு இனத்திற்கு வழங்கும் சலுகைகள், உரிமைகள் இன்னுமொரு இனமான முஸ்லிம் இனத்திற்கு மட்டும் வழங்குவதற்குத் தயங்குவதுதான் வேடிக்கையான ஆச்சரியமாகும்; ஏற்றிய ஏணியை எட்டி உதைக்கும் செயலுக்கு நிகரானதாகும்.

கடந்த கால நமது நாட்டு அரசியலில் முஸ்லிம்கள் அதிகமாக கஷ்டங்களையும், பொருளாதார இழப்புக்களையும், உயிர்ச்சேதங்களையும் பெற்றிருப்பது ஐ.தே.கட்சி அரசாங்க காலங்களிலேயாகும். அவைகளை மெய்ப்பிப்பது போல் இன்றைய ஆட்சியாளர்கள் கன கச்சிதமாக முஸ்லிம்களுடைய விடயத்தில் நடந்து கொள்கின்றார்கள். இனிமேல் யுத்தமும், அழிவுகளும் நிச்சயமாக ஏற்படாத ஒன்றாக கோசத்துடன் "சமாதானம்" பேசி முஸ்லிம் மக்களின் ஆதரவுடன் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்த இந்த அரசாங்கம் முதலில் முஸ்லிம் பிரதேசங்களுக்கான பாதுகாப்பு அரண்களை கொஞ்சம், கொஞ்சமாக அப்புறப் படுத்தியது. அதன் பின் வாழைச்சேனையில் ஏற்பட்ட தொகுதி வீடுகள் எரிப்புக்களையும் பாரிய சொத்துக்கள் சூறையாடல்களையும், உயிர்ச்சேதங்களையும் தடுத்து நிறுத்த முடியாமல் இருந்தது.

இப்போது மீண்டும் மூதூரில் இருநூறுக்கும் அதிகமான வீடுகள் சூறையாடப்பட்டு, எரிக்கப்பட்டதுடன், அங்கு உயிர் இழப்புக்கள் ஏற்பட்டுள்ள நிலையிலும் எதுவும் செய்ய முடியாத நிலையில் இருக்கின்றது. இன்றைய அரசாங்கம் பதவிக்கு ஏற பக்க வாத்தியம் வாசித்த முஸ்லிம் காங்கிரஸும் செய்வதறியாது கௌரவப் பிரச்சினையை முதன்மைப் படுத்தி இழுபறி நிலையிலிருக்கின்றது. அப்படியானால் வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகின்றது.

இன்று வடக்கு கிழக்கிலே வாழுகின்ற முஸ்லிம்கள் ஒவ்வொருவரும் கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்வி எங்களைப் பாதுகாப்பது யார்? இந்த அரசாங்கம் பதவியேற்று சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கையிலேயே நேற்று வாழைச்சேனையில் இன்று மூதூரில் இது நாளை கல்முனையிலோ அல்லது வடக்கு கிழக்கின் வேறு ஒரு முஸ்லிம் பகுதியிலோ நடைபெறாதென்பதற்கு இன்றைய அரசாங்கத்தாலோ அல்லது முஸ்லிம் காங்கிரஸாலோ உத்தரவாதமளிக்க முடியாது. ஆகவே இக்கேள்விக்கான விடையை வடக்கு கிழக்கிலே வாழுகின்ற முஸ்லிம்களாகிய நாங்களே தேட வேண்டிய நிலையில் இருந்து கொண்டிருக்கின்றோம். நமது நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டும். அது மூன்று இனங்களின் நிறைவான விருப்பங்களுடன் ஏற்பட வேண்டும். ஒரு இனத்தை... மிதித்து சாவாதிகாரத்துடன் எடுக்கப்படும் எந்தவொரு தீர்வும் நிரந்தர சமாதானமாக இருக்க முடியாது. அது நிரந்தரமான அமைதியின்மையையே தோற்றுவிக்கும்.

–எம்.எல்.எம். முஸ்தபா–
மருதமுனை

# காத்திரு மகனே!


ஓ...! என் அன்பு மகனே....!
பத்து வயதுப் பாலகன் - நீ
பள்ளிக்குப் போக வேண்டும்,
பள்ளிக்குப் போக வேண்டும்.
பல தடவை கேட்டுவிட்டாய்.

வெளிச்சமோ வெளியில் இல்லை
வீட்டிலே தொழுது கொள் மகனே!
"விரும்பவில்லை பெருமானார்,
வீட்டினிலே தொழுவதனை
வருகின்றேன் - என் தாயே!"
விடைபெற்றாய் என் உயிரே!

செல்லவில்லை சில நிமிடம்...
சீறியதே துப்பாக்கி ஓலம்...
சிதையுண்டு போனேனடா - என்
செல்லமகன் உன் நினைவால்...

கதறினேன், துடித்தேன்... உனை
காண்பதற்காய் ஓடிவந்தேன் - நான்
கண்ட காட்சியதை - என்னவென்பேன்?
மலைபோல குவிந்திருந்த
மையித்துக் கும்பலுக்குள் - உன்
மஞ்சள் நிற சட்டையைத்தான்
மடைச்சி நான் தேடி நின்றேன்.

இரத்தக் கடலுக்குள்
உருமாறிப் போயிருந்தாய்...
கண்ணோடு வாயும் திறந்திருக்க
உயிர் மட்டும் துறந்திருந்தாய்...
நீ செய்த பாவம் என்ன?
யார் தானும் சொல்லவில்லை.



மார்போடு - உனை அணைத்து,
மகிழ்ச்சியாய் நான் தந்த
அமுதெல்லாம் - உதிரமாய்
உருமாறி வடியக்கண்டேன்.
இதன் பின்னும் ஏன்தானோ
உயிரோடு இருக்கின்றேன்...?

ஓ என் செல்ல மகனே!
மரணம்தான் வாழ்க்கையின்,
முற்றுப்புள்ளியென்று - உனை
முடித்து வைத்த - மூடர்களின்
முகத்திரையை கிழித்திடுவேன்.
மரணத்தை வாழ்க்கையதன்
முகவுரையாய் மாற்றிடுவேன்.

உன்னோடு சேர்த்தே...
என் சோகத்தையும் புதைத்துவிட்டேன்.
இன்னோர் மகனை,
ஈற்றிலே ஈன்றெடுப்பேன்...
என் வேட்கை(டை)யதை,
வென்றெடுக்க - வீரனாய்
அவனை வளர்த்திடுவேன்.

அதற்காகத்தான்...
சோகத்தோடு சேர்ந்தே - உன்
சகோதரனையும்
சுமக்கத் தொடங்கிவிட்டேன்.
ஆணவப் பேய்களின்
ஆட்டம் - ஓயும் நாளில்
உன்னோடு - நானும்
உறங்கிட வருவேன்
காத்திரு மகனே...!

O

பஹ்மியா ஸரீப், காத்தான்குடி 06.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நாம் வாழும் வாழ்க்கை இந்தக் குழந்தைகளுக்குத் தெரிந்தால்.."

## ரச்சேலின் கடிதம்

நான் பலஸ்தீனத்திற்கு வந்து சரியாக இரண்டு வாரங்களும் ஒரு மணி நேரமும் ஆகிவிட்டது. ஆனால் இங்கே நான் காண்பதை உங்களுக்கு விவரிக்க, அதாவது அமெரிக்காவுக்குப் புரியவை க்க வார்த்தைகள் கிடைக்காமல் தவிக்கிறேன்.

குண்டுகளால் துளைக்கப்பட்ட வீட்டுச் சுவர்கள், கழுகுப்பார்வையால் கண்காணிக்கும் ஆக்கிரமிப்பு இராணுவம் - இவை இரண்டும் இல்லாத ஒரு வாழ்க்கையை இங்குள்ள குழந்தைகள் வாழ்ந்ததேயில்லை இருப்பினும் "வாழ்க்கை என்பது எல்லா இடங்களிலும் இந்த மாதிரி இல்லை" என்பதை இங்குள்ள சின்னஞ்சிறு பிள்ளைகள் கூட புரிந்து வைத்திரு க்கிறார்கள்.



நான் இங்கேவந்து இறங்குவதற்கு இரண்டு நாட்கள் முன் ஒரு 8 வயது சிறுவனை இஸ்ரேலிய இராணுவம் சுட் டுக் கொன்று விட்டது. "அவன் பெயர் அலி" என்று என்னிடம் கிசுகிசுக்கிறாா கள் இங்குள்ள குழந்தைகள். "ஷரோன் யாரு புஷ் யாரு" என்று அரபியில் அவர் கள் கேட்க "ஷரோன் சிறுக்கன் - புஷ் சிறுக்கன்" என்று நானும் எனக்குத் தெரிந்த அரபு மொழியில் பதில் சொல்கி றேன். அரபு மொழியை இப்படித்தான் எனக்குக் கற்றுத் தருகிறார்கள் இந்தச் சிறுவார்கள். உலக அரசியலின் அதி காரம் எப்படி இயங்குகிறது என்பதைப் பற்றி நான் முன்னர் புரிந்து வைத்திருந் ததைக் காட்டிலும் இங்கே இருக்கும் 8 வயது வாண்டுகள் தெளிவாக அறிந் திருக்கிறார்கள்.

புத்தகங்கள், கருத்தரங்குகள், விவா தங்கள், செய்திப் படங்கள் போன்ற பல வழிகளில் பலஸ்தீனத்தைப் பற்றி நான் சேகரித்த அறிவு அனைத்தையும் விஞ்சுகிறது இங்குள்ள யதார்த்தம். நேரில் பார்த்தாலொழிய நீங்கள் இதைப் புரிந்து கொள்ளவே முடியாது; ஒருவேளை நேரில் வந்து அனுபவித்தாலும் முழுமை யாகப் புரிந்து விட்டதாக நான் சொல்லிக் கொள்ள முடியாது.

என்னையே எடுத்துக் கொள்ளுங்கள். இங்குள்ள கிணறுகளை இடித்தாலும், தண்ணீர் வாங்கிக் குடிக்க என்னிடம் பணம் இருக்கிறது; நினைத்தால் நான் உடனே அமெரிக்காவுக்குத் திரும்பி விடலாம்; என் குடும்பத்தினா யாரையும் இராணுவம் ரொக்கேட் வீசிக் கொன்றதி ல்லை; எனக்கொரு வீடு இருக்கிறது; நான் ஆற அமரக் கடலைக் கண்டு ரசித்திருக்கிறேன்; பள்ளிக்கூடத்திலிரு ந்து திரும்பும் வழியில்; இராணுவத்தால் கொல்லப்படுவேனோ என்ற பயமின்றி சந்தோஷமாக நான் வீடு திரும்பியிருக்கிறேன்.

எனவேதான் இக்குழந்தைகள் வா ழும் உலகத்திற்குள் கால் வைத்த மறு கணமே, இந்தக் கொடூரங்களை கண் ணால் கண்ட மறுகணமே என் இரத்தம் கொதிக்கிறது. "ஒருவேளை ஒரு பாலஸ்தீனச் சிறுவன் அமெரிக்கா எனும் என்னுடைய உலகத்தை நேரில் வந்து பார்த்தால் அந்தப் பிஞ்சு மனம் எப்படித் துடிக்கும்" என்ற கேள்வி என்னை வாட்டுகிறது.

இவர்களைப் போலன்றி, நான் வே றொரு வாழ்க்கையை வாழ்ந்து பார்த்தி ருக்கிறேன். அமைதியான இடத்தில் வசித்திருக்கிறேன். கிணற்றை இடித்து, குடிக்கும் தண்ணீரை இராணுவம் பறித்து விடும் என்று நான் கற்பனையில் கூட அஞ்சியதில்லை. இரவு தூங்கிக் கொ ண்டிருக்கும் போது வீட்டின் சுவர்கள் உற்புறமாக இடித்துத் தள்ளப்பட்டு நான் பதறி விழித்ததில்லை; தனது சொந்தங் களை இராணுவத்திற்குக் காவு கொடு த்த யாரையும் நான் அமெரிக்காவில் சந்தித்ததில்லை. என்னுடைய வீட்டை நாற்புறமும் இராணுவக் கோபுரங்கள் கொலை வெறியுடன் குறி பார்க்கவில்லை.

ஆனால், இந்தப் பாலஸ்தீனச் சிறுவ ர்களோ நாம் வாழும் அமைதியான வாழ்க்கையையோ அறிந்ததேயில்லை. நினைத்துப் பாருங்கள். உங்கள் குழந் தைப் பருவம் முழுவதும் உயிா வாழ்வதற்காக மட்டுமே நீங்கள் போராடிக் கொண்டிருந்தால் எப்படியிருக்கும் என்று! உலக வல்லரசின் ஆதரவுடன் உலகின் நான்காவது பெரிய இராணுவம் உங்க ளையும், உங்கள் வீட்டையும் துடைத்து எறிவதற்கு மூர்க்கத்தன மாக முனைந்து கொண்டேயிருக்க அதை எதிர்த்து நீங் கள் போராடிக் கொண்டேயிருக்க... வாழ்க்கையென்பதே இதுதான் என்றால்....

அதனால்தான் எனக்கு இப்படித் தோன்றுகிறது. இந்த பலஸ்தீனக் குழந்தைகள் அமெரிக்கா என்னும் என்னுடைய உலகத்தில் உண்மையிலேயே நேரில் பார்த்தால் என்ன நினை ப்பார்கள் என்ற கேள்வி என்னை வாட் டுகிறது.

*நன்றி : ஃப்ரண்ட்லைன், 11.04.2003.*

## சுவர்க்கத்தின் சொந்தக்காரர்களாகிவிட்ட இந்த ஷுஹதாக்கள்



எந்த ஒரு போராட்டத்திலும் முதலில் பலியாவது அப்பாவிகள்தான் என்பது ஒரு பொது நியதி. ஆயினும் எந்த ஒரு போராட்டத்திலும் ஈடுபடாத நிலையிலும் எமது சமூகத்தின் ஒரு அங்கமாக இருந்தார்கள் என்பதற்காகப் பலி கொள்ளப்பட்ட எமது சகோதரர்களை இன்று நாம் கண்ணீருடனும், கனத்த நெஞ்சங்களுடன் பெருமையுடன் மீண்டும் நினைவு கூறுகின்றோம்.

சுவர்க்கத்தின் சொந்தக்காரர்களாகிவிட்ட இந்த ஷுஹதாக்கள், வரலாற்றின் வரிகளில் தங்கள் விலாசங்களைப் பொறித்துச் சென்ற இந்த வீரர்கள் செய்த தியாகத்தை, வெறும் நினைவுச் சின்னங்களாக அல்லது அவர்களது ஆன்ம ஈடேற்றத்திற்காகப் பிரார்த்தனை புரியப்பட வேண்டிய ஒரு திகதியாக மாத்திரம் நாம் இன்னும் இன்னும் கருதிக் கொண்டிருப்போமேயானால் வரலாறுகள் ஏன் எழுதப்படுகின்றன என்ற அடிப்படையைப் புரிந்து கொள்ளாத ஒரு செக்கு மாட்டுச் சமூகமாகவே காலமெல்லாம் உழன்று கொண்டிருப்போம்.

மரணங்கள் மறக்கப்படக்கூடியவை. மறக்கப்பட வேண்டியவை. ஆனால் தியாகங்கள் அப்படியல்ல மண்ணில் விழுகின்ற விதைகள் யாவும் முளைத்தே ஆகும் என்பது இல்லை. ஆனால் புதைக்கப்பட்ட, விதைக்கப்பட்ட தியாகங்கள் யாவும் இன்னும் ஒரு நூறு தியாகிகளை உருவாக்குகின்ற விருட்சங்களாக வளர்த்தெடுக்கப்பட வேண்டும். இது ஒரு சமுதாயத்தின் கட்டாயக் கடமையாகும்.

போராட்டம் என்னும் போது பகைவருடன் மோதுகின்ற ஒரு பணியாக மாத்திரம் அதை உருவகப்படுத்தி எமது இளைஞர்களின் சிந்தனைகளை, செயற்பாடுகளை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்த முடியாத ஒரு துர்ப்பாக்கிய நிலைமைக்கு நாம் ஆளாகி விடக்கூடாது. எமது சமூகத்தை ஒற்றுமை உள்ள ஒரு சமூகமாக உருவாக்க வேண்டிய உடனடி அவசியம் எமக்கு இருக்கின்றது. எமது மார்க்க அடிப்படைகளை நாம் பலப்படுத்தியாக வேண்டும். எமது கல்வியையும் பொருளாதாரத் தளங்களையும் திட்டமிட்டு வளர்த்தெடுக்க வேண்டியுள்ளது.

இவற்றை முதலில் எம்மால் செய்யக்கூடுமானால், எமது இளைஞர்கள் இவற்றிற்கு முன்னுரிமை தந்து தங்களை அர்ப்பணிப்பார்களேயானால் "எம்மால், வெல்லப்படுவதற்காக பல உலகங்கள் காத்து நிற்கின்றன".

ஏ.எல். அப்துல் ஜவாத், சட்டத்தரணி.
காத்தான்குடி.

நன்றி: கவனத்து சுஹதாக்கள்

# அமெரிக்க கருத்துச் சுதந்திரம் கிலோ என்ன விலை?

அமெரிக்காவின் மேற்கு வேர்ஜீனியா மாநிலத்தில் இருக்கும் நகரம் சார்லஸ்டன். இந்நகரைச் சேர்ந்த 15 வயது கேத்தி சியர்ரா எனும் மாணவி. ஆப்கான் மீதான அமெரிக்க ஆக்கிரமிப்பை எதிர்த்துத் தனது பள்ளியில் ஒரு சங்கம் கட்ட முயலுகிறாள். மேலும் தனது சட்டையில் "கொல்லப்படும் ஆப்கான் குழந்தைகளை தொலைக்காட்சியில் பார்க்கும் போது; நமது தேசத்தின் பாதுகாப்பு குறித்த புதிய நம்பிக்கை பிறக்கிறது. கடவுள் நம்மை ஆசீர்வதிக்கட்டும்", எனும் நெற்றியடி முழக்கத்தையும் பொறித்து பள்ளியில் பிரச்சாரம் செய்கிறாள். ஆனால் பள்ளி நிர்வாகமோ இரண்டு செயல்களையும் தடைச் செய்கிறது. தொடர்ந்து அந்தச் சட்டையை அணிந்து செல்லும் சியர்ராவை பள்ளி முதல்வர் பள்ளியை விட்டே நீக்குகிறார். இதை எதிர்த்து மாவட்டக் கல்வி நிர்வாகத்திடம் முறையீடு செய்கிறாள் சியர்ரா.

அது முதல்வரின் நடவடிக்கையை நியாயப்படுத்தி, "இத்தகையக் கருத்துக்களிடமிருந்து பள்ளியின் சூழ்நிலையைப் பாதுகாக்க வேண்டும்" என்று வலியுறுத்துகிறது. இதை எதிர்த்த மாணவி ஒவ்வொரு நீதிமன்றமாய் படையெடுக்கிறாள். நீதிதான் இன்றுவரை கிடைத்தபாடில்லை. உள்ளூர் பத்திரிகைகளோ பள்ளி நாட்கள் கல்வி கற்பதற்குதானே ஒழிய அரசியல் பிரச்சாரத்தினால் சீர்குலைப்பதற்கு அல்ல என்று உபதேசிக்கின்றனர்.

சென்ற வருடக் கதை இதுவென்றால் சென்ற நூற்றாண்டின் அமெரிக்க கருத்து சுதந்திரக் கதையும் இப்படித்தான். முதல் உலகப் போரில் அமெரிக்க உள்ளிட்ட ஏகாதிபத்தியங்களின் போரை எதிர்த்தும், சோவியத் யூனியனையும் ஆதரித்து பேசிய அமெரிக்க சோசலிஸ்டு கட்சியைச் சேர்ந்த யூஜின்டேப்ஸ் என்ற போராளிக்குக் கிடைத்த பரிசு பத்து ஆண்டு சிறைத்தண்டனை. இரண்டாம் உலகப் போரின் போது சோவியத் யூனியனை ஆதரித்த சார்லி சாப்ளினை 'கம்யூனிஸ்ட் ஆதரவாளன், என முத்திரை குத்தி தொடுக்கப்பட்ட வழக்கு மட்டும் பத்தாண்டுகள் நடைபெற்றது. இறுதியில் சாப்ளின் அமெரிக்காவை விட்டே வெளியேறினார். 1950 களில் சோவியத் நாட்டை எதிர்க்கும் அமெரிக்கப் போரை ஆதரிக்க முடியாது என்று முழங்கிய அமெரிக்காவின் மகத்தான மக்கள் கலைஞன் பால் ராப்ஷனை பத்தாண்டுகளுக்கு எந்த வேலையையும் செய்யவிடாமல் முடக்கியது அமெரிக்க அரசு.

60 களில் நடந்த வியட்நாம் போர் எதிர்ப்பு இயக்கத்தின் போதும் பலர் கொல்லப்பட்டனா; சிறையில் அடைக்கப்பட்டனர். தற்போதைய ஈராக் ஆக்கிரமிப்பை எதிர்த்து நடக்கும் போர் எதிர்ப்பு இயக்கமும் இத்தகைய அடக்கு முறைகளைச் சந்திக்காமல் இல்லை. நியூயோர்க் நகரில் சுதந்திர தேவியின் சிலையை பிரமாண்டமாக வைத்திருக்கும் அமெரிக்காவில், உண்மையில் அமெரிக்க ஏகாதிபத்திய வெறியை எதிர்க்கும் போராளிகளை அடக்குமுறைக்கு உட்படுத்துவது தான் பிரமாண்டமாக இருக்கிறது.

# போர் நிகழக் காரணம் என்ன?

1991 : ஈராக் மீதான அமெரிக்கத் தாக்குதலின் பின்னணி

வளைகுடாப் போரின் மொத்தச் செலவு
2,00,000 கோடி ரூபாய்

செலவழித்தது யார்?
வேறு யார், அமெரிக்க அரசுதான் செலவு செய்திருக்கும் என்று நீங்கள் கூறலாம்

2,00,000 கோடி ரூபாய்

↙ இதில் 25% மட்டுமே அமெரிக்க அரசின் பணம் (50,000 கோடி ரூபாய்)

↘ மிகுதி 75% செலவு அரபு நாடுகள் அதிலும் குறிப்பாக குவைத் மற்றும் சவூதி அரேபிய அரசுகளின் பணம் (1,50,000 கோடி ரூபாய்)

சரி, இவர்களுக்கு எங்கிருந்து வந்தது இந்தப் பணம்?

போருக்கு முன்னால் ஒரு பீப்பாய் எண்ணெய் விலை சுமார் ரூ. 750; போருக்குப் பின், அது சுமார் ரூ. 2100 ஆக உயர்ந்தது; இந்த விலை உயர்வினால் கிடைத்த கூடுதல் லாபம் 3,00,000 கோடி ரூபாய்.

இந்த லாபம் யாருக்குப் போனது?

அரபு நாடுகளில் "பாதிக்குப் பாதி" பங்கு போடும் சட்டம்தான் நடைமுறை; 50% அரசுக்கு; 50% பன்னாட்டுக் கம்பனிகளுக்கு - அவற்றின் பிடியில்தான் எண்ணெய் வளம் இருக்கிறது. இப்போது புரிகிறதா, போர் செய்யப் பணம் எங்கிருந்தது வருகிறது?

எண்ணெய் விலை ஏற்றத்தின் மூலம் கூடுதல் லாபம்

3,00,000 கோடி ரூபாய்

↙ 1,50,000 கோடி ரூபாய் பன்னாட்டு எண்ணெய்க் கம்பனிகளுக்கு

↘ மிகுதி 1,50,000 கோடி ரூபாய் அரபு அரசுகளுக்கு (குவைத் + சவூதி அரேபியா)

எண்ணெய்க் கம்பனிகள் யாருக்குச் சொந்தம்?
வளைகுடாவில், எண்ணெய் எடுப்பதும் விற்பதும் ஷெல், எஸ்ஸோ, டேம் ஆயில் போன்ற பன்னாட்டு நிறுவனங்களின் பிடியில்... அவை அத்தனையும் மெரிக்கக் கம்பனிகள்; அதில் 5 அமெரிக்க அரசின் கையில்.

1,50,000 கோடி ரூபாய்

↙ சுமார் 1,05,000 கோடி ரூபாய் அமெரிக்க அரசுக்கு

↘ சுமார் 45,000 கோடி ரூபாய் அமெரிக்க ஏகபோக முதலாளிகளுக்கு

## ஒரு சின்னக் கணக்கு போட்டுப் பார்க்கலாமா?

| | போர்ச் செலவுகள் | எண்ணெய் விலை ஏற்றத்தால் கிடைத்த லாபம் | லாபமா, நட்டமா? |
|---|---|---|---|
| அரபு நாடுகள் | 1,50,000 கோடி ரூபாய் | 1,50,000 கோடி ரூபாய் | ஏதுமில்லை |
| அமெரிக்க அரசாங்கம் | 50,000 கோடி ரூபாய் | 1,05,000 கோடி ரூபாய் | 55,000 கோடி ரூபாய் |
| அமெரிக்க ஏகபோக முதலாளிகள் | ஏதுமில்லை | 55,000 கோடி ரூபாய் | 45,000 கோடி ரூபாய் |

இப்போது எல்லாம் தெளிவாகி விட்டது. போரின் மூலமாக அமெரிக்கா பார்த்த லாபம் 1,00,000 கோடி ரூபாய்! சில ஆயிரம் பிணங்கள் விழுந்ததில் பல கோடிப் பணம். "குவைத்தை விடுதலை செய்வோம்!" என்று சொன்னதெல்லாம் சும்மா! அவர்கள் நாக்கைத் தொங்கப் போட்டு அலைந்ததெல்லாம் இந்தத் "தெனுக்காக'த்தான்!

விசயம் இத்தோடு முடியவில்லை 1991 வளைகுடாப் போரின் செலவு யாருடைய சட்டைப் பையிலிருந்து போனது?

வேறு யார்?
பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய் உபயோகிப்பவர்களின் பையிலிருந்துதான்

இன்னுமா புரியவில்லை, போருக்குப் பணம் கொடுத்தது நாம் தான்!!!

பொறுங்கள்...
இன்னமும் விசயம் முடியவில்லை
போருக்காகச் செலவழித்த ரூ. 2,00,000

கோடி எங்கே போய்ச் சேர்ந்தது?
↓
ஆயுதத் தளவாடத் தொழிலுக்கு! அத்தனையும் அமெரிக்க நிறுவனங்களே!
ஆகவே...

| | | |
|---|---|---|
| 1991 | வளைகுடாப் போர் | குவைத் விடுதலைக்காக அல்ல. |
| 2002 | ஆப்கான் போர் | பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காகவல்ல |
| 2003 | ஈராக் போர் | அம்மக்களின் சுதந்திரத்திற்காக அல்ல. |

இதுதான் உண்மை
போரின் பின்னணி புரியாத பாமரர்களுக்கு இந்த உண்மையைச் சொல்லுங்கள்.
அறியாமை நம்மை அடிமைகளாக்கும்;
சிந்திப்பவர்கள்தான் போராட இயலும்.

சிந்தியுங்கள்; போராடுங்கள்!
*நன்றி : எம்ர்ஜென்சி இணையதளம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களின் ஏக பிரதிநிதியல்ல :மு.கா. தலைவர் ஹக்கீம்

## ஏறச்சொன்னால் எருதுக்குக் கோபம் எழும்பச் சொன்னால் முடவனுக்குக் கோபம்

*இடைக்கால சபை தொடர்பாக புலிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஆவணம் நோர்வேயின் ஆலோசனையுடன் திருத்தங்கள் செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அரசாங்கத்தால் சொல்லப்படுகிறது. அரசாங்கம் ஏற்கனவே எங்களுக்குத் தந்த ஆவணத்தில் ஏதாவது திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமானால் எங்களையும் கவனத்தில் கொண்டிருக்க வேண்டும்.*

*இந்த விடயம் தொடர்பாக எனது கருத்தினை இவ்விடத்தில் கூற நான் விரும்பவில்லை. நிலைமையைப் பொறுத்து நாங்கள் தக்க நடவடிக்கை எடுப்போம். ஆனாலும், இதனால் இரண்டு கட்சிகளுக்கிடையிலான கௌரவம், மரியாதை, நம்பிக்கை பாதிக்கப்படக் கூடும். இவ்வாறு கடந்த ஞாயிறன்று (27 ஜுலை) சன்டே லீடர் பத்திரிகைக்கு வழங்கியுள்ள பேட்டியில் ஹக்கீம் கூறியுள்ளார்.*

*சமகால அரசியலில் சூழலைக் கருத்திற் கொண்டு அப்பேட்டியின் முக்கியமான பகுதிகளை நமது வாசகர்களுக்கு சுருக்கித் தருகிறோம்*



**அரசாங்கத் தரப்பின் சமாதான தூதுக்குழுவின் தலைவரும் அமைச்சருமான ஜீ.எல்.பீரிஸின் கருத்தின்படி நோர்வேயின் விஷேட தூதுவர் ஊடாக எல்.ரி.ரி.ஈக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள பிரேரணை எல்.ரி.ரி.ஈயினால் சில திருத்தங்களுடன் ஏற்றுக் கொள்ளப்படுமென நம்பிக்கை தெரிவித்துள்ளார். இது பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?**

முஸ்லிம் காங்கிரஸ் தலைவரான என்னுடைய கருத்தின்படி - அரசாங்கம் அவசரப்பட்டு இவ் ஆவணத்தை அனுப்பி வைத்தது எல்.ரி.ரி.ஈயை மீளவும் பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டு வரவேண்டும் என்ற காரணத்தினாலாகும். அரசாங்கம் எங்களை கைவிடாது என்ற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது. இந்த விடயம் தொடர்பாக அரசாங்கம் எங்களுடன் கலந்தாலோசிக்க விரும்பியிருந்தால் நாங்களும் எங்கள் கருத்தினை முன் வைத்திருப்போம்.

எல்.ரி.ரி.ஈ அரசாங்கத்தை வலியுறுத்துவது அரசாங்கத்தின் அபிப்பிராயங்களை வெளியுலகுக்கு வெளிப்படுத்துவதற்கே. அதே சமயம் எல்.ரி.ரி.ஈயும் அவர்களுடைய அபிப்பிராயங்களை எங்களுடன் வெளிப்படுத்த முன் வரவேண்டும். ஏனெனில் நாங்கள் முஸ்லிம்களின் பிரதிநிதியாக இருக்கிறோம். இதன் மூலம் எங்களுக்குள் ஒரு நல்ல புரிந்துணர்வுக்கு வரமுடியும். நாங்கள் இப்போது பேச்சுவார்த்தையின் முக்கிய கட்டத்திற்கு வந்துள்ளோம். ஆகவே, அடுத்த பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்கள் தனிக்குழுவாக பங்குபற்ற வேண்டும்.

**அரசாங்கம் இப்பிரேரணையை எல்.ரி.ரி.ஈக்கு அனுப்புவதற்கு முன் உங்களுடன் கலந்துரையாடியதா?**

நான் எத்தனையோ முறை பிரதமரைச் சந்தித்து இது பற்றி பேசியுள்ளேன். அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், சட்டமா அதிபர், அமைச்சர் மிலிந்த மொரகொடவுடனும் பலமுறை பேசியுள்ளேன். இக்கலந்துரையாடல்களில் லண்டன் தூதுவராக உள்ள பாயிஸ் முஸ்தபாவும் என்னுடன் கலந்து கொண்டார்.

**நீங்கள் நினைக்கிறீர்களா முஸ்லிம்கள் இப்பிரேரணையிலுள்ள விடயங்களை ஏற்றுக் கொள்வார்களென?**

அரசாங்கம் ஏதோ ஒரு வகையில் கட்டாயமான நிலையில் இருந்தது. எங்களுடைய பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக அவைகளை இவ் ஆவணத்தில் உள்ளடக்கவிருப்பதாகச் சொல்லப்படுகிறது. நான் இதுபற்றிய பூரண விளக்கத்தை கேட்டுள்ளேன். கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளிவந்த பத்திரிகை செய்திகளின் படி எங்களுக்கு பலத்த சந்தேகங்கள் எழுந்துள்ளன.

**எதன் அடிப்படையில் முஸ்லிம்கள் அரசாங்கம் சமர்ப்பித்துள்ள இப்பிரேரணையை நிராகரிப்பது?**

நாங்கள் அரசாங்கம் முன்வைத்துள்ள இப்பிரேரணையில் எங்களை சம்பந்தப்படுத்திக் கொள்ளத் தேவையில்லை. ஏனெனில் இதுபற்றி எங்களுடன் கலந்தாலோசிக்கவில்லை. நாங்கள் கூறுவது என்னவென்றால் ஒரு கட்சி என்ற வகையில் எங்களுக்கு முழு உரிமையுண்டு. சமாதானப் பேச்சுவார்த்தையில் தனிக்குழுவாக கலந்து கொள்வதற்கு, அத்துடன் பேச்சுவார்த்தையின் போது எங்கள் சொந்தப் பிரேரணையை சமர்ப்பிப்பதற்கும் எமக்கு முழு உரித்துள்ளது. அரசாங்கக் குழுவும், நானும் இவ்விடயமாக இறுதி வரைபு தொடர்பாக ஒரு முடிவுக்கு வரும் போது அரசாங்கம் இதனை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஆனாலும், கடந்த ஞாயிற்றுக் கிழமை பத்திரிகையில் வெளியான எல்.ரி.ரி.ஈக்கு அனுப்பப்பட்ட ஆவணத்தின் சில மாற்றங்கள் இருந்தன. இது நாங்கள் ஏற்றுக் கொண்ட ஆவணத்திற்கு மாற்றமானது. என்னுடைய அனுமதியைப் பெறாமல் நோர்வேக்கு எமமோடு இணைங்கிக் கொண்ட ஆவணத்தில் மாற்றங்களைச் செய்ய அரசாங்கம் அனுமதியளித்திருந்தால் அது சுமுக உறவை கெடுக்கும் செயலாகும். இதனால்தான் நான் முடிவெடுத்துள்ளேன் இது பற்றிய விளக்கத்தை அரசாங்கத்திடம் கோருவது என.

**சமாதானத்திற்கான எம்பிக்கள் ஒன்றியம் என்ற பெயரில் எம்.எச். முகம்மத் தலைமையில் பாராளுமன்றத்தில் உள்ள அனைத்து எம்பிக்களையும் இணைத்து உருவாக்கப்பட்டுள்ளது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இலங்கை முஸ்லிம்களின் ஏகோபித்த பிரதிநிதி அல்ல என அவர்கள் சொல்கிறார்கள். இதனை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா?**

நாங்கள் எப்போதும், எந்தத் தறுவாயிலும் நாங்கள்தான் ஏக பிரதிநிதிகள் என்று சொல்லவில்லை. ஆனால், கடந்த நான்கு தேர்தல்களில் வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் மத்தியில் பெரும் ஆதரவைப் பெற்ற கட்சி மு.கா.தான். ஒரு வித்தியாசம் என்னவென்றால் இக் கட்சியின் தலைவர் பாராளுமன்றத்தில் கண்டி மாவட்டத்தின் பிரதிநிதியாக இருக்கிறார். இது சந்தோசப்பட வேண்டிய ஒரு விடயம். ஏனெனில், வடக்கு கிழக்கு முஸ்லிம் மக்கள் குறுகிய மனம் படைத்தவர்கள் அல்ல. எனக்குப் புரியவிலலை ஏனிந்தக் குற்றச்சாட்டு வருகின்றதென்று. நானொரு பாசிஸ்ட்டுமல்ல.

முஸ்லிம் குரல் சுவடு 16
01-ஆகஸ்ட் 2003 Muslim Kural صوت المسلم முஸ்லிம் குரல் 03 ஜமாதுல் ஆகிர் - 1424
143, Muhandhiram Road, Colombo - 03. Tel: 0777-389127, Fax: 01-665831, E-mail: mm-s@eol.lk

## முஸ்லிம்கள் மீதான படுகொலை நினைவு : "இழப்புக்களிலிருந்து படிப்பினை பெறுவதே இழப்புக்களைத் தடுக்கவல்லது"

வடக்கு கிழக்கிலுள்ள அனைத்து முஸ்லிம்களும் தம் அரசியல் எதிர்காலம் குறித்து எக்கணமும் தீவிரமாக சிந்தித்து செயலாற்ற வேண்டியதை மெய்ப்பிப்பதற்காகவே காத்தான்குடி, ஏறாவூர், அழிஞ்சிப்பொத்தானை மற்றும் அனைத்து முஸ்லிம் பிரதேசங்களிலும் ஷுஹதாக்கள் தம்முயிரை அர்ப்பணித்தனர்.

காத்தான்குடியில் இரு பள்ளிவாசல்களினுள் 103 முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டு பதின்மூன்று வருடங்களாகிவிட்டன. ஏறாவூரில் இரு கிராமங்கள் அழிக்கப்பட்டு 13 வருடங்களாகிவிட்டன. அன்று வடக்கு கிழக்கு அனைத்து முஸ்லிம் பிரதேசங்களிலும் புலிகளின் கொலைக்கரம் முஸ்லிம்களின் வாழ்வை முற்று கையிட்டிருந்தது. முஸ்லிம்களின் மீது புலிகள் மேற்கொண்டிருந்த படுகொலைகளில் உயிர்நீத்த நமது ஷுஹதாக்களின் குருதியுடன் இலங்கை முஸ்லிம்களின் கண்ணீரும் இன்று கலந்து கொண்டிருக்கிறது.

இப்படுகொலைகளைக் கண்டிக்கும் பலகுரல்கள் மனித சமுதாயத்திலிருந்து எழுப்பப்பட்டு வந்திருக்கின்றன. முஸ்லிம்களாகிய நாம் இப்படுகொலைகளைக் கண்டித்து, இப்படுகொலைகள் நடந்த துயரமிக்க நாட்களை நினைவு கூர்வதுடன் நமது கடமை முடிந்து விட்டதாய் வாளாவிருக்க முடியாது.

இப்படுகொலைகளுக்கு பின்னுள்ள அரசியல் இன்னும் வடக்கு கிழக்கில் தொடர்கின்றது. வடக்கு கிழக்கிலுள்ள அனைத்து முஸ்லிம்களும் தம் அரசியல் எதிர்காலம் குறித்து தீவிரமாக சிந்தித்துச் செயலாற்ற வேண்டியுள்ளதை மெய்ப்பிப்பதற்காகவே ஷுஹதாக்கள் தம் உயிர்களை அர்ப்பணித்தனர். அன்று தொடர்ந்த சூழலால் அக்கரைப்பற்று, அட்டளைச்சேனை, கல்முனை, பொத்துவில், ஓட்டமாவடி, வாழைச்சேனை என பல்வேறு ஊர்களில் இன்னும் பலர் தம் உயிர்களை ஈர்த்தனர். இவ் அர்ப்பணிப்புகளின் பெறுமானத்தை நாம் நமது சமூக அரங்கில் கடந்த காலத்தில் உணராமல் விட்டுள்ளோம் என்பது மிகவும் துயரம் தருவதாக உள்ளது.

நமது சூழலில் நமது அரசியல் சமூகக் கடமைகளை நாம் சரிவரச் செய்துள்ளோமா என்ற கேள்வியை முதலில் எழுப்ப வேண்டியவர்களாக உள்ளோம். நமது மக்களின் பெயரால் நிகழ்ந்த அம் மரணங்களின் மீது கட்டியெழுப்பப்பட்டு முன்னெடுத்திருக்கப்பட வேண்டிய சமூகப் போராட்டக் கடமைகளை நாம் தொடர்ச்சியாக ஆற்றவில்லை. வெறும் பாராளுமன்றக் கதிரைகளைப் பிடிப்பதற்காகவே அவ்வுன்னத தியாகத்தை தொடர்ந்தும் நமது அரசியல் தலைமைகள் கொச்சைப்படுத்தி வருகின்றன. மக்களாகிய நாமும் வெறுமனே நினைவு கூர்ந்து கண்ணீர் விட்டு நிற்பதுடன் நமது கடமை முடிந்து விட்டது என நினைப்பது ஒருபோதுமே அவ்வுன்னத தியாகத்திற்கு மாற்றீடாக முடியாது. இழப்புக்களிலிருந்து பாடங் கற்றுக் கொள்வதே தொடரும் இழப்புக்களை தடுக்க வல்லது என்பதை நாம் உணர்தல் வேண்டும்.

"செய்ய வேண்டியதை சரியாகச் செய்யுங்கள்" என்ற அந்த ஷுஹதாக்களின் தியாகம் ஒவ்வொரு வருடமும் நம்மை முன்னோக்கி வந்து கொண்டேயிருக்கும். அவ்விழப்புக்களின் நினைவுகள் நமது உள்ளங்களை அரித்தெடுத்துக் கொண்டிருக்கிறது. இந்த நாட்களில் நமது அரசியல் எதிர்காலத்தையும், வாழ்வியல் இருப்பையும் உறுதிப்படுத்திக் கொள்ள அனைவரும் முன்வரல் வேண்டும். ஷுஹதாக்களின் பெயரால் நாம் இந்த உறுதி மொழியை எடுத்துக் கொள்வோம்.

"மறுபுறம் பழையன மறந்து புதியன படைப்போம்" என்று வெறும் பேச்சுக்களிற் கூறப்படுகிறது. பழையன ஏன் நடந்தது. இனிமேல் இவ்வாறான நிகழ்வுகள் இடம்பெறாது என்பதற்கு என்ன உத்தரவாதம்? இக்கேள்விகள் நமது மக்களுக்குள் தொடர்ந்தும் உயிர்ப்பிக்கப்படுகிறது. மிக அண்மைய நிகழ்வுகளான மூதூர் வாழைச்சேனை சம்பவங்கள் இந்தக் கேள்விகளை மேலும் மேலும் நமது மக்கள் எழுப்ப வலுவான சான்றுகளாகின்றன.

இக்கேள்விகளை கேள்விகளாகவே நாம் விட்டுவிடாமல் நமக்குள் ஆழமாக விவாதிக்க வேண்டியுள்ளது. விடைகளைக் கண்டடைய வேண்டியுள்ளது. பொதுக் கருத்துக்களின் அடிப்படையில் நாம் ஒன்றுதிரள வேண்டியுள்ளது. நிரந்தர சமாதான சமத்துவ வாழ்விற்கான அரசியல் தீர்வை நோக்கி முன்செல்ல வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் இணைந்து செயலுக்கு வாருங்கள் என அழைக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. நாம் உடனடியாக இக்கடமைகளை நிறைவேற்ற முன்வரல் வேண்டும்.

90களில் நிகழ்ந்த இப்படுகொலைகளின் நினைவாக அனைத்து முஸ்லிம்களும் ஒன்றிணைந்த ஒரு தினத்தைப் பிரகடனப்படுத்தி நமது சமூக அரங்கைப் பலப்படுத்த உறுதி பூணுவோமாக.

அல்லாஹ் மிகப் பெரியவன்...

– பிரதம ஆசிரியர் –



## இனி இந்த நிலை ஏற்படாது!

தென் தமிழீழத்தில் நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்ட நிலையும் மக்கள் வாழ்விடங்களிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட நிலையும் இனிமேல் ஏற்படாது. இதற்கு தென் தமிழீழத்தில் ஆயிரமாயிரம் போராளிகளுடன் ஏற்படுத்தப்பட்டுள்ள படையணிகள் எமக்குச் சான்றுபகர்கின்றன.

**சு.ப. தமிழ்ச் செல்வன், மட்டக்களப்பிலிருந்து.**

## ஆளப்பட்ட மக்களின் வரலாறு எழுதப்பட வேண்டும்!

இலங்கையில் இன முரண்பாடு என்பது சரித்திரவியலாளர்களால் கட்டமைக்கப்பட்ட ஒன்று. சிங்கள மக்களின் சரித்திரம் என்பது துட்டகைமுனு, மாயாதுன்ன, பராக்கிரமபாகு போன்ற சிங்கள மன்னர்களின் வரலாறே. இதற்கு மாற்றாக தமிழர்களின் வரலாறு எனக் கூறப்பட்டது. சங்கிலியன், பண்டாரவன்னியன் போன்ற மன்னர்களின் வரலாறே. முஸ்லிம்களின் வரலாறு என்பதும் பெரிய குடிகள், மரைக்காயர்களின் வரலாறேயாகும்.

இங்கு ஆண்ட பரம்பரையின் வரலாறு எழுதப்பட்டுள்ளதே தவிர, ஆளப்பட்ட மக்களின் வரலாறு எழுதப்படவில்லை. இத்தகைய பகை உணர்ச்சியும் ஆக்கிரமிப்பு மிக்க மன்னர்களின் வரலாற்றைப் படிக்கும் மாணவர்களின் மனதில் பகையுணர்ச்சி வளர்ந்து பின்னர் இனவாதமாக வெடிக்கிறது.

**பேராசிரியர் சி. மௌனகுரு.**



## ஜீ. எல்.பீரிசும் ஒரு பாம்பாட்டிதானா?

இலங்கையைப் பொறுத்தவரை சமஷ்டி அமைப்பு ஒரு மாயப் பாம்புதானா? என நாம் சிந்திக்க வேண்டியுள்ளது. உங்களுக்கு ஆறுதல் அளிக்கக் கூடிய விசயம் என்னவெனில் பாம்பாட்டிகளுக்கு இங்கு பஞ்சமில்லை என்பதுதான். அதேவேளை போலிப்பாம்பாட்டிகளும் இங்கு பெருகி வருகிறார்கள்.

**அரசியல் அமைப்பு நிபுணர் எச்.எல்.டி. சில்வா.**

முஸ்லிம் குரலுக்கு
நாட்டின் நாலாதிசையிலிருந்தும்
செய்தியாளர்கள்
விற்பனை முகவர்கள்
வேண்டப்படுகின்றனர்
10 ஆகஸ்ட் 2003க்கு முன்
பூரண விபரத்துடன்
தொடர்பு கொள்ளவும்

இப்பத்திரிகை 143, முகாந்திரம் வீதி, ... வெளியிடப்படுகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org